# சைவநெறி வினாவிடை

## ஆண்டு 11

**இந்நூல்**

11 ஆண்டுச் சைவநெறி வினாவிடையின் தொடர்ச்சியாக, க. பொ. த. (சாதாரணதரம்) பரீட்சைக்குச் சைவசமய பாடத்தைக் கற்கும் மாணவரை உளங்கொண்டு எழுதப்பட்ட வினாவிடை நூல். இறுதியில் "மாதிரி வினாத்தாள்" சேர்க்கப்பட்டுள்ளது.

ஆக்கம்:
வாணி சொக்கலிங்கம்



பதிப்பாளர்
ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை
235, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

பதிப்புரிமை]

[விலை ரூபா 10-00

உ
சிவமயம்

# சைவநெறி வினாவிடை

## ஆண்டு 11

**10ஆம் ஆண்டு சைவநெறி-வினாவிடையின் தொடர்ச்சியாக க. பொ. த. (சாதாரணம்) பரீட்சைக்குச் சைவசமய பாடத்தைக் கற்கும் மாணவரை உளங்கொண்டு எழுதப்பட்ட வினாவிடை நூல். இறுதியில் மாதிரி வினாத்தாள் சேர்க்கப்பட்டுள்ளது.**

[1985ஆம் ஆண்டுப் பாடத்திட்டத்திற்கு அமைவாகத் திருத்தியமைக்கப்பட்டது]

ஆக்கம் :
வாணி சொக்கலிங்கம்



பதிப்பாளர் :
ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை
235, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

பதிப்புரிமை]

[விலை ரூபா 10-00

திருத்திய பதிப்பு: 1986

[இது பதிப்புரிமையுடைய பயிற்சி நூல்: இதனை எவரும் பகுதியாக வேனும் முழுமையாகவேனும் பிரசுரித்தலாகாது]

அச்சுப்பதிப்பு:
ஸ்ரீ சுப்பிரமணிய அச்சகம்
63, B. A. தம்பி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

பதிப்பாளர்:
ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை
235, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

# பதினொராம் ஆண்டு

## வினாக்கள்

### பகுதி — ஒன்று

பொருத்தமான விடையினைத் தெரிந்து அதன் கீழ்க்கோடிடுக:

1 ஈழத்தில் நிலவிய சைவசமயத்தின் பழைமையினை அறிந்துகொள்ள உதவும் சான்றுகள்,
(அ) தலபுராணங்கள், செவிவழிக்கதைகள்.
(ஆ) தொல்பொருள்கள், கல்வெட்டுக்கள்.
(இ) பிறநாட்டு யாத்திரிகரின் குறிப்புக்கள், இராமாயணம்.
(ஈ) சிவாலயங்கள், வரலாற்று நூல்கள்.

2 வரலாற்று நூல்களிலும் கல்வெட்டுக்களிலும் காணப்படும் சிவனோடு தொடர்புடைய பெயர்கள்,
(அ) விசயன், எல்லாளன் (ஆ) தீசன், நிசங்கமல்லன்
(இ) மூத்தசிவன், சிவன் (ஈ) இராவணன், கும்பகர்ணன்;

3. ஈழத்தின் வடமத்தியில் அமைந்துள்ள சிவாலயம்,
(அ) தான்தோன்றியீச்சரம் (ஆ) முன்னேச்சரம்
(இ) திருக்கோணச்சரம் (ஈ) திருக்கேதீச்சரம்

4. கந்தபுராணம் முதலான புராணங்களை ஆலயங்களிலே படித்துப் பயன்சொல்லும் முறைமையைக் குறிக்கும் சொற்றொடர்,
(அ) கதாப்பிரசங்கம் (ஆ) இன்னிசைப் பிரசங்கம்
(இ) கூட்டுப்பிரார்த்தனை (ஈ) புராணபடனம்.

5. எமது சமயத்துக்கு வழிகாட்டிய சைவப்பெரியார் இருவர்,
(அ) முத்துக்குமாரகவிராயர், சேனாதிராய முதலியார்
(ஆ) ஞானப்பிரகாசமுனிவர், ஆறுமுகநாவலர்
(இ) சின்னத்தம்பிப்புலவர், சிவானந்தையர்
(ஈ) சேர். பொன் இராமநாதன், நீர்வேலிச் சங்கரபண்டிதர்.

6. கிராமியக் கடவுளர் வரிசையில் இடம்பெறும் பெண் தெய்வங்கள் இருவர்,
(அ) மண்டோதரி, திரௌபதி (ஆ) மாரியம்மன், மனோன்மணியம்மன்
(இ) கண்ணகி, சீதையம்மன் (ஈ) இராசராசேஸ்வரி, பேய்ச்சி.

7. திருக்கேதீச்சரத்தைத் 'தேன்பொந்து' என்று வருணித்தவர்,
(அ) யோகர்சுவாமிகள் (ஆ) சைவப்பெரியார் சிவபாதசுந்தரனார்
(இ) ஆறுமுகநாவலர் (ஈ) பசுபதிச்செட்டியார்.

8. 'பண்டு நால்வருக்கு அறமுரைத்தருளி' எனத் திருஞானசம்பந்தப் பெருமானாற் குறிக்கப்படுவோர்,

(அ) அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர்

(ஆ) சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர்

(இ) நந்திதேவர், சனற்குமாரர், சத்தியஞானதரிசினிகள், பரஞ்சோதிமுனிவர்

(ஈ) மெய்கண்டதேவர், அருணந்திசிவாசாரியார், மறைஞானசம்பந்தர், உமாபதிசிவாசாரியார்.

9. சோழர்கால ஆட்சியின்போது திருக்கேதீச்சரத்திற்கு வழங்கிய பெயர்,

(அ) திருப்பெருந்துறை  (ஆ) வானவன்மாதேவியீச்சரம்

(இ) சந்திரசேகராலயம்  (ஈ) ராஜராஜேஸ்வர மகாதேவன்கோயில்.

10. 'நிரைகழலரவம் சிலம்பொலியலம்பும் நிமலர்' என்ற திருக்கோணேச்சரப் பதிகத்திருப்பாடலடியாற் குறிக்கப்படும் மூர்த்தியின் திருவடிவம்,

(அ) சோமாஸ்கந்தர்  (ஆ) அர்த்தநாரீச்சுரர்

(இ) சந்திரசேகரர்  (ஈ) உமாமகேசுவரர்

11. திருக்கோணேச்சரநாதரின் பெருமைகளை ஏத்திப்பாடும் ஒரு புராணம்,

(அ) தட்சிணகைலாசபுராணம்  (ஆ) திருக்கரசைப் புராணம்

(இ) சிவராத்திரிபுராணம்  (ஈ) ஈழத்துச்சிதம்பரபுராணம்.

12. திருக்கோணச்சரத்தைப் புனரமைப்புச் செய்தவன்,

(அ) சுந்தரபாண்டியன்  (ஆ) குளக்கோட்டன்

(இ) இராசராசன்  (ஈ) செண்பகப்பெருமாள்.

13. அளகேச்சரம் என்றபெயராற் போற்றப்படும் ஈழத்துச் சிவாலயம்,

(அ) திருக்கேதீச்சரம்  (ஆ) நகுலேச்சரம்

(இ) முன்னேச்சரம்  (ஈ) திருக்கோணேச்சரம்.

14. முன்னேச்சரத்திற் காணப்படும் சிறப்பு,

(அ) நவராத்திரி காலத்தில் நிகழும் சங்குபூசை

(ஆ) நாள்தோறும் நடைபெறும் ஆறுகாலப்பூசை

(இ) பிறசமயமக்களும் வந்து வழிபடல்

(ஈ) நாதஸ்வர மேளதாளங்களுடன் தம்பட்ட ஒலியும் எழுப்பப்படல்.

15. தீர்த்தத் திருவிழாவோடு பிதிர்க்கடன் செலுத்தும் பெருநாளும் ஒருங்கு நிகழும் திருத்தலம்.

(அ) சந்திரசேகரச்சரம்  (ஆ) வண்ணை வைத்தீஸ்வரன் கோயில்

(இ) நகுலேச்சரம்  (ஈ) மாவிட்டபுரக்கந்தசுவாமி கோயில்.

16. தானேதோன்றி நிலைபெறும் சுயம்புலிங்கம் அமைந்த திருத்தலம்.

(அ) திருக்கேதீச்சரம்  (ஆ) முன்னேச்சரம்

(இ) ஒட்டுசுட்டான் தான்தோன்றியீச்சரம்  (ஈ) திருக்கோணேச்சரம்

17. கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றியீஸ்வரர் கோயிலின் முக்கிய பெருமை,
(அ) மட்டக்களப்புப் பகுதியிலுள்ள ஒரே சிவன்கோயில் என்பது
(ஆ) திருப்படைக் கோயில் எனச் சிறப்பிக்கப்படல்
(இ) சங்கரமரபினரான சைவக்குருக்கள் மரபினர் பூசகராயிருத்தல்
(ஈ) மூன்றுவேளைப் பூசை தினமும் தவறாது நடைபெறல்.

18. 'தனந்தரும் கல்விதரும்' என்று தொடங்கி அம்பாளின் கடைக்கண் பெருமையைப் பாடிய சத்தி அடியார்,
(அ) குமரகுருபரசுவாமிகள் (ஆ) சுப்பிரமணியபாரதி
(இ) அபிராமிப்பட்டர் (ஈ) சோமசுந்தரப்புலவர்.

19. அறுபத்துநான்கு சத்திபீடங்களுள் ஒன்றாக ஈழத்தில் விளங்குவது.
(அ) மாத்தளை முத்துமாரியம்மன் கோயில் (ஆ) நயினை நாகபூஷணியம்மன்கோயில்
(இ) காரைதீவுக்கோயில் (ஈ) கந்பிட்டி நாச்சியம்மன் கோயில்

20. யாழ்ப்பாணத்தைத் தமிழரசர்கள் ஆண்ட காலத்திலிருந்து சிறப்புப் பெற்று விளங்கும் அம்பாள் கோயில்,
(அ) திருக்கோணமலை நரகாம்பாள்கோயில் (ஆ) தெல்லிப்பழைத் துர்க்காதேவி ஆலயம்
(இ) நல்லூர் வீரமாகாளியம்மன்கோயில் (ஈ) நயினை நாகபூஷணியம்மன் கோயில்.

21. ஔவையார் நான்குவகையான உணவினை விநாயகப்பெருமானுக்குக் கொடுத்து அவரிடம் வேண்டும் முப்பொருள்கள்,
(அ) அறம், பொருள், இன்பம் (ஆ) மண், விண், பொன்
(இ) இசைத்தமிழ், இயற்றமிழ், நாடகத்தமிழ் (ஈ) வீரம், கல்வி, செல்வம்.

22. நல்லூரில் இலங்கும் வெயிலுகந்தபிள்ளையார் ஆலயத்தைக் கட்டியவர்,
(அ) அரசகேசரி (ஆ) செகராசசேகரன்
(இ) கூழங்கையாரியன் (ஈ) பரராசசேகரன்

23. அமிர்தகழியில் எழுந்தருளியுள்ள விநாயகரின் திருநாமம்,
(அ) மாமாங்கப்பிள்ளையார் (ஆ) சித்திவிநாயகர்
(இ) கற்பகவிநாயகர் (ஈ) சிந்தாமணிப்பிள்ளையார்

24. 'பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பு' உலகுய்யக் கொண்டருளிய மூர்த்தம்,
(அ) ஆறுமுகங்களும் பன்னிருகரங்களும் உள்ள ஆறுமுகசாமி.
(ஆ) பழனியாண்டித் திருக்கோலம்
(இ) குழந்தைவடிவேலன் (ஈ) முத்துக்குமாரசுவாமி

25. கதிர்காமம் உற்சவத்தையொட்டிக் கொழும்பில் நடைபெறும் பெருவிழா,
(அ) கதிரேசன் மகோற்சவம் (ஆ) ஆடிவேல்விழா
(இ) கதிரேசன் இரதோற்சவம் (ஈ) கந்தசுவாமி திருவிதியுலா

26. கதிர்காமத்தில் நடைபெறுவதுபோல மௌன பூசை நடைபெறும் ஈழத்தின் வேறு இரு முருகாலயங்கள்,

(அ) மாவிட்டபுரம், நல்லூர் (ஆ) மண்டூர், செல்வச்சந்நிதி

(இ) குமாரபுரம், திருக்கரசை (ஈ) செல்லக்கதிர்காமம், திருக்கோயில்

27. நல்லூர்க் கந்தசுவாமி கோயிலை முதன்முதல் தாபித்தவர்,

(அ) புவனேகபாகு (ஆ) டொன் யுவான் இரகுநாதமாப்பாண முதலியார்

(இ) செகராசசேகரன் (ஈ) சபுமால் குமரையா

28. மகோற்சவத்தின் ஐந்தாம் நாளில் சண்முகப் பெருமானின் திருநடனம் இடம்பெறும் திருத்தலம்.

(அ) செல்வச்சந்நிதி (ஆ) கந்தவனக்கடவை

(இ) நல்லூர் (ஈ) மாவிட்டபுரம்.

29. குமாரபுரம் முருகன் ஆலயம் அமைந்துள்ள மாவட்டம்,

(அ) வவுனியா (ஆ) கிளிநொச்சி

(இ) முல்லைத்தீவு (ஈ) பரந்தன்

30. தொண்டரடிப் பொடியாழ்வார் இந்திரலோக ஆளுகையினையும் வேண்டாமைக்குக் காரணம்,

(அ) இந்திரலோக இன்பம் நிலையில்லாதது.

(ஆ) அங்கு இந்திரர்களிடையே பதவிப்போட்டி என்றும் உண்டு

(இ) திருவரங்கத்துப் பெருமானின் திருக்கோலக் காட்சியைக் கண்களிலே சுவைக்கும் இன்பத்தினை இழக்க விரும்பாமை.

(ஈ) அரங்கமாநகருளான் முத்தியின்பத்தை அருளுவான் என்ற உறுதியான நம்பிக்கை.

31. "அறம் அழிந்து மறம் ஓங்குகையில் அவ்வப்போது நான் என்னை விளக்குகின்றேன். நல்லோரைக் காக்கவும், அல்லோரை அழிக்கவும், அறத்தை நிலைநாட்டவும் நான் யுகம்தோறும் தோன்றுகின்றேன்" இவ்வாறு திருவாய் மலர்ந்தருளியவர்,

(அ) சிவபெருமான் (ஆ) ஸ்ரீ கிருஷ்ணபகவான்

(இ) முருகப்பெருமான் (ஈ) உமாதேவியார்.

32. ஈழத்தின் தொன்மையான இரு விஷ்ணு ஆலயங்கள்,

(அ) பொன்னாலை, வல்லிபுரம் (ஆ) வண்ணார்பண்ணை, திருக்கோணமலை

(இ) தெய்வேந்துறை, காங்கேசன்துறை (ஈ) மட்டக்களப்பு, குருநாகல்

33. அந்நியராட்சியால் சைவநெறி இன்னலடைந்தபொழுது இல்லங்கள் தோறும் நடந்த வழிபாடு,

(அ) வேல் வழிபாடு (ஆ) சூலவழிபாடு

(இ) விநாயகர் வழிபாடு (ஈ) முருகவழிபாடு

34. அறுவகைச் சமயம் என்ற வழக்கினைத் தமிழிலே தோற்றுவித்தவர்,

(அ) ஆதிசங்கரர் (ஆ) திருமூலர்

(இ) திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் (ஈ) மெய்கண்டதேவர்

35. 'மலையை நோக்கிக் குரைக்கும் நாய்க்கு ஒப்பாவர்' என்று திருமூலரால் பழிக்கப்பட்டவர்கள்,

(அ) "எல்லாச் சமயங்களும் முத்திக்கு வழிகாட்டுவன" என்பவர்கள்.

(ஆ) ஒரு சமயத்தையும் நம்பாதவர்கள்.

(இ) சைவசமயத்தை நிந்திப்பவர்கள்.

(ஈ) 'இந்தச் சமயம் நல்ல சமயம், அந்தச் சமயம் தீயசமயம்' எனக் கூறிக்கொள்பவர்கள்.

36. சிவசத்தியே ஆறுவகைச் சமயங்களையும் ஆக்கியருளினாள்' என்று பாடியருளியவர்,

(அ) அபிராமிப்பட்டர் (ஆ) அருணகிரிநாதர்

(இ) தாயுமானவர் (ஈ) கச்சியப்பசிவாச்சாரியார்.

37. ஆதிசங்கரர் நிறுவிய கோட்பாடு,

(அ) ஆன்மாக்கள் பல என்னும் அத்துவித சித்தாந்தக் கோட்பாடு,

(ஆ) ஏகான்மவாதம் என்னும் அத்துவித வேதாந்தக் கோட்பாடு.

(இ) ஈசுவரன் வேறு ஆன்மாக்கள் வேறு என்னும் துவிதக் கோட்பாடு.

(ஈ) பிரமம், உயிர், ஆன்மாக்கள், உடல் என்னும் விசிட்டாதுவிதக் கோட்பாடு.

38. சைவத்துக்கு ஆதாரமான வடமொழி நூல்கள்,

(அ) புராணங்கள், இதிகாசங்கள்

(ஆ) வேதத்தின் ஞானகாண்டம், சிவாகமங்கள்

(இ) வேதத்தின் பிராமணங்கள், சங்கிதைகள்.

(ஈ) தருமசாத்திரங்கள், காவியங்கள்.

39. பாகவதசமயம் மூதற்கடவுளாகக் கொள்ளும் கடவுள்,

(அ) பிரமா (ஆ) இந்திரன் (இ) விஷ்ணு (ஈ) வருணன்

40. சத்தி சிவனிலிருந்து பிரியாதது என்பதைக் காட்ட வகுக்கப்பட்ட உருவம்,

(அ) அர்த்தநாரீச்சுரமூர்த்தம் (ஆ) சோமாஸ்கந்தமூர்த்தம்

(இ) நடராசமூர்த்தம் (ஈ) உமாமகேசுவரமூர்த்தம்

41. வக்ரதுண்டர் என்ற திருநாமத்தின் பொருள்

(அ) தந்தமாகிய துண்டைக் கொண்டவர்.

(ஆ) வக்ரன் என்ற அசுரனைத் துண்டித்தவர்.

(இ) மாயையைத் துண்டிப்பவர்.

(ஈ) அறிவைத் தூண்டுபவர்.

42. கந்தசுவாமியின் மூர்த்தங்களை எடுத்துக்கூறும் ஆகமம்,

(அ) பாஞ்சராத்திரம் (ஆ) தந்திரம் (இ) வைகானசம் (ஈ) குமாரதந்திரம்

43. 'உமையைப் பாகத்தில் கொண்ட சிவபெருமான் தம்மை எவர் எவ்வுருவில் வழிபடுகின்றனரோ அவ்வுருவில் அவருக்குத் தோன்றி அருள் புரிவார்' என்று கடவுள் இயல்பைக் கூறும் நூல்,

(அ) சிவஞான போதம் (ஆ) திருவருட்பயன் (இ) சிவப்பிரகாசம் (ஈ) சிவஞானசித்தியார்

44. புராணங்களில் விஷ்ணுவுக்கும் உமாதேவியாருக்கும் கூறப்படும் உறவு,

(அ) தந்தை மகள் உறவு (ஆ) அண்ணன் தங்கை உறவு

(இ) மாமன் மருகி உறவு (ஈ) தமக்கை தம்பி உறவு.

45. அப்போலோ என்ற பெயரில் சூரியனை வணங்கிய சாதியார்,

(அ) சீனர் (ஆ) எகிப்தியர் (இ) தென்னமெரிக்கர் (ஈ) கிரேக்கர்

46. "தேரடியில் தேசிகனைக் கண்டு தெரிசித்தேன்" என்று யோகர் சுவாமிகள் குறித்திடும் ஞானி,

(அ) கடையிற்சுவாமிகள் (ஆ) அருளம்பலச் சுவாமிகள்

(இ) செல்லப்பாச் சுவாமிகள் (ஈ) குழந்தைவேற் சுவாமிகள்

47. தமிழ்நாட்டிற் சிறந்து விளங்கிய ஞானிகளிலே பெரியபுராணத்தில் இடம்பெறுபவர்,

(அ) திருமூலர் (ஆ) பட்டினத்தார்

(இ) குதம்பைச்சித்தர் (ஈ) சிவவாக்கியர்

48. "பெரியகடை நாதன்" அணிந்த உடை,

(அ) வெள்ளைவர்ணச் சீலை, வெண்கொக்கனைய சால்வை

(ஆ) காவிநிறச் சீலை, கவிஞர்ந்த சால்வை.

(இ) கரிய வர்ணச் சீலை, கரித்தோலெனச் சால்வை.

(ஈ) கார் நிறத்துச் சீலை, கரியவர்ணச் சால்வை.

49. யோகநாதரின் (யோகர்சுவாமிகளின்) மகாவாக்கியங்கள் இரண்டு,

(அ) "நாம் யாவும் அறிவோம்", "இறைவன் நம்மை அறிவான்"

(ஆ) "எல்லாம் அவன் செயல்" "நாம் அவன் கருவிகள்"

(இ) "உன்னை நீ அறி" "இறைவன் உன்னை அறிவான்"

(ஈ) "முழுதும் உண்மை" 'நாம் அறியோம்'

50. நாவலரின் சீடர் பரம்பரையிற் கல்வி பயின்ற ஞானி,

(அ) செல்லப்பாச் சுவாமிகள் (ஆ) கனகரத்தினசுவாமிகள்

(இ) யோகர்சுவாமிகள் (ஈ) மகாதேவசுவாமிகள்

51. ஞானகுருவின் புகழை அளப்பது.

(அ) கடற்கரை மணலை எண்ணிக் கணக்கிடுவது போன்றது.

(ஆ) ஞாயிற்றைச் சங்கிலியால் அளப்பது போன்றது.

(இ) வானத்து விண்மீன்களை எண்ணிக் கணக்கிடுவது போன்றது.

(ஈ) நரிவால் கொண்டு கடலாழம் பார்ப்பது போன்றது.

52. இலக்கியச் செல்வங்களிலே சைவமக்களின் சமயவாழ்வுக்கு இருகண்கள் போல விளங்கும் இரு புராணங்கள்,

(அ) தட்சிணகைலாய புராணம், திருக்கேதீச்சரபுராணம்

(ஆ) திருவிளையாடற் புராணம், கோயிற்புராணம்

(இ) ஈழத்துச்சிதம்பரபுராணம், நகுலமலைப்புராணம்

(ஈ) பெரியபுராணம், கந்தபுராணம்

53. பெரியபுராணத்தின் கதாநாயகர் என்று கொள்ளத்தக்கவர்,
(அ) திருநாவுக்கரசு நாயனார் (ஆ) திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்
(இ) கண்ணப்பநாயனார் (ஈ) சுந்தரமூர்த்தி நாயனார்.

54. சுந்தரமூர்த்தி நாயனாரைத் தடுத்தாட்கொள்ளச் சிவபெருமான் கொண்டருளிய திருவேடம்,
(அ) இளமை கனிந்த எழில்நிறை மறையவர் வடிவம்
(ஆ) மன்னவர் திருவும் வைதிகத்திருவும் பொலியும் வடிவம்
(இ) மொய்த்துவளர் பேரழகு மூத்தவடிவம்
(ஈ) இளைத்துக் களைத்து முதிர்ந்த கிழவடிவம்.

55. 'என் அடியான் இந்நாவல் நகரூரான் என்று இறைவன் திருவாய் மலர்ந்தருளக் காரணம்,
(அ) இல்லறத்தில் ஆழ்ந்து சுந்தரர் தம்மை மறந்து விடுவார் என்று இறைவன் திருவுள்ளத்திற் கருதியமை.
(ஆ) இறைவன் எப்பொழுதும் அடியார்க்கு எளியவர் என்பது.
(இ) திருக்கைலாயத்திலே ஆலாலசுந்தரராய் வன்றொண்டர் விளங்கியகாலத்தில் சிவபெருமான் "யாம் நீ திருமணம் செய்யப் புகுங்காலத்தில் உன்னைத் தடுத்தாட்கொண்டருள்வோம்" என்று வாக்குறுதியளித்தமை.
(ஈ) இவ்வாறு அடியார்களைச் சோதித்தருளல் இறைவனின் திருவிளையாடல்களில் ஒன்று.

56. "நமக்கு அர்ச்சனை பாட்டேயாகும், ஆதலால் நம்மீது சொற்றமிழ் பாடு" என்று சிவபெருமான் பணித்தருளிய சந்தர்ப்பம்,
(அ) வழக்காடு மன்றத்தில் சுந்தரமூர்த்திநாயனார் "யான் நும் அடிமை அல்லேன்" என்று வல்வழக்காடியபோது சிவபெருமான் இவ்வாறு உரைத்தருளினார்,
(ஆ) திருவெண்ணெய் நல்லூருக்குச் சுந்தரமூர்த்திநாயனாரைத் தம் அடியாராய் அழைத்துச் சென்ற காலத்தில் இவ்வாறு கூறியருளினார்.
(இ) "யான் உம் அடிமை என்பதை நிரூபியும்" என்று சுந்தரமூர்த்திநாயனார் கேட்டபொழுது சிவபெருமான் இவ்வாறு பதிலிறுத்தருளினார்.
(ஈ) நம்பியாரூரர் தமது அகக்கண் திறக்கப்பெற்றுத் தம்முன்னால் திருவெண்ணெய் நல்லூரர்த் திருக்கோயிலில் மறைந்தருளிய இறைவனை நினைந்து கனிந்துருகியபொழுது சிவபெருமான் மேற்கண்டவாறு கூறியருளினார்.

57. சுந்தரமூர்த்திநாயனார் இறைவனைப் 'பித்தன்' என்று கூறியதன் பொருத்தப்பாடு,
(அ) சிவபெருமான் வெள்ளெருக்க மாலை அணிந்து நீறுபூசிச் சுடலையில் ஆடுகின்றவர்.
(ஆ) இறைவன் செய்தருளும் செயல்கள் யாவும் மக்கள் நோக்கிலே பித்துத்தன்மையுடையனவாகவே தோன்றுகின்றன.
(இ) 'பெற்றமனம் பித்து பிள்ளை மனம் கல்லு' என்றாற்போல எப்பொழுதும் தாயினும் நல்லவரான இறைவன், தமது பேரருளுடைமை காரணமாக அடியார்மீது அன்புப் பித்துக் கொண்டவராயுள்ளார்.
(ஈ) என்பு மாலை அணிந்து, பாம்புகளை அணிகளாய்த் தரித்துப், புலித்தோலாடை புனைந்து யானைத்தோல் போர்த்து, மண்டையோட்டில் பிச்சை ஏற்றுத் திரிபவர் பித்தராகவே இருப்பர்.

58. ''கோலமா மஞ்ஞை தன்னிற் குலவிய குமரன் தன்னை'ச் சூரபன்மன் பாலனாய்க் கருதிய காரணம்,

(அ) முருகன் சூரபன்மன் முன்பு பாலனாய்த் தோன்றியமை;

(ஆ) சூரபன்மனின் ஆணவமாகிய அறியாமை அவனது அகக்கண்களை மறைத்தமை.

(இ) சூரபன்மன் வீரன் என்பதால் தன் பகைவனை முருகப்பெருமானைச் சிறுவன் என அலட்சியங் காரணமாய் நினைத்தமை.

(ஈ) சூரபன்மனின் வயது முதிர்ச்சியால் ஏற்பட்ட கண்மயக்கம்.

59. முருகப்பெருமானின் திருமுன்னர்ச் சூரபன்மன் கொண்ட வேடங்கள்,

(அ) கதிரவன் முன்பு இருள்போல மறைந்தொழிந்தன;

(ஆ) மழைமேகத்தினிடைத் தோன்றும் மின்னலையொத்துக் கணத்தில் மறைந்தொழிந்தன.

(இ) நீரிலே தோன்றும் குமிழிகளாய் மறைந்தொழிந்தன.

(ஈ) மழைக்காலத்து வானவில்லாய்ச் சில கணம் கோலம் காட்டி மறைந்தன.

60. முருகப்பெருமான் திருப்பெருவடிவம் கொண்டருளியபோது அவரின் திருமேனியிலே அமைந்து காட்சி தந்தவை,

(அ) சீர், இளமை, அழகு, பெருமை, மணமுடைமை, தெய்வத்தன்மை.

(ஆ) குரைகடல், உலகம், திக்கு, புவனம், அண்டம், தேவர், மற்றும் உயிர்கள்;

(இ) வேல், வாள், வில், குலிசம், தண்டம், மழு, அம்பறுத்தூணி.

(ஈ) சிவன்முதலான கடவுளர், தேவர்கள், மனிதர்கள், மலை, ஆறு.

61. சூரபன்மன் முருகப்பெருமானை வணங்கவும் அவருக்கு அடிமையாகவும் விரும்பியும் அதைச் செய்ய அவன் மனம் இசையாமைக்குக் காரணம்,

(அ) கோப உணர்வு (ஆ) மான உணர்வு

(இ) வெறுப்புணர்வு (ஈ) இரக்க உணர்வு

62. தீயவை புரிந்தாரேனும் குமரவேள் திருமுன் உற்றால் அவர்களுக்கு உண்டாகும் நன்மைகள்,

(அ) பெரிய செல்வம், அதிகாரம்.

(ஆ) தூய்மையடைந்து முத்திப்பேற்றை உறுதல்,

(இ) இம்மை மறுமை இன்பங்கள்.

(ஈ) உலகத்தவர் மெச்சும் பேரறிவு, பெரும்புகழ்

63. 'பேணலால் எம்மைப் பெற்றார்', என்பது இறைவன் திருமொழியாகச் சேக்கிழார் காட்டும் அடியவர் இலக்கணம். பேணல் என்பதன் பொருள்,

(அ) தமது உடலைப் பேணிக்காத்தல்.

(ஆ) தம்மைப்போன்ற அடியார்களுக்கு உண்டியும் உறையுளும் அளித்துக் காத்தல்.

(இ) அன்போடு கணவன் மனைவியாயிருந்து இல்லறம் நடத்தல்.

(ஈ) இறைவனின் திருவடிகளை வணங்கி அவர்தம் அடியார்களைப் போற்றி என்றும் இறை நினைவையே தமது உள்ளங்களில் காத்து வாழ்தல்.

64. திருத்தொண்டத் தொகையின் வழிநூல்,

(அ) திருத்தொண்டர் திருவந்தாதி (ஆ) பெரியபுராணம்

(இ) சேக்கிழார் புராணம் (ஈ) திருவிளையாடற் புராணம்

65. சிவனடியார்களின் குறிக்கோள்,

(அ) கோயில் கட்டுதல், கும்பாபிடேகம் செய்தல்.

(ஆ) பூசை புரிதல், விரதம் அநுட்டித்தல்.

(இ) பிரசங்கம் செய்தல், திருவிழாச் செய்தல்.

(ஈ) நிறைந்த அன்போடு இறைவனைக் கும்பிடுதல் அன்றி வீடுபேற்றையும் வேண்டாத மன உறுதி பெறல்.

66. 'அவனுடைய செயல் எல்லாம் நமக்கு இனிய என்று இறைவனலே பாராட்டப்பட்ட நாயனர்,

(அ) இயற்பகைநாயனர் (ஆ) கண்ணப்பநாயனர்

(இ) சுந்தரமூர்த்திநாயனர் (ஈ) பூசலார் நாயனர்

67. கல்லால் அருச்சித்துக் கடவுளருள் பெற்றவர்,

(அ) அரிவாட்டாய நாயனர் (ஆ) திருக்குறிப்புத் தொண்ட நாயனர்

(இ) சாக்கிய நாயனர் (ஈ) சண்டேசுரநாயனர்

68. அன்பின் வலிவும் துணிவும் பெற ஒருவர் அடையவேண்டுவது,

(அ) ஆலய வழிபாட்டில் ஈடுபாடு (ஆ) நேர்த்திக்கடன்களை நிறைவேற்றும் மனவிருப்பம்

(இ) இறைவனின் திருவருள் (ஈ) இடைவிடாத முயற்சித்திறன்.

69. திருக்கைலாய ஞான பரம்பரையின் முதற்குரவர்,

(அ) தட்சிணமூர்த்தி (ஆ) திருநந்திதேவர்

(இ) சனற்குமாரர் (ஈ) பரஞ்சோதி முனிவர்

70. மெய்கண்டதேவர், அருணந்தி சிவாசாரியரின் ஆணவத்தைப் போக்கியருளியவகை.

(அ) அவர்மீது தமது திருக்கடைக் கண்சாத்தி நயனதீட்சைமூலம் போக்கியருளினர்.

(ஆ) "ஆணவத்தின் வடிவம் எவ்வாறிருக்கும்?" என்று கேட்ட அருணந்தி சிவாச்சாரியருக்கு அவரையே சுட்டிக்காட்டி உணர்த்தியருளினர்.

(இ) அவருக்கு ஞானநூல்களை உபதேசித்து ஆணவத்தைப் போக்கியருளினர்.

(ஈ) அவரைத் தமது திருக்கரத்தினற் பரிசித்துப் பரிசதீட்சை மூலம் உண்மையை உணர்த்தி ஆணவத்தைப் போக்கியருளினர்.

71. 'சித்தாந்த அட்டகம்' எனப்படுவன,

(அ) திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர் தொடக்கம் மாணிக்கவாசகசுவாமிகள் வரையுள்ள நால்வரும் இயற்றியருளிய எட்டுத்திருமுறைகள்.

(ஆ) யோகமார்க்கத்திலே கூறப்படும் ஆசனம், பிராணயாமம், பிரத்யாகாரம் முதலாகிய எண்வகை யோகமுறைகள்.

(இ) இறைவனின் அருவம், உருவம் ஆகிய இரண்டினுள்ளும் அடங்கிய எட்டு வகைத் திருமேனிகள்.

(ஈ) உமாபதிசிவாசாரியார் இயற்றியருளிய திருவருட்பயன், சிவப்பிரகாசம், சங்கற்பநிராகரணம் முதலிய மெய்கண்ட சாத்திர நூல்கள் எட்டு.

72. திருக்கைலாச பரம்பரைச் சந்தானகுரவர்கள் வரிசையிலே இறுதியில் அமைந்தவர்,

(அ) பரஞ்சோதிமுனிவர் (ஆ) சனற்குமாரமுனிவர்

(இ) உமாபதிசிவாசாரியார் (ஈ) மறைஞானசம்பந்த சிவாசாரியார்

73. 'இருடிகளை அறிவர்' என்ற பெயராலே அழைக்கக் காரணம்,

(அ) அவர்கள் தமது கல்வியினலே எல்லாவற்றையும் அறிந்தவர் என்பது,

(ஆ) அறியவேண்டாதவற்றை அறியாதும் அறியவேண்டியவற்றை அறிந்துங் கொண்டவர் என்பது.

(இ) தவஞ்செய்து யோகநெறியைக் கடைப்பிடித்து அதன்பயனக ஞானம் கைவரப் பெற்றவர் என்பது,

(ஈ) முன்செய்த நல்வினைப் பயனலே அறிவாளர் என்று போற்றப்படுவர் என்பது.

74. 'சத்திநிபாதர்' என்பதன் பொருள்,

(அ) திருவருட்சத்தி தம்மிலே பதியப்பெற்றவர் (ஆ) சத்தியை வழிபடுபவர்

(இ) திருவருட்சத்திக்கு இனியவர் (ஈ) சத்தியை விடுத்துச் சிவத்தையே வழிபடுவோர்.

75. 'அநாதி அமலன் தரும் நூல்கள் இரண்டு' அவையாவன,

(அ) தேவார திருவாசகங்கள் (ஆ) புராணேதிகாசங்கள்

(இ) வேதாகமங்கள் (ஈ) ஞானகாண்டம், கன்மகாண்டம்.

76. 'பொல்லார் என்று விநாயகப்பெருமானை மெய்கண்டதேவர் தமது சிவஞான போதக்காப்பிலே குறிப்பிடுகின்றுர். இதன் காரணம்,

(அ) பொல்லாதவர்க்கு விநாயகர் பொல்லாதவர்.

(ஆ) விக்கினங்களுக்கு ஈசுவரராதலால் அவர் பொல்லாதவர்.

(இ) பொள்ளாது (செதுக்காது) தாமே சுயம்புவாகத் தோன்றியவர் அவர்.

(ஈ) பழிப்பதுபோலப் புகழும் வகையிலே நல்லாரைப் பொல்லாரெனக் குறிக்கும் மரபு ஒன்று தமிழில் உண்டு.

77. சித்தாந்த சாத்திரங்களை 'மெய்கண்ட சாத்திரம்' என்பதற்குக் காரணம்,

(அ) உண்மைப்பொருளை உணர்த்துவதால் அப்பெயர் அமைந்தது.

(ஆ) சித்தாந்தக் கோட்பாட்டை முதலிலே முழுமையாக உருவாக்கியவர் மெய்கண்ட சிவாசாரியாராதலால் அவர் பெயரால் வழங்குகின்றன.

(இ) சைவசித்தாந்த சாத்திரங்கள் யாவும் உடலின் (மெய்) பெருமையைக் கண்டோரால் இயற்றப்பட்டனவாதலால் அப்பெயர் வந்தது.

(ஈ) 'சித்தாந்தம்' என்ற சொல்லின் பொருளே 'மெய்காணல்' என்பதால் அப்பெயர் வந்தது.

78. திருக்குறளிலே இறைவனை அணைந்தோரது இயல்பு கூறப்படும் அதிகாரம்,

(அ) கடவுள் வாழ்த்து (ஆ) வான்சிறப்பு

(இ) நீத்தார் பெருமை (ஈ) அறன்வலியுறுத்தல்

79. 'தாளை வணங்காத்தலை' என்ற திருக்குறள் அடியிலே குறிப்பாகப் பெறக்கூடிய சைவசித்தாந்தக் கருத்து,

(அ) ஆன்மாக்கள் பாதங்களாகவும் இறைவன் தலையாகவும் இருக்கிறன்.

(ஆ) தாளாலே ஆலயத்திற்கு நடந்துசென்று இறைவனைத் தலையாலே வணங்கல் வேண்டும்.

(இ) இறைவனின் தாளை வணங்காத தலையாலே பயன் இல்லை.

(ஈ) தாடலை என்ற சொல் சேர்ந்திருக்கையில் ஒரு சொல்லாகவும், பிரித்தால் தாள்+தலை என இரு சொற்களாகவும் விளங்குவதுபோல இறைவனும் உயிர்களும் ஒன்று போலவும் இரண்டுபோலவும் நிற்கும் அத்துவிதநிலை.

80, 'கடவுளை வணங்காத கல்வியாலே பயனில்லை' என்பதை விளக்கும் மிகப்பொருத்தமான சொற்றொடர்,

(அ) 'கற்றாரை யான் வேண்டேன்'

(ஆ) 'கற்ற கல்வியிலும் இனியான்'

(இ) 'யாம் ஓதிய கல்வியும் எம் அறிவும் தாமே (சண்முகன்) தந்தன'

(ஈ) 'கற்பனவும் இனி அமையும்'

81. இறைவனைப் பற்றற்றான் என்று கூறுவதன் பொருத்தம்,

(அ) இறைவன் இயல்பாகவே பாசத்தின் நீங்கியவன்.

(ஆ) ஆன்மாக்களே அவனைப் பற்றல் வேண்டும். அவனுக்கு ஆன்மாவைப் பற்றுவதிற் பயன் இல்லை.

(இ) இறைவன் தாயும் இலி, தந்தை இலி.

(ஈ) இறைவனுக்குச் சகல சீவராசிகளும் பிள்ளைகளாதலால் அவன் ஒருவரிலும் தனித்த பற்று உள்ளவனல்லன்.

82. கடவுள் என்ற மெய்ப்பொருளை அறிய நீங்கவேண்டியது,

(அ) உயிர்களிடத்தே பற்று வைத்தலாகிய அறியாமை.

(ஆ) பிறப்பு என்னும் பேதைமை.

(இ) நான் என்ற அகப்பற்றாகிய அறியாமை.

(ஈ) எனது என்ற புறப்பற்றாகிய அறியாமை.

83. சைவசமயத்திற்கு ஆதாரமாயிருப்பதாகத் திருமூலர் குறிப்பது,

(அ) அறிவுடைமை (ஆ) ஆற்றலுடைமை

(இ) அன்புடைமை (ஈ) புலாலுண்ணாமை

84. பசுக்களாகிய உயிர்கள் பதியைச் சார்ந்து நின்றால்,

(அ) நரகத்தை அடையா (ஆ) துன்பத்தை அடையா

(இ) பாசம் உயிரைச் சாராது (ஈ) வினைகளைச் சாரமாட்டா.

85. 'உடம்பை வளர்க்கும் உபாயம்' எனத் திருமூலர் கூறுவது,

(அ) சத்துள்ள உணவை உண்பது (ஆ) அறவழியில் நடப்பது

(இ) உடம்பைத் தூய்மையாக்கி உயிரைக் காத்தல்

(ஈ) உடம்பை உயிருக்குக் கருவியாக்கி அதைக் கடவுள் வழிபாட்டிற் செலுத்தல்.

86. சீவன் சிவனாவதற்குத் திருமூலர் கூறும் வழி,

(அ) சீவன் உடலைத் துறத்தல். (ஆ) சீவன் சிவனை அறிதல்

(இ) சீவன் சிவனோடு உறவாடல் (ஈ) உலக வாழ்விலே பற்றை அறுத்தல்.

87. சிவஞானபோதத்தில் அநாதியான முப்பொருள்களைக் கூறும் இயல்,

(அ) பிரமாண இயல் (ஆ) சாதன இயல்

(இ) இலக்கண இயல் (ஈ) பயன் இயல்

88. வேதாந்தக் கொள்கைகள் தோன்ற அடிப்படையாய் இருந்த முறை,

(அ) பிரமம் ஒன்றே, 'இரண்டு அல்லாதது' (அத்துவிதியம்) என்பதில் 'இரண்டு அல்லாதது' என்பதற்குப் பொருள் கொண்ட முறை.

(ஆ) 'இயற்கையே இறைவன்' என்று கொண்டு இயற்கையை வழிபட்ட முறை.

(இ) பிரமம் ஒன்று பலவா, என ஆராய்வதில் பலவேறு வழிகளைக் கடைப்பிடித்தமுறை.

(ஈ) பத்திமார்க்கத்தை விடுத்து ஞானமார்க்கத்தை முதன்மையாக்கி ஆராய்ந்தமுறை.

89. 'சுத்தாத்துவிதம்' என்ற சைவசித்தாந்தக் கோட்பாடு உணர்த்துவது,

(அ) சிவனும் சீவனும் இறுதியில் இரண்டற்று ஒன்றேயாகின்றன என்னும் உண்மை.

(ஆ) சிவனும் சீவனும் எக்காலத்தும் தனித்தனியாய் வேறாகவே நிற்கின்றன என்னும் உண்மை.

(இ) முத்திநிலையிலே மலமுனைப்பு நீங்கிய ஆன்மா சிவனோடு ஒன்றெனவோ இரண்டெனவோ கூற இயலாதவாறு இரண்டற்றதும் ஒன்றற்றதுமான நிலையிலே கலக்கின்றது என்னும் உண்மை.

(ஈ) சிவனிலே சீவன் கலந்து தான் என்னும் தன்மையை முற்றாக இழந்துவிடுகின்றது என்னும் உண்மை.

90. சிவஞானசித்தியாரிலே 'பரபக்கம்' என்ற பிரிவிற் கூறப்படுவது,

(அ) பரமாகிய சிவனின் பல்வேறு இயல்புகளின் விளக்கம்.

(ஆ) புறச்சமயவாதிகளாகிய பதினன்கு பிரிவினரதும் கோட்பாடுகளை எடுத்துரைத்து அவற்றை அளவை முறையால் மறுத்தல்.

(இ) சைவசித்தாந்த அடிப்படைக் கோட்பாடுகளை அளவை முறைப்படி நிறுவல்.

(ஈ) சைவசித்தாந்தக் கோட்பாடுகளை மறுப்பவரைக் கண்டித்து அவர்களுக்கு அறிவுரை பகரல்.

91. சிவபெருமான் உயிர்களோடு நிற்கும் மூன்று நிலைகள்,

(அ) கலப்பு நிலையில் ஒன்றாகிப் பொருள் நிலையில் வேறாகி உயிர்களைச் செலுத்தும் வகையில் உடனாகி நிற்றல்

(ஆ) உயிர்களை என்றும் நீங்காது அவற்றோடு கூடி நிற்பினும் மலத்தினாலே கட்டுண்ணாமை.

(இ) தெய்வமாக, குருவாக, வழிகாட்டியாக.

(ஈ) அப்பனாய், அம்மையாய், ஒப்புடைய மாமனாய்.

92. "உள்ளது இல்லது ஆகாது, இல்லது உள்ளது ஆகாது, உள்ளதிலிருந்தே உள்ளது தோன்றும் உள்ளதிலிருந்து இல்லது தோன்றாது" என்னும் வாதம்,

(அ) மாயவாதம் (ஆ) ஏகான்மவாதம்

(இ) சற்காரியவாதம் (ஈ) சித்தாந்தவாதம்

93. பதி, பசு, பாசம் என்ற முப்பொருள்களுள்ளே அறிவிக்க அறிவதாயும், சார்ந்ததன் வண்ணமாயும் உள்ள பொருள்,

(அ) ஆணவம் (ஆ) உலகம் (இ) பசு (ஈ) மாயை

94. இயற்றியவன் ஒருவன் உளன் என்று சித்தாந்த நூல்கள் அறுதியிட்டுக் கூறக் காரணமாய் அமைந்தது,

(அ) இயற்றியவனின் சாயலிலே உலகுயிர்கள் அமைந்திருத்தல்.

(ஆ) பிள்ளைகள் பிறக்கத் தாய் தந்தையர் தேவை. அதுபோல உலகில்உயிர்கள் தோன்ற ஒருவன் தேவை.

(இ) இயற்றியவன் உள்ளவரையே இயற்றப்பட்டனவும் உளவாகும்.

(ஈ) ஒருவன், ஒருத்தி, ஒன்று என்று உலகம் முத்திறப்பட்டுத் தோன்றி நின்று அழிவதால் அதை இயற்றியவன் ஒருவன் உளன்.

95. கடவுளின் சிறப்பிலக்கணமாகிய சொரூபலக்கணத்தால் நாம் அறிந்து கொள்வது,

(அ) ஒருநாமம், ஒருருவம், ஒரு குணம் என்ற ஒன்றும் இல்லாத கற்பனை கடந்த நிலை.

(ஆ) அருவம், உருவம், அருவுருவமாகிய மூவகைத் திருமேனிகளோடு விளங்கும் நிலை.

(இ) ஆலயங்களிலே பல மூர்த்தங்களாக எழுந்தருளி விளங்கும் நிலை.

(ஈ) குருவடிவில் வந்து அருள் புரியும் உன்னத நிலை.

96. 'எத்திறம் நின்றான் ஈசன் அத்திறம் அவளும் நிற்பள்' என்ற சிவஞானசித்தியார் கூற்றின் பொருள்,

(அ) தடத்தநிலையில் பரமசிவன் ஆணாகவும் அவனது சத்தி பராசத்தி என்னும் பெயர் தாங்கிப் பெண்ணாகவும் பிரியாநிலையில் நிற்பர்.

(ஆ) கற்புத்திறங் காரணமாகச் சிவன் கொள்ளும் வடிவையே தானும் தாங்கிப் பராசத்தி அவனிற் பாதியாய் நிற்பாள்.

(இ) ஈசனாகிய சிவன் நிற்கும் இடங்களிலெல்லாம் சத்தியும் பின்னமற்றுக் கூடி நிற்பாள்

(ஈ) சிவனின் இயல்புகள் யாவற்றையும் பராசத்தியும் பெற்று அவனுக்குச் சமமான நிலையில் நிற்பாள்.

97. 'இறைவன் படைத்தலாகிய தொழிலைப் 'புரிகிறான்' என்பது சைவசித்தாந்தக் கோட்பாடு. அவன் படைப்பன,

(அ) ஆன்மாக்கள், ஆணவம், கன்மம், மாயை

(ஆ) தநு, கரண, புவன, போகங்கள்.

(இ) உலகம், போகப்பொருட்கள், நல்வினைகள், தீவினைகள்.

(ஈ) ஐம்பொறிகள், ஐம்புலன்கள், ஐம்பூதங்கள், புலநுகர்ச்சிகள்.

98. 'படைப்புக்கு நிமித்த காரணனே இறைவன்' இதன் விளக்கம்,

(அ) இறைவன் தானே முன்வந்து யாவற்றையும் படைக்கிறான்.

(ஆ) இறைவன் ஏவுதற்கருத்தாவாய் நின்று சுத்தமாயையின் மூலம் உயிருக்கு வேண்டியவற்றை ஆக்குவிக்கிறான்.

(இ) சுத்தமாயைக்குப் படைப்பில் உதவியாளனாய்ச் செயல் புரிகிறான்.

(ஈ) இறைவனின் சன்னிதி மாத்திரையில் சுத்தமாயை படைப்புத் தொழிலை நிகழ்த்த அருள் புரிகிறான்.

99. எல்லா உயிர்களிலும் அன்பாயிருக்க வேண்டியது இன்றியமையாதது ஏனெனில்,

(அ) எல்லா உயிர்களும் சமமானவை.

(ஆ) எல்லா உயிர்களிலும் சிவன் நீங்காது உறைந்தருள்கின்றான்.

(இ) உயிர்களின் இயல்பே அன்பாயிருப்பதே

(ஈ) உயிர்களிடத்தில் அன்பாயிருக்காவிடிற் சிவனின் கோபத்திற்கு ஆளாகநேரும்.

100. நல்வினை தீவினை ஆகிய இருவினைகளும் பிறவிக்கும் காரணமானவை. எனவே அவற்றை நாம்,

(அ) வெறுத்துத் தள்ளுதல் வேண்டும்.

(ஆ) இரண்டினையும் செய்யாது சும்மா இருத்தல் வேண்டும்.

(இ) இருவினைகளும் ஒப்பானவை எனக்கொண்டு அவற்றிலே பற்றுவைக்காது "எல்லாம் இறைவன் செயல், நாம் அவன் கருவிகள்" எனக்கருதிச் செயல்புரிதல் வேண்டும்.

(ஈ) நல்வினை, தீவினை இரண்டினையும் சமமாகச் செய்தல் வேண்டும்.

101. 'கலை ஞானம்' என உமாபதிசிவாசாரியார் திருவருட்பயன் காப்பிலே குறிப்பிடுவன.

(அ) இசை, நடனம், ஓவியம் முதலிய அழகியற்கலைகள்.

(ஆ) திருமுறைப் பண்ணிசை, கோயிற் சிற்பக்கலை, விக்கிரகக்கலை ஆகியன.

(இ) பரம்பொருள்பற்றிய பரஞானம், உலகியல் பற்றிய அபரஞானம்.

(ஈ) புவியியல், வரலாறு, சமூகவியல், மொழியியல் முதலான கலைத்துறைகள்.

102. இறைவன் உயிர்களிலே கலந்து நிற்குந் தன்மை,

(அ) உடலும் உயிரும் போன்றது. (ஆ) நகமும் சதையும் போன்றது.

(இ) சூடு பொருந்திய நீர் போன்றது (ஈ) மரமும் கிளையும் போன்றது.

103. வானுடர்க்கும் காணொணு இறைவன் அடியார்களை விட்டு நீங்காது விளங்கும் காரணம்,

(அ) தேவர்கள் இறைவனுக்குச் சமமானவர், அடியார்கள் தாழ்ந்தவர்கள்.

(ஆ) தேவர்கள் தமது பதவி காரணமாக அகங்காரம் பொருந்தி விளங்குகையில் அடியார்களோ தம்மை முற்றாக இறைவனுக்கு அர்ப்பணித்து விடுகின்றனர்.

(இ) தேவர்கள் தமக்கு மேல் தலைவன் இல்லை என்பதால் இறைவனை வணங்குவது அரிது அடியார்கள் தம் தலைவனாக இறைவனை ஏற்றுள்ளனர்.

(ஈ) இறைவனுக்கு எப்பொழுதும் தாழ்ந்தவர்களுக்கே உதவுதல் வேண்டும் என்ற விருப்பம் உண்டு.

104. ஆன்மாவுக்கு அறிவு என்ற பெயர் பொருந்தாது. ஏனெனில்.

(அ) அது இயல்பாகவே அறிவற்ற சடப்பொருள்.

(ஆ) அறிவித்தால் அறிவதும் பொறிகளின் துணையின்றி அறிய முடியாததுமாய் ஆன்மா உள்ளது.

(இ) இறைவனின் அறிவுக்கு முன்னால் ஆன்மாவின் அறிவு தூசுக்குச் சமானம்.

(ஈ) ஆன்மாவின் அறிவு அதன் வளர்ச்சிக்குத் தடையாக உள்ளது.

105. என்றும் இல்லாதன எனக்கூற முடியாத பொருள்கள்,

(அ) முயற்கொம்பு, ஆகாயத்தாமரை, மலடிமகன், கானல்நீர்.

(ஆ) பிறவித்துன்பம், மும்மலம், முத்தியின்பம், சிவம்.

(இ) தநு, கரணம், புவனம், போகம்.

(ஈ) பற்றுள்ள இறைவன், பற்றில்லா உயிர்கள், பிறவித்துன்பத்தைத் தராத ஆணவம், நிலையில்லாதவற்றை, நிலையானவைபோற் காட்டாத மாயை.

106. ஆணவம் ஆன்மாவைப் பீடிக்கத் தொடங்கியகாலம்,

(அ) ஆன்மா தநுகரண புவன போகங்களைப் பெறத் தொடங்கும் காலம்.

(ஆ) ஆன்மா பாவங்களைச் செய்யத் தொடங்கும் காலம்.

(இ) ஆன்மா இறைவனை மறக்கத் தொடங்குங் காலம்.

(ஈ) எப்பொழுது பீடிக்கத் தொடங்கியது என்று சொல்ல முடியாத அநாதிகாலம்.

107. குருவாக வந்து ஆன்மாவிற்கு விடுதியளிப்பது,

(அ) ஆன்மா பிறவிகள்தோறும் செய்த நல்வினைப்பயன்

(ஆ) இறைவன் தன் பிரதிநிதியாய் அனுப்பிவைக்கும் சிவாசாரியார்.

(இ) இறைவனின் சத்தியாகிய திருவருள்

(ஈ) ஆன்மாவின் பத்தி, செபம், தவம் ஆகியவற்றின் ஒன்றிணைந்த வடிவம்.

108. சரியை அரும்பு, கிரியை மலர் எனில் யோகம், ஞானம்.

(அ) விதை, மரம் (ஆ) பழுத்தல், சருகு

(இ) காய், கனி (ஈ) வெம்பல், முற்றல்

109. அப்பரின் சரியைத் தொண்டுக்கு அடையாளச் சின்னம்:

(அ) திருநீற்றுப்பூச்சு (ஆ) உருத்திராக்கமாலை

(இ) ஸ்ரீபஞ்சாட்சர மந்திரம் (ஈ) உழவாரப்படை

110. நாற்பாதங்களுள் யோகம் எதனுள் அடங்கும்?

(அ) சகமார்க்கத்துள் (ஆ) சன்மார்க்கத்துள்

(இ) சற்புத்திரமார்க்கத்துள் (ஈ) தாசமார்க்கத்துள்.

# விடைகள்

1. ஆ
2. இ
3. அ
4. ஈ
5. ஆ
6. இ
7. இ
8. இ
9. ஈ
10. ஆ
11. அ
12. ஆ
13. ஆ
14. அ
15. இ
16. இ
17. அ
18. இ
19. ஆ
20. இ
21. இ
22. ஈ
23. அ
24. அ
25. ஆ
26. ஆ
27. அ
28. ஈ
29. இ
30. இ
31. ஆ
32. அ
33. ஆ
34. ஆ
35. ஈ
36. ஈ
37. ஆ
38. ஆ
39. இ
40. அ
41. இ
42. ஈ
43. ஈ
44. ஆ
45. ஈ
46. இ
47. அ
48. ஈ
49. ஈ
50. ஈ
51. ஆ
52. ஈ
53. ஈ
54. இ
55. இ
56. ஈ
57. இ
58. ஆ
59. ஆ
60. ஆ
61. ஆ
62. ஆ
63. ஈ
64. அ
65. ஈ
66. ஆ
67. இ
68. இ
69. அ
70. ஆ
71. ஈ
72. ஆ
73. இ
74. அ
75. இ
76. இ
77. ஆ
78. இ
79. ஈ
80. ஆ
81. அ
82. ஆ
83. இ
84. ஈ
85. ஈ
86. ஆ
87. அ
88. அ
89. இ
90. ஆ
91. அ
92. இ
93. இ
94. ஈ
95. அ
96. அ
97. ஆ
98. ஆ
99. ஆ
100. இ
101. இ
102. இ
103. ஆ
104. ஆ
105. ஆ
106. ஈ
107. இ
108. இ
109. ஈ
110. அ

## பதினோராம் ஆண்டு

# வினாக்கள்

### பகுதி இரண்டு

1. ஈழத்துச் சைவமரபின் தொன்மையினை அறியத் தொல்பொருளாய்வுகளும் வரலாற்றுச் சான்றுகளும் இலக்கிய ஆதாரங்களும் உதவுகின்றன.

   (அ) ஈழத்துச் சைவமரபினை அறிய உதவிய தொல்பொருட் சின்னங்கள் எவை?

   (ஆ) வரலாற்றுச் சான்றுகள் என்று கொள்ளத்தக்க வேறு ஆதாரங்கள் எவை?

   (இ) இலக்கிய ஆதாரங்கள் எவை?

   (ஈ) சைவமரபின் தொன்மையை அறிய உதவும் பழைய ஆலயங்கள் எவை?

   (உ) சைவமரபின் தொன்மையை அறியப் புராணபடன மரபு உதவுமா? எவ்வாறு?

2. கோயில்கள்தாம் சைவர்களின் சகல வாழ்வுக்கும் உயிர்நாடியாக விளங்குகின்றன" என்பதை ஏற்பீரா?

   (அ) எல்லாவிடங்களிலும் இறைவன் உள்ளானெனினும் கோயில்களிலேயே நாம் அவனை வழிபடக் காரணம் என்ன?

   (ஆ) கோயில்கள் எமது கலைகளை வளர்க்க எவ்வாறு உதவுகின்றன?

   (இ) கோயில்களில் நிகழும் பெருவிழாக்கள் எமது சமய வாழ்விற்கு எவ்வகையிற் பயன்படுகின்றன?

   (ஈ) கோயில்களால் சமூகவாழ்வு புனிதமாவது எவ்வாறு?

   (உ) ஆலயங்கள், கல்விச் சாலைகளாகவும் பயன்பட்ட வகை எவ்வாறு?

3. "மன்னருக்குச் சமீபத்திலுள்ள மாதோட்டத்திலே தேன்பொந்து ஒன்று உள்ளது" என்பது நாவலர் திருவாக்கு.

   (அ) திருக்கேதீச்சரத்தைத் தேன்பொந்து என்று நாவலர் கூறக் காரணம் என்ன?

   (ஆ) திருக்கேதீச்சரம் அந்நியர் ஆட்சிக்காலத்தில் வீழ்ச்சியடைந்தது எவ்வாறு?

   (இ) அதனைப் புத்துயிர் பெறச் செய்யச் சைவமக்கள் மேற்கொண்ட முயற்சிகள் யாவை?

   (ஈ) திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரும், சுந்தரமூர்த்தி நாயனாரும் திருக்கேதீச்சரத்தின் சிறப்பினை எவ்வாறு பாடியுள்ளனர்?

   (உ) திருக்கேதீச்சரத்தில் நிகழும் திருவிழாக்களில் முக்கியமான திருவிழா பற்றி யாது அறிவீர்?

4. "கோணேச்சரநாதரின் புகழ் வரலாற்றின் காலவரையறைக்குள் அடங்காதது" என்பர்.

   (அ) கோணேச்சரத்தின் வரலாற்றினைக் கூறும் பழைமையான நூல்கள் எவை?

   (ஆ) கோணேச்சரக் கோயிலைப் புனருத்தாரணம் செய்த மன்னன் குளக்கோட்டன் அந்தக் கோயிலின் வளர்ச்சிக்கு ஆற்றிய தொண்டுகள் யாவை?

   (இ) கோணேச்சர ஆலயத்தில் 1944, 1950 ஆம் ஆண்டுகளில் நிகழ்ந்த விசேடங்கள் யாவை?

   (ஈ) கோணேச்சர ஆலயத்தில் நிகழும் சிறப்புத் திருவிழாக்கள் எவை?

   (உ) கோணேச்சரத்துக்கும் தமிழகத்துக்கும் இருந்த தொடர்புகள் யாவை?

5. முன்னேச்சரம் என்ற பெயரே அவ்வாலயத்தின் பழைமையைக் குறிப்பதாகும்.

   (அ) முன்னேச்சர ஆலயத்தின் பெருமையைக் கூறும் பழங்கதை ஒன்று கூறுக.

(ஆ) அந்நியராட்சியால் நிலைகுலைந்த ஆலயத்தின் புனருத்தாரணம் யாரால் நிகழ்ந்தது?

(இ) முன்னேச்சரத்தில் நிகழும் பூசைச் சிறப்புக்களை விளக்குக.

(ஈ) அங்கு நடைபெறும் 'பத்தோற்சவம்' பற்றி யாது அறிவீர்?

(உ) நவராத்திரிவிழா முன்னேச்சரத்தில் சிறப்புப் பெறக் காரணம் என்ன?

6. நகுலேச்சரம் யாழ்ப்பாணத்திலே தொன்மைச் சிறப்புப் பெற்ற சிவாலயம்.

(அ) நகுலேச்சரத்திற்கும் நகுல முனிவர்க்குமுள்ள தொடர்பை விளக்குக.

(ஆ) நகுலேச்சரத்தோடு தொடர்புடைய சிறப்பு யாது?

(இ) ஆலயச் சூழலிலுள்ள வேறு கோயில்கள் யாவை?

(ஈ) நகுலேச்சர யாத்திரிகர்களுக்குச் சூழலிலே செய்யப்பட்டுள்ள வசதிகள் யாவை?

(உ) ஈழத்தின் நான்கு திசைகளிலும் அமைந்துள்ள சிவாலயங்கள் எவை?

7. சுயம்புவாகத்தோன்றிய இறைவனின் ஆலயங்களும் ஈழத்திலே உள்ளன.

(அ) ஈழத்திலே பழங்காலந்தொட்டு விளங்கும் இத்தகைய ஆலயங்கள் இரண்டின் பெயர்கள் தருக.

(ஆ) ஒட்டுசுட்டான் தான்தோன்றியீச்சரத்தின் மகோற்சவம் எப்போது ஆரம்பித்து எப்போது முடியும்?

(இ) அங்குப் பதின்மூன்றும் நாள் நடைபெறும் சிறப்புத் திருவிழா பற்றி யாது அறிவீர்?

(ஈ) கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றி ஈச்சரத்தின் தனிச்சிறப்பு யாது?

(உ) இங்குக் காணப்படும் சிறப்பியல்புகள் யாவை?

8. 'பூங்குழலாள் அபிராமி கடைக்கண்கள் நல்லன எல்லாம் தரும்' என்பர் அபிராமிப்பட்டர்.

(அ) அவர் கூறும் நல்லன எல்லாம் என்பன எவை?

(ஆ) அம்மையின் ஆலயங்களாய் ஈழத்திற் சிறப்புப் பெற்றுப்பின் அழிந்துபோன ஆலயங்கள் கூறுக.

(இ) நாகர்களின் வழிபாட்டை நினைவு படுத்துவனவாக இந்நாட்டின் வட பகுதியிலே காணப்படும் ஆலயங்கள் எவை?

(ஈ) அம்மையின் பூசைகளிற் சிறப்பான பூசை எது என விளக்குக.

(உ) நயினை நாகபூஷணியம்பாள் ஆலயத்தின் தனிச் சிறப்புக்கள் எவை?

9. ஈழத்தில் எங்கணும் விநாயகர் ஆலயங்கள் காணப்படுகின்றன.

(அ) விநாயகர் வழிபாடுபற்றி நீர் அறிந்ததை எழுதுக.

(ஆ) ஆலயங்களில் மட்டுமன்றி விநாயகர் வேறு எங்கெங்கு எழுந்தருளி அருள் பாலிக்கின்றார்?

(இ) விநாயகர் வழிபாட்டின் பழமையை உணர்த்தும் தொன்மைச் சான்றுகள் எவை?

(ஈ) யாழ்ப்பாணத்திலுள்ள பிரதான விநாயகராலயங்கள் எவை?

(உ) ஈழத்தின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள முதன்மையான விநாயகர் ஆலயம் பற்றி யாது அறிவீர்?

10. காங்கேயன்துறையிலிருந்து கதிர்காமம் வரை எங்கணும் முருகன் கோயில்கள் பரந்து காணப்படுகின்றன.

(அ) கதிர்காமத்தில் நடைபெறும் பூசைமுறை முருக வழிபாட்டின் பழமையைப் புலப்படுத்துவது எவ்வாறு?

(ஆ) செல்வச்சந்நிதிக்கும் கதிர்காமத்துக்குமிடையே காணப்படும் வழிபாட்டொற்றுமையையும் வேறுபாட்டையும் விளக்குக.

(இ) நல்லூர்க் கந்தசுவாமி கோயிலின் மகோற்சவச் சிறப்பினைத் தெளிவாக்குக.

(ஈ) மாவிட்டபுரம் கந்தசாமி கோயிலின் வரலாற்றினை சுருங்கத் தருக.

(உ) முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைந்துள்ள முருகன் கோயில்பற்றி யாது அறிவீர்?

11. திருமால் அதருமம் ஓங்கித் தருமம் அழியுங் காலங்களில் யுகந்தோறும் அவதரிக்கின்றார்.

(அ) பாரதியார் திருமாலாகிய கண்ணனின் பெருமையை எவ்வாறு எடுத்துக் கூறுகின்றார்?

(ஆ) திருமாலின் பெருமையைப் போற்றிப் பத்திபரவசத்துடன் பாடிய பெரியார்கள் எப்பெயரால் அழைக்கப்படுவர்? அவர்களிற் சிலரின் பெயர்கள் தருக.

(இ) திருமால் வழிபாட்டின் தொன்மைச் சிறப்புக்குச் சான்றுகள் தருக.

(ஈ) யாழ்ப்பாணப் பகுதியில் விளங்கும் திருமால் கோயில்கள் எவை?

(உ) வல்லிபுர ஆழ்வார் கோயிலில் நடைபெறும் சிறப்புற்சவங்கள் பற்றி விளக்குக.

12. 'தண்டம் முன் புரிதரு வடுகன்' என்பது வைரவக் கடவுளின் திருவிளையாடலைக் குறிக்கும் சொற்றொடர்,

(அ) வைரவக் கடவுள் புரிந்தருளிய திருவிளையாடல் யாது?

(ஆ) வைரவக் கடவுள் எவ்வகையில் மக்களுக்கு உதவி புரிந்தருளுகிறார்?

(இ) அந்நியராட்சிக் காலத்தில் சைவமக்களின் வழிபாட்டில் வைரவக் கடவுள் எவ்வாறு இடம் பெற்றார்?

(ஈ) வைரவ வழிபாட்டிற்கும் பிற கடவுளர் வழிபாட்டிற்குமுள்ள வேறுபாடுகள் யாவை

(உ) சிவாலயங்களில் வைரவக் கடவுள் பெறும் இடம் யாது?

13. சைவவினாவிடை சைவமக்களுக்கு மிகவும் பயனுள்ள ஒரு நூல்,

(அ) சைவவினாவிடை நாவலர் பெருமான் சைவசமய வகுப்பு நடத்துவதுபோலவே அமைந்துள்ள வகையை விளக்குக.

(ஆ) இறைவனின் எவ்வெவ்வியல்புகள் சைவவினாவிடையிலே கூறப்படுகின்றன?

(இ) சைவவினாவிடை எழுதுவதற்கு நாவலர் பெருமானுக்கு எது தூண்டுகோலாயிற்று?

(ஈ) சைவவினாவிடையைக் கற்பதால் நாம் அடையும் பயன்கள் யாவை?

(உ) சைவசமய உண்மைகளை அறிவதற்கு நாவலர் பெருமான் இயற்றிய வேறு நான்கு நூல்களின் பெயர்கள் தருக.

14. 'சமயங்கள் ஆறுந்தன் றொளினை நாட
அமையங் குழல்கின்ற பிரானே, என்பது திருமூலர் திருவாக்கு,

(அ) வெவ்வேறு சமயங்களாக வகுக்கப்பட்டபோதிலும், அவையாவும் முத்தியடைதலையே குறிக்கோளாகக் கொண்டுள்ளன என்பதை விளக்குக.

(ஆ) அறுவகைச் சமயங்களுள் ஒன்றான சைவத்தின் சிறப்புக்கள் யாவை?

(இ) விஷ்ணுவின் பெருமைகள் பேசும் வைணவம் தமிழ் நாட்டில் நிலவிய வகைபற்றி யாது அறிவீர்?

(ஈ) சத்தியைச் சிவனிலிருந்து வேறாகக் கொண்டதனால் ஏற்பட்ட பயன் யாது?

(உ) காணபத்தியத்தின் பழைமைபற்றி இந்திய வரலாறு கூறுவது யாது?

15. தமிழ்நாட்டிலும் ஈழநாட்டிலும் தோன்றியருளிய ஞானச்செல்வர்கள் பற்றி யாது அறிவீர்?

(அ) தமிழ் நாட்டிலே தோன்றிய ஞானச் செல்வர்கள் யாவர்?

(ஆ) அவர்கள் எமது சிவநெறிக்காற்றிய தொண்டுகள் யாவை?

(இ) ஈழத்திலே தோன்றிய ஞானச் செல்வர்கள் யாவர்?

(ஈ) அவர்கள் ஆற்றிய பணிகள் யாவை?

(உ) இவர்களில் ஒருவர்பற்றி நீர் அறிந்தவற்றை விளக்குக.

16. 'வன்தொண்டர் என்பதோர் வாழ்வு தந்தார்' என்பது சுந்தரமூர்த்தி நாயனாரின் திருவாக்கு,

(அ) 'வன்தொண்டர்' என்ற பெயர் சுந்தரமூர்த்தி நாயனாருக்கு எவ்வாறு அமைந்தது?

(ஆ) இவ்வரலாற்றைப் பெரிய புராணத்தின் எந்தப் பிரிவிலிருந்து அறிந்துகொள்ளலாம்?

(இ) சுந்தரரை ஆட்கொண்டருள எழுந்தருளியபொழுது சிவபெருமான் கொண்டருளிய திருக்கோலத்தினைச் சேக்கிழார் எவ்வாறு வருணிக்கின்றார்?

(ஈ) 'அந்தணர்கள் வேறோர் அந்தணர்க்கு அடிமையாதல் பேச இன்று உன்னைக் கேட்டோம்' என்பது யாரால் எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது?

(உ) இக்கூற்றுக்குச் சிவபெருமான் அளித்தருளிய விடை யாது? அதனால் நாம் அறிவது யாது?

17. முருகப்பெருமான் சூரபன்மன் முன்பு 'வியன் பெருவடிவம்' கொண்டருளினார்,

(அ) அவ்வாறு அவர் பெருவடிவம் கொண்டருளக் காரணம் யாது?

(ஆ) இத்திருப்பெரு வடிவத்தின் வருணனையைச் சுருக்கமாகத் தருக.

(இ) சூரபன்மனுக்கு முருகப்பெருமானின் திருப்பெரு வடிவத்தைத் தரிசித்ததும் உண்டான உணர்வு யாது?

(ஈ) அவ்வுணர்வு நிலையிலே அவன் தன்னுள்ளே கூறியவை யாவை?

(உ) பெருமானின் திருப்பெருவடிவம் மறைந்ததும் சூரபன்மன் எந்நிலைக்கு ஆளானான்? அந்நிலையில் அவன் கொண்ட முடிவு யாது?

18. ''பெருமையால் தம்மை ஒப்பார்'' என்பது சிவனடியார்களின் சிறப்புப் பற்றிய சேக்கிழார் சுவாமிகளின் கூற்று,

(அ) சிவனடியார்கள் பெருமையிலே தமக்குத் தாமே நிகராவர் என்பதிலிருந்து நீர் அறிந்து கொள்வது யாது?

(ஆ) எவ்வகைகளில் அவர்கள் ஒப்பில்லாதவர்கள்?

(இ) சிவபெருமானே அடியவர்களின் பெருமையைத் தம் திருவாக்காக எடுத்துக் கூறியருளியமைக்குப் பெரிய புராணத்திலிருந்து இரு உதாரணங்கள் தருக.

(ஈ) வாயிலார் நாயனாரின் பூசைச் சிறப்பு யாது?

(உ) கண்ணப்பநாயனாரின் பத்தித்திறத்தை விளக்குக.

19. சைவசித்தாந்தப் பெருநெறிக்கு வித்திட்டவர்கள் மெய்கண்டசந்தானம் என அழைக்கப்படும் சந்தானகுரவர் ஆவர்.

(அ) சந்தானகுரவர் பரம்பரை எங்கிருந்து யாரால் தொடக்கி வைக்கப்பட்டது?

(ஆ) சந்தானகுரவர் பரம்பரையை வரிசைக்கிரமமாகக் கூறுக.

(இ) மெய்கண்டாருக்கும் - அருணந்திசிவாசாரியாருக்குமிடையில் நடைபெற்ற உரையாடல் மூலம் நீர் உணர்வது யாது?

(ஈ) மெய்கண்டாரும் அவர் வழிவந்த சீடர் பரம்பரையும் சைவசித்தாந்த நெறியினை வளர்க்கப் புரிந்தருளிய பணிகள் யாவை?

(உ) சைவசித்தாந்த சாத்திரங்களிலே சிவஞானபோதமே முதன்மையான நூல் என்பது பொருந்துமா? எவ்வாறு?

20. வேதம், ஆகமம் ஆகிய இரண்டும் சைவர்களாகிய எங்களுக்கு முதல் நூல்கள்,

(அ) வேதம் பொதுநூல் எனப்படுவதேன்?

(ஆ) ஆகமம் சிறப்பு நூல் என்பது பொருந்துமா? எவ்வாறு?

(இ) வேதத்தில் கூறப்படும் வழிபாடு பற்றிச் சுருக்கமாக விளக்குக.

(ஈ) ஆகமங்கள் சைவசித்தாந்த நெறிக்கு எவ்வெவ்வகையில் ஊட்டம் அளித்தன?

(உ) எமது ஆலயங்கள் வேதாகம நெறியிலே நடத்தப்படும் வகை பற்றி நீர் அறிந்த வற்றைக் கூறுக.

21, இறைவன் இயல்புகளைச் சைவசித்தாந்தத்திற்குப் பொருந்தும் வண்ணம் திருவள்ளுவர் எடுத்துரைத்துள்ளார்.

(அ) இறைவன் ஆன்மாக்களுக்குத் தலைவராய் அவற்றின் உள்ளும் புறமும் எழுந்தருளியுள்ள வகையைத் திருவள்ளுவர் என்ன உவமையால் விளக்குவர்?

(ஆ) கற்றதனாலாம் பயன் யாது எனத் திருவள்ளுவர் கூறியுள்ளார்?

(இ) எமது தலையால் எமக்கு எப்பொழுது பயன் இல்லை.

(ஈ) பற்றை விடற்குத் திருவள்ளுவர் கூறும் வழி யாது?

(உ) எப்பொழுது பிறப்பென்னும் பேதைமை நீங்கும்?

22. ''அன்புஞ் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்'' என்பது திருமந்திரம்,

(அ) சைவசமயம் அன்பே வடிவானது என்பதை எவ்வாறு விளக்குவீர்?

(ஆ) அன்பு என்பது சைவசமயத்தில் வெளிப்படும் வகைகள் யாவை?

(இ) அன்புக்கு இறைவனும் அடிப்படுவான் என்பதை உதாரணம் தந்து விளக்குக.

(ஈ) இறைவன்மீது நமக்குள்ள அன்பை வெளிப்படுத்த நாம் செய்யவேண்டியவை யாவை?

(உ) அன்பு நெறியைக் கடைப்பிடித்தோர் 'அன்பே சிவமாய்' அமர்ந்திருப்பது எவ்வண்ணம்?

23. 'பதியினைப் போற்பசு பாசம் அநாதி' என்பர் திருமூலர்,

(அ) சைவசித்தாந்தம் கூறும் அநாதியான முப்பொருள்களும் எவை?

(ஆ) அவை அநாதியானவை என்பதை எவ்வாறு விளக்குவீர்?

(இ) பதி, பசுவைத் தன்னிடத்தே சேர்த்தருளுவது எக்காரணத்தினால்?

(ஈ) பாசத்தினுள் அடங்கிய மூன்று பொருள்கள் யாவை?

(உ) இவற்றுள் மிகக் கொடுமையானது எது? ஏன்?

24. ''சிவஞானபோதம் சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கிற்கும் முடிமணியாகத் திகழ்வது''

(அ) அதன் சிறப்புக்கள் யாவை?

(ஆ) அதன் பிரிப்பு முறையைக் கூறுக.

(இ) மாணிக்கவாசக சுவாமிகளும் மெய்கண்டாரும் ஏகான்மவாதக்கோட்பாட்டை மறுப்பதேன்?

(ஈ) சிவஞானபோதம் செய்ந்நன்றி மறந்த செயலாக எதனைக் கூறுகின்றது? ஏன்?

(உ) மெய்கண்டார் இறைவனுகவே பாவிக்குமாறு எவற்றைக் கூறியருள்வர்? அவர் கூற்றுப் பொருந்துமாறு எவ்வாறு?

25. சிவஞானசித்தியார், சிவஞானபோதத்தின். வழிநூல் திருவருட்பயன் அதன் சார்பு நூல்.

(அ) இவ்விரு நூல்களையும் இயற்றியருளியவர்கள் யாவர்? இவை வழிநூல், சார்புநூல் எனப்படுவதன் காரணம் யாது?

(ஆ) சிவஞானசித்தியாரின் பரபக்கம், சுபக்கம் என்ற இரு பிரிவுகளும் எவ்வெவற்றை விளக்க எழுந்தன?

(இ) இறைவனின் இயல்புகளைச் சிவஞான சித்தியார் எவ்வாறு விரித்துரைக்கின்றது?

(ஈ) திருவருட்பயனிலே ஆணவமலத்தின் இயல்பு எவ்வாறு கூறப்படுகின்றது?

(உ) சார்ந்ததன் வண்ணமாகிய ஆன்மா இறைவனை அடைவதற்குச் சாரவேண்டிய பொருள் யாது? விளக்குக.

26. சைவநாற்பாதங்கள் சைவசாதனங்கள் என்றும் சொல்லப்படும்,

(அ) சைவநாற்பாதங்களைச் சைவசாதனங்கள் என்று கூறுவது ஏன்?

(ஆ) சரியாபாகத்தைச் தாசமார்க்கம் என்று கூறக் காரணம் யாது? இதனைக் கடைப்பிடிப்போர் செய்ய வேண்டிய தொண்டுகள் யாவை?

(இ) கிரியை வழி ஒழுகுபவன் கடைப்பிடிக்க வேண்டியன யாவை?

(ஈ) யோகபாதமாவது யாது? யோகப்பயிற்சி முறைகளையும் பயன்களையும் கூறுக.

(உ) ஞானபாதத்தின் சிறப்பமிசங்களை விளக்குக.

# விடைகள்

## பகுதி — இரண்டு

1. (அ) இலங்கையின் பலபாகங்களிலும் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டுக்களிலிருந்து இங்குச் சைவமரபின் தொன்மையினை அறிந்து கொள்ளலாம். சிறப்பாக 'வலஎல்லு கொடகந்த' என்ற இடத்திலே கிடைத்த கி.மு. 2 ஆம் நூற்றுண்டைச் சேர்ந்தது எனக் கொள்ளப்படும் கல்வெட்டிலே சிவகூடம், சிவம் என்ற சொற்கள் காணப்படுகின்றன.

(ஆ) மகாவமிசம், விஜயன் அவன் பின்வந்த சிங்கள அரசர்கள், புத்தசமயம் இங்குப் பரவுவதன்முன் சைவர்களாகவே விளங்கினர் என்று கூறும். மகாசிவன், மூத்தசிவன் முதலான அரசர்களின் பெயர்கள் மகாவமிசத்தில் கூறப்படும் பழம்பெரும் மன்னர்களின் பெயர்களாய் உள்ளன.

(இ) வான்மீகி இராமாயணம் வடமொழியில் எழுந்த ஆதி காவியம். இதில் இராவணன் பற்றிய செய்திகள் வருகின்றன. இயக்கனை இவன் சிவபத்தன் என்று தெரிய வருகின்றது' பிற்காலத்தெழுந்த திருவாசகத்தில் இராவணனின் மனைவி சிறந்த சிவபத்தை எனக் குறிக்கப்படுகின்றாள். இலங்கையில் எழுதப்பட்ட தமிழ், பாளி, சிங்கள இலக்கியங்கள் மூலமும் சைவ மரபின் தொன்மையை அறியலாம்.

(ஈ) இலங்கையின் வடக்கிலுள்ள நகுலேச்சரம், மேற்கிலுள்ள திருக்கேதீச்சரம், முன்னேச்சரம், கிழக்கிலுள்ள திருக்கோணேச்சரம் ஆகியனவும் வடமத்தியிலுள்ள தான்தோன்றியீச்சரமும் புராதன சிவாலயங்கள். முன்பு தென்னிலங்கையிலே சந்திரசேகரம் என்ற சிவாலயம் இருந்ததாய்க் கூறப்படுகின்றது.

(உ) இலங்கையிலே சிறப்பாக யாழ்ப்பாணத்தில் புராணபடனம் செய்தல் மிகப் பழைமையானதொரு வழக்கமாயிருந்து வருகிறது. ஏறக்குறைய அறுநூறு ஆண்டுகளுக்கு முன்பு கச்சியப்பசிவாசாரியாரால் கந்தபுராணம் இயற்றப்பட்டது. அக்காலத்தில் அங்கிருந்து கச்சிக் கணேசையர் என்னும் சிவாசாரியார் யாழ்ப்பாணம் வந்தார் என்றும் அவரே புராணபடன மரபினை யாழ்ப்பாணத்தில் அறிமுகம் செய்தவரென்றும் இலக்கிய கலாநிதி. பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை தமது கட்டுரையொன்றிலே குறித்துள்ளார். இவரின் கூற்றின்படி புராண படன மரபு ஈழத்தில் அறுநூறு ஆண்டுகளுக்கு முன்பே தொடங்கிவிட்டது எனலாம். ஒருவர் புராணத் திருப்பாடலைக் குறித்த ஓர் இராகத்தில் இசைக்க அதற்கு அதே இராகத்தில் உரை கூறுவதே புராணபடனமாகும்.

2. (அ) மந்திரம், தந்திரம், பாவனை என்பவற்றால் சிவாசாரியார் ஆலயங்களிலே இறைவனை எழுந்தருளப் பண்ணுகின்றார். இவ்வாறு எழுந்தருளப்பண்ணுதல் பிரதிஷ்டை எனப்படும். பிரதிஷ்டை செய்து கும்பாபிடேகம் செய்து பின்னர் இறைவன் அவ்வாலயத்தில் எழுந்தருளி அருள் பாலிக்கத் தொடங்குகிறான். காலப்போக்கில் ஆலயங்களிலே எழுந்தருளிய இறைவனுடைய அருட்பாலிப்பு குறையக் குறையப் பன்னீராண்டுகட்கோர் முறை கும்பாபிடேகம் நிகழ்த்தி மீண்டும் இறையருள் ஆலயங்களிலே தொகுக்கப்படுகின்றது. எனவே ஆலயங்களே இறைவனை வழிபடுதற்கு உரிய இடங்களாகும். பசுவின் பால் அதன் உடல் எங்கும் குருதி வடிவிலே ஓடிக்கொண்டிருப்பினும் அதன் பால் மடியிலிருந்தே பால் சுரப்பதுபோல இறைவன் பிரபஞ்சம் யாவிலும் எழுந்தருளியிருப்பினும் ஆலயத்திலேயே அவன் அருள் சுரக்கின்றது எனலாம்.

(ஆ) கோயில்களிலே வேதங்கள் இசையோடு ஓதப்படுகின்றன திருமுறைகள் அவற்றிற்குரிய பண்ணிசை தவறாது ஓதப்படுகின்றன. நாதசுரம், தவில் முதலாகிய இசைக்கருவிகள் வாசிக்கப்படுகின்றன. முற்காலத்தில் கோயிலில் நடனம் இடம் பெற்றது. நாடகமும் நடந்தது என அறிகின்றோம். இவ்வாறு இசை, நாடகக் கலைகள் கோயிலை மையமாகக்கொண்டு வளர்

கின்றன. கோயிற் கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, விக்கிரகக்கலை என்பனவும் கோயில் களிற் சிறப்பாகப் பயன்படுத்தப்படுகின்றன.

(இ) கோயில்களில் நடைபெறும் பெருவிழாக்கள் மக்களிடையே பத்தியுணர்வை வளர்க் கின்றன. விரதங்கள், வழிபாடுகள், நேர்த்திக்கடன்களை நிறைவேற்றல் என்பவற்றாலே மெய், வாய், கண், மூக்கு, செவியாகிய ஐம்பொறிகளும் நெறிப்படுத்தப்படுகின்றன. மக்கள் அமைதி யாகவும், ஒற்றுமையாகவும் வழிபட ஒன்று சேர்வதால் சமூகரீதியில் நல்விளைவுகள் ஏற்படு கின்றன.

(ஈ) கோயிற்றிருவிழாக் காலங்களிலே தண்ணீர்ப்பந்தல் வைத்தல், அன்னதானம் வழங்கல் முதலியன கோயிற் சூழலிலே இடம்பெறுகின்றன. இதனால் இறைவனின் மக்களாகிய சகசீவ ராசிகளிலே அன்பு பெருகுகிறது. அன்பு உள்ளத்தில் உள்ள குற்றங்களைக் கழுவி தூய்மை செய்கின்றது. 'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற உணர்வு பெருகுவதால் சமூக வாழ்வு புனிதமடைகின்றது.

(உ) பழம்பெரும் மன்னர்கள் கோயில்களிலே பெரும் மண்டபங்களைக் கட்டி வைத்தனர். இம்மண்டபங்களிலே அக்காலத்தில் வேதங்கள், ஆகமங்கள், திருமுறைகள், சாத்திரங்கள் யாவும் கற்பிக்கப்பட்டன. குருவைத் தெய்வமாய் வணங்கும் வழக்கம் வளர்ந்தது. பின்பு குரு குலவாசமும், பிற்காலத்தில் பள்ளிகளும் ஏற்பட்டுக் கல்வி வளரக் கோயில்கள் உதவின.

8. (அ) ''தேன்பொந்தில் தேன் இருப்பதுபோலத் திருக்கேதீச்சர ஆலயமாகிய பொந்திலே பேரானந்தத் தேனைத் தம்மை வழிபட வருவோர்க்கு வழங்கி அவர்களைப் பிறவிப்பிணியினின்றும் போக்கியருளும் மகா வைத்திய நாதனாகத் திருக்கேதீச்சரநாதர் எழுந்தருளியுள்ளார்'.' என்பது நாவலரின் கருத்து, இதனையே அவர் ''மன்னாருக்குச் சமீபத்திலுள்ள மாதோட்டத்தில் தேன் பொந்து ஒன்று உள்ளது'' என்றார்.

(ஆ) போர்த்துக்கீசர் ஆட்சிக்காலத்தில் திருக்கேதீச்சர ஆலயம் அவர்களால் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டது. சமயச் சகிப்பின்மையே இதற்குக் காரணம். பொருளாசைப் பித்துக் காரணமாக அவர்கள் அங்கிருந்த அணிகலன்கள் விக்கிரகங்கள் ஆகியவற்றைக் கவர்ந்து சென் றனர். இவற்றால் திருக்கேதீச்சர ஆலயம் வீழ்ச்சியடைய நேரிட்டது.

(இ) 1893-ஆம் ஆண்டில் திருக்கேதீச்சர ஆலயத்திற்குச் சொந்தமாயிருந்த நிலப்பகுதி நாட்டுக்கோட்டை நகரத்தவரான பழனியப்பச் செட்டியாரால் கத்தோலிக்கக் கிறிஸ்தவரிட மிருந்து விலைக்கு வாங்கப்பட்டது. 1894இல் யாழ்ப்பாணத்தவரான பசுபதிச் செட்டியார் திருக் கேதீச்சர ஆலயம் இருந்த தானத்தைக் கண்டுபிடித்தார். 1903 இல் இந்தத் தானத்தில் சிறிய தொரு கோயில் கட்டப்பட்டது. எனினும் காலப்போக்கில் கவனிப்பாரின்றி ஆலயம் சிதை வடைந்தது. 1953இல் மீண்டும் கோயில் புதுப்பிக்கப்பட்டுக் கும்பாபிஷேகம் நிகழ்ந்தது. இதனை நிகழ்த்தியவர்கள் சேர். கந்தையா வைத்தியநாதனைத் தலைவராகக்கொண்ட திருக்கேதீச்சரப் புன ருத்தாரண சபையாராவர். 1960இல் ஆலயச் சுற்றுப்பிராகாரத்தில் மூர்த்திகளை எழுந்தருளச்செய்து கும்பாபிடேகம் நடந்தது. இன்று இராசகோபுரம் கட்டப்பட்டுப் பெருங் கோயிலாய்த் திருக் கேதீச்சரம் விளங்குகின்றது. ஐந்து பெரிய ரதங்களும் உள்ளன.

(ஈ) திருக்கேதீச்சரம் அமைந்துள்ள மாதோட்ட நகரின் சிறப்பு, அதன் இயற்கைவளம்: பாலாவியின் பெருமை, ஆலயத்தில் எழுந்தருளியுள்ள திருக்கேதீச்சரப் பெருமானதும், கௌரி யம்பாளதும் மகத்துவம், அவர்களை வழிபடுவதால் அடையும் பயன், பெருமானின் சிறப்புக்கள் என்பன திருஞானசம்பந்தமூர்த்திநாயனாராலும், சுந்தரமூர்த்திநாயனாராலும் பாடப்பட்டுள்ளன.

(உ) மகாசிவராத்திரியே திருக்கேதீச்சரத்தில் நிகழும் திருவிழாக்களுள் முக்கியமானது. சிவராத்திரி இரவு முழுவதும் திருக்கேதீச்சரப் பெருமானுக்கும், கௌரியம்மைக்கும் நிகழும் அபி

டேகம் மிகுந்த பக்திசிரத்தையை உண்டாக்க வல்லது. இச்சிவராத்திரியன்று இலங்கையின் பல பகுதிகளிலுமிருந்து சைவமக்கள் திரண்டுவந்து பெருமானை வழிபடும் காட்சி கண்கொள்ளாக்காட்சி.

4: (அ) தக்கிணகைலாச புராணம் என்னும் கோணாசலபுராணம் திருக்கோணேச்சரத்தின் வரலாற்றினை எடுத்துரைக்கும் பழைய நூல். கோணேசர் ஆலயத்து அருச்சகராயிருந்த பண்டிதராசர் இந்நூலின் ஆசிரியராவர். திருக்கோணமலையைச் சேர்ந்த கவிராசர் இயற்றிய கோணேசர் கல்வெட்டென வழங்கும் கோணேசசாசனம் என்ற நூலும் திருக்கோணேச்சர வரலாற்றைக் கூறும் மற்றொரு நூலாகும்.

(ஆ) குளக்கோட்டன் திருக்கோணேச்சரத் திருக்கோயிலைப் புனருத்தாரணம் செய்த மன்னனுவன். கவிராசரின் கோணேச சாசனத்தில் இவன் ஆலயத்தினை முட்டின்றி நடத்த அமைத்த அறக்கட்டளைகளும் எதிர்காலத்திலும் இந்நிலை தொடர, இனிவருவோருக்கு இட்ட கட்டளைகளும் காணப்படுகின்றன. கோயில்கள், கோபுரங்கள், மணிமதில்கள், மண்டபங்கள், திருக்குளம் பாவநாசத்தீர்த்தக்கரை என இம்மன்னன் பலவற்றையும் ஆக்கி நாள்தோறும் பூசைக்கென நெல், கறியமுதுக்கான பொருள் முதலியவற்றையும் பெறுதற்கான ஏற்பாடுகளைச் செய்தான். இதனைக் கோணேசசாசனம் விரித்துரைக்கும்.

(இ) 1944, 50-ஆம் ஆண்டுகளிலே கோணேச்சரக் கோயிலிலே பழங்காலத்திற் பிரதிட்டை செய்யப்பட்டுப் பிற்காலத்தில் மறைந்துபோயிருந்த விக்கிரகங்கள் பல புதைபொருள் ஆராய்ச்சியின் பயனாகக் கண்டெடுக்கப்பட்டன. சந்திரசேகரர், சோமாஸ்கந்தர், பார்வதி, விட்டுணு, மகாலட்சுமி ஆகிய கடவுளரின் விக்கிரகங்களே அவை.

(ஈ) பங்குனி, உத்தரநாளிலே தொடங்கிப் பதினெட்டு நாள்கள் மகோற்சவம் இங்கு நடைபெறுகின்றது. சிவராத்திரி, மாசிமகம், ஆனி உத்தரம், மார்கழித் திருவாதிரை முதலியன இங்கு நடைபெறும் சிறப்புத் திருவிழாக்களாகும்.

(உ) சோழர்கள், பல்லவர்கள், பாண்டியர்கள் ஆகியோர் கோணேச்சரத்தை ஆதரித்து வந்த தமிழக மன்னர்களாவர். குளக்கோட்டன் சோழ இளவரசன். தமிழகத்தின் சமயகுரவரான திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் கோணேச்சர நாதர் மீது பதிகம் பாடியருளினார். ஐந்நூறாண்டுகளின் முன்பு வாழ்ந்த அருணகிரிநாதர் கோணேச்சரநாதரைப் பாடாதவிடத்தும் திருக்கோணமலை முருகன்மீது திருப்புகழ் பாடியருளினார்.

5. (அ) வியாசர் சிறந்த முனிவர்; வேதங்கள் நான்கையும் தொகுத்துத் தந்தவர். பதினெண் புராணங்களையும் இவரே இயற்றினார் என்பர். இவர் ஒருகால் தமது வலக்கரத்தைத் தூக்கிச் சுட்டுவிரலை நீட்டி "திருமாலே பரம்பொருள்" எனக் கூறினார். சிவபரத்துவத்திற்கு எதிராய் அவர் இவ்வாறு உரைத்தமையால் இவரது கை தூக்கியது தூக்கியபடியே நின்றது. கீழிறக்கவோ அசைக்கவோ முடியாதநிலை அவருக்கு ஏற்பட்டது. இந்நிலையிலே இவர் மிகுந்த கவலையோடு பல சிவத்தலங்களையும் வணங்கி இறுதியிலே இலங்கை வந்து சிலாபத்துக்கு ஒருகல் தொலைவிலுள்ள முன்னேச்சரம் சென்று திருக்குளத்தில் நீராடி, வடிவாம்பிகை சமேத முன்னேச்சரப் பெருமானை வழிபட்டார். அப்பொழுது அவரின் கை முன்போல ஆயிற்று.

(ஆ) அந்நியர் ஆட்சிக் காலத்தில் முன்னேச்சர ஆலயம் இடியுண்டது. செல்வம் கொள்ளை போயிற்று. இந்நிலையைக் கண்டு கீர்த்தி ஸ்ரீராஜசிங்கன் என்ற சிங்கள மன்னன் மனம் நொந்தான். அவனே முன்னேச்சர ஆலயத்தைப் புனருத்தாரணம் செய்தான்,

(இ) காலந்தவறாது ஆறுகால நித்திய பூசைகள் இங்கு நடைபெறுகின்றன. இருபத்தேழு நாள்கள் மகோற்சவம் நடைபெறுவது இவ்வாலயத்திலேதான். சைவசித்தாந்த தத்துவத்தில் சிவன், சத்தி, ஆன்மா ஆகிய மூன்றையும் குறிக்கும் சோமாஸ்கந்தமூர்த்தி காலையும், மாலையும் திருவுலா வந்தருளலும் இங்கு மட்டுமே இடம் பெறுகிறது.

(ஈ) முன்னேச்சரத்தில் ஆவணி மாதத்தில் பௌர்ணமியைத் தீர்த்ததினமாகக் கொண்டு இருபத்தேழு நாள்கள் மகோற்சவம் நடைபெறுகின்றது. இதன் இறுதி ஆறு நாள்களும் சிறப்பானவை. இந்நாள்களிலேதான் பத்தோற்சவம் நடைபெறும்; சுவாமி இரவுத் திருவிழாவில் திருவீதியுலா வருவார். அவரை நோக்கியவண்ணம் எதிராக இரதத்தில் நாயன்மார் அறுபத்து மூவரும் பவனிவருவர். அவர் இரதம் பின்னோக்கியபடியே இழுத்துச் செல்லப்படும். காரணம், பெருமானை நாயன்மார், தமது பின்பக்கத்தினைச் காட்டாது சென்று வணங்குகின்றனர் என்பதே.

(உ) முன்னேச்சரம் சிவாலயம் எனப்படினும் அங்கு வடிவாம்பிகையே முதன்மை பெறுகின்றார். அவருக்குரிய விசேட வழிபாடுகளை நடத்துவதற்கு உரியகாலமே நவராத்திரி. எனவே நவராத்திரித் திருவிழா இங்கு அதிவிமரிசையாக நடைபெறுகின்றது. நவராத்திரியின் ஒன்பது நாள்களும் நூற்றெட்டுச் சங்குகளுக்குப் பூசைநடத்தி அவற்றினுள்ளே இடப்பட்ட வெவ்வேறு மூலிகைகள் கலந்த நீரினாலே வடிவாம்பிகாதேவிக்கு அபிடேகம் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. புரட்டாதி மாதத்து நவராத்திரி மட்டுமன்றி வசந்த நவராத்திரி என்னும் சித்திரை மாதத்து நவராத்திரியும் இங்குச் சிறப்பாகக் கொண்டாடப்படுவதாகும்.

6. (அ) நகுலேச்சரம் என்ற திருநாமம் நகுலேச்சர முனிவர் வழிபட்டமையால் இந்தத் தலத்திற்கு ஏற்பட்டது. நகுலம் என்பது கீரி. கீரிமுகம் உடைய இம்முனிவர் நகுலேச்சரம் வந்து வழிபட்டுக் கீரிமலையிலே தீர்க்கமாடித் தமது கீரிமுகம் நீங்கப்பெற்றார் என்பர். பிதிர்ச்சாபத்தால் ஏற்பட்டிருந்த தீமையினின்றும் நீங்க நகுல முனிவர்க்கு அருள் பாலித்தமையால் இங்கு எழுந்தருளிய பெருமான் நகுலேச்சரர் என்று அழைக்கப்படுகின்றார்.

(ஆ) சிவராத்திரியைத் தீர்த்தத்தினமாகக் கொண்டு மகோற்சவம் நடைபெறும் நகுலேச்சரத்தில் ஆடியமாவாசையன்று மாவிட்டபுரக் கந்தசுவாமி எழுந்தருளுகின்றார். அவருடைய தீர்த்தத்தினமாகிய அந்நாளிலே கீரிமலைக் கடற்கரையிலே பிதிர்க்கடன் செய்வதும் சைவமக்களின் வழக்கமாக இருந்து வருகின்றது. நகுல முனிவரின் பிதிர்ச்சாபம் தீர்த்த இடமாதலால் சைவமக்கள் ஆடியமாவாசையன்று பிதிர்க்கடனை இங்கு நிகழ்த்துகின்றனர்.

(இ) நகுலேச்சரத்தைக் கோயில்கள் சூழ்ந்த பதி எனக் கொள்வது தவறாகாது. கடற்கரைப் பிள்ளையார் கோயில், மாரியம்மன் கோயில், காசி விசுவநாதன் கோயில், கதிரையாண்டார் கோயில் எனப் பல கோயில்கள் இதன் சூழலிலே உள்ளன. இவ்வகையில் நகுலேச்சரம் முன்னேச்சரத்தை ஒத்துள்ளது. (அங்கும் சூழலிற் பல ஆலயங்கள் விளங்குகின்றன.)

(ஈ) நகுலேச்சர ஆலயம் மூர்த்தி விசேடம், தல விசேடம் மட்டுமன்றித் தீர்த்த விசேடமும் உடையது. எனவே யாத்திரிகர்கள் மகோற்சவகாலங்களில் மட்டுமன்றிச் சாதாரண நாள்களிலும் குளத்திலும், கடலிலும் தீர்த்தமாட இங்கு வருகின்றனர். இதனால் இவர்களுக்கு வசதிசெய்யும் பொருட்டுப் பண்டு தொட்டு ஆலயச் சூழலிற் மடாலயங்கள் பல கட்டப்பட்டுள்ளன.

(உ) பண்டைக் காலத்திலே இலங்கையின் நான்கு திசைகளிலும் காவற் கடவுளராகச் சிவபெருமானை ஆலயம் அமைத்து விஜயன் என்ற சிங்கள மன்னன் எழுந்தருளுவித்தான், என்று யாழ்ப்பாணவைபவமாலை கூறும். கிழக்கிலே கோணேச்சரம், மேற்கிலே கேதீச்சரம், வடக்கிலே நகுலேச்சரம், தெற்கிலே சந்திர சேகரேச்சரம் என்பனவே அவ்வாறு நாற்றிசைகளிலும் அமைக்கப்பட்ட கோயில்களாகும்.

7 (அ) முல்லைத்தீவு மாவட்டத்தில் மாங்குளத்திலிருந்து ஆறுமைல் தொலைவில் ஒட்டுசுட்டான் என்ற இடத்தில் உள்ளது ஓர் தான்தோன்றியீச்சரம்: மற்றைய தான்தோன்றியீச்சரம் மட்டக்களப்பு மாவட்டத்தில் கொக்கட்டிச்சோலை என்ற இடத்தில் உள்ளது.

(ஆ) ஆனிமாத அமாவாசையன்று ஒட்டுசுட்டான் தான்தோன்றியீச்சரத்திற் கொடியேற்றம் இடம்பெறுகின்றது. பதினைந்தாவது நாளாகிய பௌர்ணமியன்று தீர்த்தோற்சவம் நடைபெறுகின்றது.

(இ) வேட்டைத் திருவிழாவே பதின்மூன்றும் நாள் நடைபெறும் சிறப்பு உற்சவம். தமது நோய்தீரப்பெறின் வேடர் உருவந்தாங்கிவந்து பெருமானை வழிபடுவதாய் நேர்த்திக்கடன் வைத்தவர்கள், இந்தத் திருவிழாவன்று உடலிற் கரிபூசி, வாகைத்தளிராலான தழைகொண்டு அரையில் உடையாய் அணிந்து வாகைத்தளிராலான தொப்பியும் அணிந்து விழாவிற் கலந்துகொள்வார்கள். இவர்கள் கைகளிலே குழைகட்டிய தடிகளைத் தாங்கி, மரபுவழியில் நியமனமான தம் தலைவனின் பின்னால் அணிவகுத்துத் திருவீதியுலாவின்போது வலம்வருவர், தலைவனின் கையில் தேன்நிறைந்த குடுவை இருக்கும். சுவாமி வீதிவலம்வந்து கோபுரவாயிலை அடைவார். அப்பொழுது சுவாமிக்கும் அம்மைக்குமிடையே வாக்குவாதம் நடைபெறும். தலைவனின் பணிப்புப்படி வேட்டுவ கோலத்தினர் சுவாமியை விழுந்து வணங்கி ஆலயத்துட் சென்று தம் வேடங்களைக் களைவர்; பின்பு சென்று தீர்த்தமாடுவர்.

(ஈ) மட்டக்களப்பு மாவட்டத்தில் விநாயகர் ஆலயங்கள், முருகன் ஆலயங்கள் பல உள்ளன. ஆனால் அங்குள்ள சிவாலயம் ஒன்று மட்டுமே. கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றியீச்சரர் ஆலயமே அது.

(உ) கொக்கட்டித் தான்தோன்றியீச்சரர் ஆலயத்திற் பூசை செய்வோர் பிராமணக் குருக்கள் அல்லர். சைவர்களான சங்கமரபினைச் சேர்ந்த குருக்கள்மாரே கோயில் அருச்சகர்களாய் விளங்குகின்றனர். இஃது இந்த ஆலயத்தின் ஒரு சிறப்பு. கோயில்களிலே தொண்டூழியம் செய்வோர் அவ்வுரிமையை மருமக்கள் வழிமுறையிற் பெறுவதும் புதுமையானது. தொண்டூழியம் செய்வோருக்கு நெல்வயல்கள் மானியமாக அளிக்கப்பட்டுள்ளமையும் இங்குக் காணப்படும் சிறப்பாகும்.

8. (அ) அபிராமியின் கடைக் கண்பார்வை கிட்டும். அடியார்களுக்கு வேண்டிய செல்வம் கிடைக்கும் கல்வியும் கிடைக்கும். என்றும் தளர்ச்சியடையாத உறுதி கொண்ட மனத்தினையும் அவர்கள் பெறுவார்கள். இவைமட்டுமோ? உலகில் உள்ள நல்லன எல்லாம் கிடைக்கும், இவற்றோடு அடியார்களுக்கு நல்ல கணிப்பும் கிட்டும்.

(ஆ) புத்தளத்துக் காரைதீவுக் கோயில், கற்பிட்டி நாச்சியம்மன் கோயில், நீர்கொழும்பு மீனாட்சியம்மன் கோயில், பெருந்கோட்டை காளி கோயில் என்பன போன்ற பல அம்பாளாலயங்கள் முன்பு இருந்தன. அவை அந்நியராட்சியின் பயங்கரக் கரங்களில் அகப்பட்டு அழிந்துபோயின.

(இ) முற்காலத்தில் நாகர் என்ற சாதியார் ஈழத்தில் வசித்தனர் என்று அறிகின்றோம். இவர்கள் நாக வழிபாடுடையோர். நாகநாதராக நாகதம்பிரான் என்ற கடவுளரை அமைத்து வழிபடுவதும் இவர்களின் வழக்கமாய் இருந்து வந்தது. இவ்வழக்கத்தின் நினைவுச் சின்னங்களாக யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் நாகதம்பிரான் கோயில்கள் காணப்படுகின்றன. நாகத்தால் வழிபாடு செய்யப்பட்ட அம்மையாக நயினை நாகபூஷணியைக் கொண்டு போற்றி வழிபடுவதும் எமது வழக்கமாக இருந்து வருகின்றது.

(ஈ) ஸ்ரீ சக்கரம் என்ற யந்திரத் தகட்டினை அமைத்து அதனைச் சத்தியாகவே பாவனை செய்து நடைபெறும் ஸ்ரீ சக்கர பூசை அம்மையின் பூசைகளிற் சிறப்பானது. சத்தியை உபாசனை செய்வோர் இந்தப்பூசையை நாள்தோறும் கிரமமாக நடத்திவருவர். அம்பாள் ஆலயங்களிலே நவராத்திரி காலங்களிலே ஸ்ரீ சக்கரபூசை சிறப்பாக நடைபெறும்.

(உ) சப்த தீவகங்களில் ஒன்றான நயினாதீவிலே பண்டுதொட்டு நாகபூஷணியம்பாளுக்கு ஆலயம் சிறந்து விளங்கி வருகின்றது. இது தேவியின் அறுபத்து நான்கு சத்தி பீடங்களில் ஒன்றான புவனேஸ்வரி பீடமாகக் கொள்ளப்படும் பெருமை வாய்ந்தது. நாகபூஷணியை நாகேஸ்வரி என்றும் நாகம்மாள் என்றும் அழைத்து வழிபடுகின்றோம். ஆனி மாதத்துப் பௌர்ணமியைத் தீர்த்தோற்சவ தினமாகக் கொண்டு பதினைந்து நாள்கள் இங்கு மகோற்சவம் நடைபெறும்.

9. (அ) விநாயகர் தமக்குமேல் தலைவர் இல்லாதவர். சிவபெருமானின் மூத்த குமாரர் எனக் கொள்ளப்படும் இப்பெருமான் ஓங்காரமாகிய பிரணவ வடிவமே தமது வடிவமாக அமை

யப் பெற்றவர். இதன் காரணமாகத் தும்பிக்கையை உடைய யானை முகத்தை இவரின் திருமுகமாகக்கொண்டு வழிபடுகின்றோம். எமது தலையிலே எமது இரு கைகளாலும் சடபட என்று மும்முறை குட்டி, காதுகளைக் கைகளால் பற்றியபடி மும்முறை இருந்தெழுந்து எம் வணக்கத்தை விநாயகருக்குச் செலுத்துகின்றோம். மோதகம், அப்பம், அவல், பொரி என்பன இவருக்கு நாம் சமர்ப்பிக்கும் நைவேத்தியப் பொருள்களாகும். 'வேழமுகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுத்து வரும்' என்பர். இவ்வுலக வாழ்வு மட்டுமன்றி மறுமையின்பமும் ஈற்றில் முத்திப்பேறும் விநாயகரை வழிபடுவதால் நாம் பெற்றுக்கொள்ளலாம்.

(ஆ) ஆற்றங்கரைகள், குளக்கரைகள், மருதமரங்களின் அடி, அரசமரங்களின் அடி, ஆகிய இடங்களில் எழுந்தருளி எமது வழிபாட்டிற்கு உரியோராய் விநாயகப் பெருமான் உள்ளார்.

(இ) வேதமந்திரங்களில் கவீனும்கவி' (புலவருட் பெரும் புலவர்), மகாதந்தின் (பருத்த கொம்புடையவர்), ஜ்யேஷ்டராஜா (மூத்த மன்னர்) என்றெல்லாம் போற்றப்பட்டவர் விநாயகப் பெருமான். இவரின் வழிபாடு ஈழத்தில் மிகப் பழங்காலத்திலேயே நிலவியது. வன்னிப் பகுதிகளிலும், பூவரசங்குளப் பகுதியிலும் (அநுராதபுரம்) பொலநறுவை, களுத்துறை, தெய்வந்துறை ஆகிய இடங்களிலும் ஆலயங்கள் இருந்தமைக்கான சான்றுகள் கிடைத்துள்ளன.

(ஈ) நாயன்மார்கட்டில் உள்ள வெயிலுகந்த பிள்ளையார் கோயில், அரசகேசரிப் பிள்ளையார் கோயில், இணுவிலிலுள்ள கருணாகரப்பிள்ளையார் கோவில், நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் கோயில், சுழிபுரத்திலுள்ள கன்னைக்கோதிக் காக்கைப் பிள்ளையார் கோயில், மானிப்பாய் மருதடி விநாயகர் கோயில் முதலியன யாழ்ப்பாணத்தில் விளங்கும் பிரதான விநாயகர் கோயில்களாகும்.

(உ) ஈழத்தின் கிழக்கில், மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள அமிர்தகழி மாமாங்கப்பிள்ளையார் கோயில் புகழ்பெற்றதொரு கோயில். மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றினாலும் உயர்ந்து விளங்குவது இக்கோயில். ஆடி அமாவாசைக் காலங்களில் அமிர்தகழித் தீர்த்தத்தில் நீராடிப் பிதிர்க்கடன் செய்யும் வழக்கம் நிலவி வருகின்றது. அகன்ற வீதிகள் அமைந்த அமைதியான சூழலில் விளங்கும் இக்கோயிலின் சுற்றுப்புறங்களில் மடாலயங்களும் சில உள்ளன.

10\. (அ) கதிர்காமத்தில் மூலஸ்தானத்திலே திரையிடப்பட்டுத் திரைக்கு வெளியே வேட்டுவ மரபில்வந்த கப்புறாளைகள் என்னும் பூசாரிகள் வாயைக் கட்டிக்கொண்டு தீபாராதனை நடத்துவர். திரையினுள்ளே புனிதப் பெட்டி ஒன்று உள்ளது. அதுவே முருகப்பெருமானின் சின்னமாக விளங்குகின்றது. திருவிழாக் காலங்களிலே இந்தப் புனிதப் பெட்டியை யானை மீது வைத்துத் திரையிட்டுத் தலைமைப் பூசாரி அணைத்துக்கொண்டு வருவார். இந்தத் திருவீதியுலாவின்போது நேர்த்திக்கடன் செலுத்தும் அடியார் கர்ப்பூரச்சட்டி, காவடியாகியவற்றைச் சுமந்து வழிபாடு செய்து தொடர்ந்து வருவதும், 'அரோகரா'' ''சாது சாது'' என்ற கோஷம் எழுப்புவதும் பத்தியை மிகுவிக்கும் காட்சிகளாகும்.

(ஆ) செல்வச்சந்நிதியிலே மூலஸ்தானத்தில் வேலாகிய ஞான சத்தி பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. ஆலயங்களிலே இடப்படுவதுபோல, மூலஸ்தானத்தின் முன்பு திரையிடப்பட்டிருக்கும். ஆனால் கதிர்காமத்தைப்போலத் திரைக்கு வெளியே நின்று தீபாராதனை செய்யப்படுவதில்லை, திரை நீக்கப்படப் பூசாரியார் மூலஸ்தானத்தில் நின்று வாயைக் கட்டிக்கொண்டு மௌனமாகத் தீபாராதனை காட்டுவார். இவையே இரு ஆலயங்களிலும் நடைபெறும் வழிபாட்டிலுள்ள ஒற்றுமை வேற்றுமைகளாகும்.

(இ) நல்லூர்க் கந்தசுவாமி கோயிலிலே மாகோற்சவங்களோ பூசைகளோ நேரக்கிரமம் தவறாது நடைபெற்று வருவது சிறப்பாகும். குறித்த நேரத்தில் வேலாயுதப் பெருமானும் வள்ளி தெய்வானையும் பெரும்பாலான மகோற்சவ தினத்தில் வீதியுலா வந்து அருள்பாலிப்பர். பத்தாந் திருவிழா, கார்த்திகைத் திருவிழா, பூங்காவனம் ஆகிய பெருவிழாக்களில் மட்டும் முத்துக்குமாரசுவாமி வள்ளி தெய்வானை சமேதராகத் திருவீதி உலாவிற்கு எழுந்தருளுவார். தேர்த்

திருவிழாவில் ஆறுமுகசுவாமி சத்திகள் சமேதரராய் எழுந்தருளுவார். பத்தியைக் கனிய வைக்கும் அழகார்ந்த தெய்விகக் கோலத்தில் பெருமான் எழுந்தருளித் திருவீதியுலா வரும் காட்சி கண்கொள்ளாக்காட்சி.

(ஈ) தமிழ்நாட்டிளவரசியான மாருதப்புரவீகவல்லி என்பாள் தன்னைப் பிடித்த குதிரைமுகம் என்ற நோய் தீராது பெரிதும் வருந்தினாள். மாவிட்டபுரத்தில் எழுந்தருளி அருள் பாலிக்கும் முருகப்பெருமானின் மகத்துவத்தினைக் கேள்வியுற்று அவள் அங்கு வந்து கோயிலைப் புனர்நிர்மாணம் செய்து பத்தி கனிய மனங்கசிந்துருக வழிபாடு நிகழ்த்தினாள். அவளின் வழிபாட்டிற்கு இரங்கியருளிய பெருமான் அவளின் பிணியினைப் போக்கியருளினார். குதிரை முகம் நீங்கிய தலம் என்னும் பொருளில் மாவிட்டபுரம் என்ற பெயர் இத்திருப்பதிக்கு அமைந்தது.

(உ) முல்லைத்தீவு மாவட்டத்தில் குமாரபுரம் என்ற முருக தலம் ஒன்று உள்ளது. அந்நியர் ஆட்சிக்காலத்திலும் சிதைவுபடாது நிலைத்திருந்த பெருமை இவ்வாலயத்திற்கு உண்டு. பொலநறுவைக் காலமாகிய பதினோராம் நூற்றாண்டுக்கு முன்பே அமைக்கப்பட்ட குமாரபுரத்து முருகன் கோயில் விக்கிரகம் அந்நியரின் அழிவுக்கரங்களிலிருந்து காப்பாற்றப்பட அது கந்தவனக் கோயிலுக்கு எடுத்துவரப்பட்டு அங்கேயே இன்றும் விளங்கிவருகின்றது

11. (அ) ''நந்தலாலனாகிய கண்ணபிரானே! நெருப்பினுள்ளே விரலை வைத்தாலும் அது உன்னைத் தொடுவதுபோன்ற இன்பத்தைத் தருகின்றது'' என்று பாரதியார் கண்ணபிரானின் பெருமையை எடுத்துக்கூறுகின்றார். ''தீபோன்ற துன்பங்களும் உன் அருளாலே இன்பம் ஆகின்றன. நான் நன்மை தீமையாவும் உன் செயல் என்று உணரப் பெற்றேன்'' என்பதே இதன் கருத்து.

(ஆ) திருமாலின் பெருமையைப் போற்றிப் பாடியவர்கள் ஆழ்வார்கள் எனப்படுவர் இவர்கள் எமது சமயகுரவர்களை ஒத்தவர்கள். திருமாலின் பத்தியிலே ஆழ்ந்து விடுபவர் என்பதே 'ஆழ்வார்' என்ற சொல்லின் பொருளாகும். ஆழ்வார்களின் தொகை பன்னிரண்டு. பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள் என்னும் நாச்சியார். திருமங்கையாழ்வார் என்போர் அவர்களுட் சிலர் இவர்கள் இயற்றியருளிய பாசுரங்களின் தொகுப்பு நூல், நாலாயிரத்திவ்வியப்பிரபந்தம் தொகுத்தவர் நாதமுனிகள்.

(இ) திருமால், எமது பழந்தமிழ் இலக்கியங்களிலும், இலக்கண நூலாகிய தொல்காப்பியத்திலும் தெய்வமாகப் போற்றப்படுகிறார் தொல்காப்பியம், இவர், காடும் காடு சார்ந்ததுமாகிய முல்லைநிலத்தில் எழுந்தருள்வர் எனக் கூறும். பரிபாடலில் மாயோனை இவரைப் போற்றிவணங்கும் பாடல்கள் உள்ளன. இருக்கு வேதத்தில் இவர் நாரயணன் என அழைக்கப்படுகிறார். இலங்கையில் மிகப் பழங்காலத்திலேயே திருமால் வழிபாடு நிலவியது. தெய்வந்துறையிலே திருமாலின் கோயில் இருந்து அழிந்தமைக்கான சான்றுகள் காணப்படுகின்றன வவுனிக்குளம், பண்டுவாஸநுவர, குருநாகல் முதலிய இடங்களிற் பண்டைக்கால விட்டுணு ஆலயச் சின்னங்கள் காணப்படுகின்றன.

(ஈ) வடமாராட்சியில் வல்லிபுராழ்வார் கோயில் உண்டு பொன்னாலையில் வரதராசப் பெருமாள் கோயில் உள்ளது. யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையில் ஸ்ரீவேங்கடவரதராசப் பெருமாள் கோயில் நிலவுகின்றது.

(உ) வல்லிபுர ஆழ்வார் கோயிலில் பதினைந்து நாள் உற்சவம் நடைபெறும். இவ்வுற்சவத்தில் வெண்ணெய்த் திருவிழா குறிப்பிடத்தக்கது. பதினைந்தாம் நாள் தீர்த்தத்திருவிழா கடலிலே வல்லிபுர ஆழ்வாரின் சக்கரத்தைப் படகிலே கொண்டுசென்று நடத்தப்படும். இது கண்கொள்ளாக் காட்சியாகவும் பத்திபரவசத்தினை மிகுவிப்பதாயும் விளங்கும்.

12. (அ) ஒருகால் பிரமன் தானே படைப்புக்கடவுள் என்று செருக்குற்றான். அவனது செருக்கை அடக்குமாறு சிவபெருமான் தங்குமாரராகிய வைரவக்கடவுளைப் பணித்தருளினார்; அவரின் பணிப்பை ஏற்று வைரவக்கடவுள் சென்று பிரமனின் தலைகளில் ஒன்றைக் கிள்ளியதோடு அவன் அகந்தையையும் அடக்கியருளினார்.

(ஆ) வைரவக்கடவுள் கிராமங்களின் காவற் கடவுளாவர். கிராம மக்கள் பேய், பசாசுகள், சிறு தெய்வங்கள் ஆகியவற்றால் துன்பம் அடையாதிருக்க இவரையே வேண்டி வழிபடுகின்றனர். மரங்களின் கீழும் சிறுகோயில்களிலும் இவரைச் சூலவடிவில் எழுந்தருளச் செய்து மக்கள்வழிபடுவர்

(இ) அந்நியராகிய போர்த்துக்கேசர், ஒல்லாந்தர் காலத்தில் மதச்சகிப்பின்மை நிலவியது. சைவமக்களின் கோயில்கள் இடிக்கப்பட்டன, விக்கிரகங்கள் அகற்றப்பட்டன: கோயிற்பொருட்கள் கொள்ளை போயின. விக்கிரக வழிபாடு செய்யாதவாறு சைவமக்கள் தடைசெய்யப்பட்டனர். இந் நிலையிலே அவர்கள் தமது வீடுகளிலே சூலங்களை குத்திவைத்து வழிபாடு செய்துவந்தனர். இன்றும் இவ்வழிபாட்டுமுறை ஈழமெங்கும் பரவலாகக் காணப்படுகின்றது.

(ஈ) வைரவக்கடவுள் நீலநிறமும் கடைவாயின் இரு புறமும் வெளிப்பட்டு நிற்கும் இரு பற்களும், உடையவர் எலும்பு, மண்டையோடு கோத்த மாலைகள் அணிந்து பயங்கர கோலத்திற் காட்சிதருபவர், ஒரு காலத்தில் இவருக்கு மிருக பலியிட்டு வழிபடும் வழக்கம் இருந்தது. இன்று அது கைவிடப்பட்டுவிட்டது. ஆலயங்களின் காப்புக்கு வைரவக்கடவுளே பொறுப்பாளர் எனக் கொள்வர், எனவே அதிகாலையில் முதற் பூசை நடந்து அவரிடம் இருந்து ஆலயத் திறவுகோலான முத்ரா தண்டத்தினைப் பெறுவதாகப் பாவனை வழிபாடு நடைபெறும், இறுதியில் அவரிடம் அதனைத் திருப்பியளிப்பதாகவும் கொள்ளப்படுவதால் ஆலயங்களின் பூசை முடிவில் பாயசன்னம் படைத்து வைரவக் கடவுளுக்குப் பூசை செய்வது வழக்கம்.

(உ) சிவாலயங்களில் பரிவார தெய்வங்களில் ஒருவராகவும் மேற்குறித்ததுபோல ஆலய காவலராகவும் வைரவக்கடவுள் கொள்ளப்படுகின்றார்.

13. (அ) சைவவினாவிடையிலே ஆசிரியர் கேள்விகேட்பது போலவும் மாணக்கர் விடை கூறுவதுபோலவும் சைவசமய சம்பந்தமான அடிப்படை உண்மைகள் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. இம் முறை பாடசாலையில் வகுப்பு நடத்துவது போன்றது என்பது தெளிவு.

(ஆ) இறைவன் உலகத்தின் கருத்தாவாய் விளங்குதல், என்றும் உள்ளவராதல் (அநாதி) எங்கும் நிறைந்தவராதல் (சர்வவியாபகம்), எல்லாம் அறிந்தவராதல் (சர்வஞ்ஞத்துவம்) ஆகிய இயல்புகள் கூறப்படுகின்றன.

(இ) நாவலர் பெருமான் தமது இளமைக் காலத்திலே ஆங்கிலம் கற்கக் கிறிஸ்தவ பாடசாலை ஒன்றுக்குச் (வெஸ்லியன் மிஷன் பாடசாலை - இன்றைய யாழ்ப்பாண மத்திய கல்லூரி) சென்றார். அங்குக் கிறிஸ்தவசமயப் பிரசாரத்துக்குப் பாதிரிமாரும் போதகர்களும் கையாளும் வழிவகைகளை அவதானித்தார். பாதிரிகள் கிறிஸ்தவ சமய உண்மைகளை மிக எளிமையான முறையில் வினாவிடைகளாய் அமைத்து நூல் எழுதியுள்ளமையைப் பார்த்தார். இத்தகைய வினாவிடை 'கற்றிக்கீசம்' (Catechism) எனப்படும். தம் காலத்தில் சைவசமயக் கோட்பாடுகளையும் அடிப்படைகளையும் தெரியாதிருந்த சைவமாணக்கருக்கு அவற்றை எடுத்து விளக்க இவ்வினாவிடைமுறை உகந்ததாய் அவருக்குத் தோற்றியது. எனவே கிறிஸ்தவ பாதிரிமாரின் "கற்றிக்கீசம்" நூல்முறையே சைவவினாவிடை எழுத நாவலருக்குத் தூண்டுகோலாயிற்று.

(ஈ) சைவாசாரங்களான ஆலயவழிபாடு, விபூதி உருத்திராக்க தாரணம், விரதங்களை அநுட்டித்தல், கடவுள் பற்றிய அடிப்படை உண்மைகள் ஆகியவற்றை அறிந்து கொள்வதற்கும், சிவனடியார் பெருமை, திருமுறைகளின் பெருமை, வேதசிவாகமங்களின் முதன்மை என்பனவற்றை உணர்ந்து கொள்வதற்கும் சைவவினாவிடைகள் (முதலாம், இரண்டாம் புத்தகங்கள்) எமக்குப் பயன்படுகின்றன நாவலர்பெருமான் காலத்தில் இன்று போலச் சைவசமய உண்மைகளை உணர்ந்து கொள்வதற்கான நூல்களோ ஆசிரியர்களோ கிடைப்பது அரிதாயிருந்தது. இந்தநிலையில் நாவலரின் சைவவினாவிடைகள் இத்தேவைகளை நிறைவு செய்யும் அடிப்படை நூல்களாய் விளங்கின.

(உ) முதலாம், இரண்டாம், நான்காம் பாலபாடங்கள், சைவசமய சாரம் என்ற சைந்நூல், திருவிளையாடற்புராண வசனம் (பரஞ்சோதி முனிவர் இயற்றிய திருவிளையாடற் புராணத்தின்

சாரத்தை வசனவடிவில் எழுதியது). பெரியபுராண வசனம் (சேக்கிழார் சுவாமிகளின் திருத்தொண்டர் பெரியபுராணத்தின் சாரத்தை வசனமாய் ஆக்கியது) ஆகியனவே நாவலர் சைவசமய உண்மைகளை அறிவதற்கு எமக்காய் எழுதிய நான்கு நூல்களாம்.

14. (அ) நாம் ஓர் ஊரை அடைய வேண்டியுள்ளது. அந்த ஊருக்கு ஆறு வழிகள் உள்ளன. விரும்பியவர் தாம் விரும்பிய வழியிலே சென்று அவ்வூரை அடையலாம். இதுபோலவே முத்தியை அடைவதற்கான நெறிகள் பண்டைக் காலத்தில் ஆறாக வகுக்கப்பட்டன. இவற்றில் அந்த நெறி அதாவது எந்தச் சமயத்தைக் கடைப்பிடித்தாலும் முத்தி அடைவது உறுதி. இவை ஆறும் வேதத்தை முதல் நூலாகக் கொண்ட வைதிக சமயங்கள். இவற்றில் இது நல்ல சமயம், அது தீயசமயம் என்று பெருமை பேசுவதும் இழித்துரைப்பதும் தவறு. 'இவ்வாறு பேசுவோர் மலையை நோக்கிக் குரைக்கும் நாய்களை ஒத்தவர்' என்பர் திருமூலர்.

(ஆ) சைவசமயம் மிகவும் பழைமையானது. சிந்து வெளியிலே கிடைத்த முத்திரைகள், உருவங்கள் முதலான சின்னங்கள் அங்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு சிவவழிபாடு நிலவிய தற்குச் சான்றுகளாகும். சிவபெருமானை எல்லா நாட்டவர்க்கும் இறைவனாகவும் தென்னாடாகிய தமிழ்நாட்டிற்குச் சிவனாகவும் போற்றிப்பாடி இன்புறுகின்றார் மணிவாசகர். இவரின் கூற்றுச் சைவசமயத்தின் பரந்த மனப்பான்மையைக் காட்டுவதாகும். சிவபெருமான் யாவையும் கடந்த நிலையில் சொரூப லட்சணமுடையவராய் விளங்குவர். ஆன்மாக்களிலே பேரருள் பூண்டு அவற்றிற்காகத் தடத்தலட்சணத்தை உடையவராய் அவர் வருகையில் அருவம், உருவம், அருவுருவம் ஆகிய திருமேனிகளைக் கொள்வர் என்று கூறிச் சிவபெருமானை அன்போடு வழிபட வழிகாட்டுவது சைவசமயத்தின் பெருஞ் சிறப்பு.

(இ) பழந்தமிழர் விஷ்ணுவை மாயோன் என்ற பெயராலும் திருமால் என்ற பெயராலும் அழைத்து வழிபட்டனர். மாயோன் என்ற சொல்லிற்கு மாலை நிறம்(கருநீலம்) உடையவன் என்பது பொருள். திருமால் என்பதற்குத் தெய்வத்தன்மை நிறைந்த பெரியோன் என்பது பொருள். மால் — பெரியவன். முல்லை நிலத்தில் (காடும் காடு சார்ந்த இடமும் முல்லை) வாழ்ந்தோர் மாயோனை வழிபட்டு வந்தனர். இவ்வுண்மையை,

'மாயோன் மேய காடுறை உலகம்' என்று தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார்.

(ஈ) சிவபெருமான் ஞானசொரூபியாகத் தியானத்தில் ஆழ்ந்திருப்பார். அவ்வேளையில் ஆன்மாக்கள் செயலற்று ஒடுங்கி இருக்கும். இதனைக் காணும் சத்தி பெருங்கருணை பூண்டு உயிர்களுக்கு அருள் புரிவாள். சிவபெருமான் தந்தையாதலால் அவரை அணுகுவது கடினம். சத்தியோ தாய்போல உயிர்கள் தன்னை அணுக இடமளிப்பாள். இதனால் சிவனின் துணைவி சத்தி என்று கருதிய மக்கள் அவளைச் சிவனிலிருந்து வேறாக்கி வழிபடலாயினர். இந்த வழிபாட்டின் பயனே சாக்த மதம் ஆயிற்று.

(உ) ஆரியர் கி.மு. 2000 ஆண்டளவில் இந்தியாவிற்கு வந்து குடியேறினர். அவர்களின் வருகைக்கு முன்பே சிந்துவெளி மக்கள் கணபதியை வழிபட்டனர் என்று தெரிகிறது. இந்திய வரலாறு குறிப்பிடுவது ஏற்றுக் கொள்ளப்படத்தக்கதாயின் சிவவழிபாடு போலவே கணபதிவழிபாடும் கி.மு. 5000 ஆண்டுப் பழைமை கொண்டது எனக் கொள்ளலாம்.

15. (அ) சிவானுபூதிபெற்று யோகநிலையிலே புலன்களை அடக்கித் தம் வாழ்வாலும் வாக்காலும் மக்களுக்கு வழி காட்டிய ஞானச் செல்வர்கள் 'சித்தர்' என்ற பெயரால் அழைக்கப்படுவர். இவர்கள் பாரதநாடு முழுவதும் ஆங்காங்கே வாழ்ந்து ஞானஒளி பரப்பினர். தமிழ்நாட்டிலும் இத்தகைய சித்தர்கள் பலர் அவ்வப்போது வாழ்ந்து வந்துள்ளனர். இவர்களிற் பதினெண்மர் குறிப்பிடத்தக்கோர் இவர்களைப் பதினெண் சித்தர்கள் என்றும் வித்தகச் சித்தர்கணம் என்றும் அழைப்பதுண்டு. அகத்தியர், திருமூலர், சிவவாக்கியர், பட்டினத்தார், பாம்பாட்டிச் சித்தர், குதம்பைச் சித்தர், அகப்பேய்ச் சித்தர் என்போர் இவர்களுட் சிலர்.

(ஆ) சித்தர்கள் பித்தர் போலவும் பேயர்கள் போலவும் திரிவர். எளிய சொற்களிலே பெரிய தத்துவங்களைப் பாடல்களாய் யாத்து அருளுபதேசம் செய்வர். பக்குவ ஆன்மாக்களாய்

உள்ளோருக்கு உபதேசம் புரிந்து ஆட்கொண்டு சீடராக்குவர். அணிமா, மகிமா, முதலான எட்டுவகைச் சித்துக்களிலும் வல்ல இவர் தமது அடியார்களுக்காகப் பல அற்புதங்களையும் நிகழ்த்துவதுண்டு. கூடுவிட்டுக் கூடு பாயவும் நினைத்த உருவங்களை நினைத்தவாறு கொள்ளவும் வல்ல இவர்கள் வைத்தியம் முதலிய உடற்பிணி போக்கும் கலையின் மூலமும் மக்களுக்கு உதவுவதுண்டு.

(இ) ஈழத்து ஞானச்செல்வர்களின் வரிசையிலே முதலிடம் வகிப்பவர் கடையிற் சுவாமிகள், தென்னிந்தியாவிலே கன்னடதேசத்தில் நீதிபதியாய் விளங்கிய அவர், தம் பதவியைத் தூசு போலத்துறந்து யாழ்ப்பாணம் வந்து பெரிய கடையிலே உலாவித் திரிந்து ஞான ஒளி பரப்பியவர், இவரின் துறவுத் திருநாமம் முத்தானந்தர் என்பதாகும். இவரின் சீடர் குழந்தைவேற் சுவாமிகள்; நேர்சீடர் என்ற சிறப்புக்குரியவர் செல்லப்பாச் சுவாமிகள். இவரது சீடர் யோகர் சுவாமிகள். நாவலர் சீடர் பரம்பரையிற் பயின்ற கரம்பன் மகாதேவ சுவாமிகள், மலைநாட்டவராயிருந்து கீரிமலையில் வந்து அருளாட்சி புரிந்த நவநாத சித்தர் சுவாமிகள், கதிர்காமத்து முத்துலிங்க சுவாமிகள், மல்லாகத்து விசாலாட்சி அம்மையார், அண்மையில் வாழ்ந்து சமாதி நிலையடைந்த குடைச்சாமிகள் என்னும் கந்தையாச் சுவாமிகள் முதலியோர் ஈழத்து ஞானச் செல்வர்களின் வரிசையிலே முதன்மையான இடம் வகிப்போராவர்.

(ஈ) இவர்கள் இந்நாட்டில் சைவசமய சாதனைநெறிகளை வளர்த்தனர். சித்தர் பரம்பரை ஒன்றினை உருவாக்கினர். தமது அடியார்களின் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படுத்தினர். சமய தத்துவங்களையும் உண்மை நெறிகளையும் பாடல்களாகவும், மகாவாக்கியங்களாகவும் மக்களிடையே பரப்பி அவர்களை நன்னெறிப்படுத்தினர்: மடங்களை ஏற்படுத்தி அங்குப் பசுபுண்ணியங்களும் பதிபுண்ணியங்களும் நன்கு நிறைவேற வழிசமைத்தனர்; உலகவாழ்வின் நிலையாமையை உணர்த்தி ஆன்மிக வாழ்விற்கு வழிகாட்டினர்.

(உ) யோகர் சுவாமிகள் (1872 — 1964) மாவிட்டபுரத்தில் அம்பலவாணர் என்ற சைவப் பெரியார்க்கும் சின்னாச்சிப்பிள்ளை என்ற அருங்குணச்செல்விக்கும் புதல்வராய் அவதரித்த யோகர் சுவாமிகள், சிறுவயது தொடக்கம் கொழும்புத்துறையில் வளர்ந்தார்: சம்பத்திரிசியார் கல்லூரியிலே கல்வி கற்றார்: இரணைமடுக்குளக்கட்டு வேலைகள் நடந்த காலத்தில் அங்குக் களஞ்சியப் பொறுப்பாளராய்ச் சிலகாலம் பணியாற்றினார்; பின்பு செல்லப்பாச் சுவாமிகளின் அருட்பார்வை பெற்று அவரின் சீடராகி ஆன்மிக வாழ்வில் தலைப்பட்டு ஞானியர் ஆயினார். ''ஒரு பொல்லாப்பும் இல்லை.'' ''முழுதும் உண்மை''. ''எப்பவோ முடிந்தகாரியம்'' ''நாமறியோம்'' என்பன இவர் உபதேசித்த மகாவாக்கியங்கள். இவர் அவ்வப்போது இயற்றிய பாடல்கள் ''நற்சிந்தனை'' என்ற பெயரில் நூலாய் வெளிவந்துள்ளன. இவர், தம் அடியார்களுக்காகப் பல அற்புதங்கள் நிகழ்த்தினார் என்று அறிகின்றோம்.

16. (அ) திருக்கைலாயத்திலே சிவபெருமானின் அணுக்கத் தொண்டராய் விளங்கிய ஆலால சுந்தரர் பெருமானின் பணிப்பால் தமிழகத்திலே திருநாவலூரிலே பிராமணர் குலத்தில் வந்து அவதரித்தருளினார். பெருமான் இவருக்குக் கொடுத்த வாக்குறுதியின்படி இவரின் திருமணத்தின்போது பிராமணராய் வேடங்கொண்டு இவர்முன் வந்து ''நீ எனக்கு வழிவழி அடிமை'' என்று வாதிட்டுத் தமக்குப் பணியாற்ற வருமாறு கேட்டார். ''குற்றமில்லாத அந்தணர் பிறிதோர் அந்தணருக்கு அடிமைப்படல் என்பதை நீ சொல்ல இன்றுதான் கேட்கின்றோம்'' என்று சுந்தரர் சிவபெருமானோடு வாதிட்டார். அதுகாலை அவர் சிவபெருமானைப் ''பித்தன்'' என்று ஏசினார். சிவனோடு வாதிட்டு வழக்குரைத்தமையால் சுந்தரருக்கு வன்றொண்டர் என்ற திருநாமம் அமைந்தது.

(ஆ) பெரியபுராணம் சேக்கிழார் சுவாமிகள் அருளிச் செய்தது. இத்திவ்விய நூலிலே, தடுத்தாட்கொண்ட புராணம் என்ற பகுதியிலே மேற்குறிப்பிட்ட வரலாறு அமைந்துள்ளது.

(இ) சிவபெருமான் அந்தணராய்த் திருக்கோலம் பூண்டு சுந்தரரின் திருமணப்பந்தலுக்கு எழுந்தருளினார், அதுகாலை அவரது நெற்றியிலே திருநீறு துலங்கித் தோன்றியது. அத்திருநீறு

நெற்றிக்கண்ணாகிய சூரியகதிரை மறைக்கும் வெள்ளைத்துணிபோன்று காட்சிதந்தது. சந்திரன் ஆகிய நெற்பயிரானது முதிர்ந்து சாய்வதுபோன்று தோளின் பக்கலிலே அவிழ்ந்த குடுமியின் வெண்மயிர் விளங்கிற்று. திருக்காதுகளிலே உருத்திராக்கத்தினாலாகிய குழைகள் தாழ்ந்து தூங்கின, திருமார்பிலே பூணூலோடு கூடிய உத்தரீயம் பொலிந்து தோன்றியது. சூரியனை மறைக்கும் கைக்குடை திருக்கரத்தில் இருந்தது. பேரழகே முதிர்வுற்று விளங்குகிறதோ, மூப்பின் வடிவே இதுதானோ, உண்மையான வைதிகம் என்ற சமயம் விளைவித்த மூலப் பொருளோ என்று ஐயப்படும்படியாகச் சிவனாரின் அழகு முதிர்ந்த திருக்கோலம் காட்சி தருவதாயிற்று. இது சேக்கிழாரின் வருணனை.

(ஈ) இவ்வாறு அந்தணர் கோலத்தில் வந்த சிவபெருமான் ''இந்நாவல்நகரூரன் என் அடியான்''என்று சுந்தரரை நோக்கி உரைத்தருளினார். இதனைக் கேட்ட மற்றைய அந்தணர்கள் ''இவன் நினைந்தது என்ன?, என்று அப்பெருமானருகு சென்றனர்; கோபித்தனர்; சிரித்தனர். சுந்தரரும், ''வேதியன் மொழி நன்று! நன்று!'' என்று சிவபெருமானை நோக்கிச் சிரித்தார். சிரித்தவரை நோக்கியருளிய பெருமான் ''இதோ உன் முன்னோன் எழுதிய அடிமைச் சீட்டு, இதனை நோக்காது நீ சிரித்தது என்னேடா'' என்றுரைத்தருளினார். இதற்கு விடையாகவே ''அந்தணர்கள் வேறோர் அந்தணர்க்கு அடிமையாதல் பேச இன்று உன்னைக்கேட்டோம்'' எனச் சுந்தரர் கூறினார்.

(உ) ''யான் பித்தன் ஆயினும் ஆகுக, பேயன் ஆயினும் ஆகுக. நீ என்னைப்பற்றி எத்தனை எத்தனை தீங்குகளைக் கூறி இழிந்தாலும் சரி, அதற்கு நான் வெட்கம் அடையப்போவதில்லை. அவ்வளவுக்கும் நீ என்னைப் பற்றி அறியாமலிருந்தால் வெறும் வாய்ச்சாதுரியம் பேசவேண்டாம். எனக்கு நீ பணி செய்தல் வேண்டும்'' என்று சிவபெருமான் விடையளித்து அருளினார். அடியவர்க்கு இறைவன் எத்துணை எளியர் என்பதும் அவர் தாமாகவே வந்து பக்குவ ஆன்மாக்களுக்கு அருள் புரிவார் என்பதும் இக்கூற்றிலிருந்து புலனாகின்றன.

17 (அ) ஆணவம் என்ற முனைப்பாலே முற்றாக மூடப்பட்ட அரக்கனான சூரபன்மனிடத்தும் பரம்பொருளான முருகப் பெருமான் பேரருளுடையர் என்பதையும், அப்பேரருள் காரணமாகவே அவர், அவ்வாறு தம் திருப்பெரு வடிவைக் காட்டியருளி அவனின் அறியாமையைச் சற்றே போக்கியருளினார் என்பதையும் அவர் எடுத்தருளிய வியன் பெருவடிவம் எமக்குப் புலப்படுத்துகின்றது.

(ஆ) கடல் சூழ்ந்த பூமி, திசைகள், நிலையான பல உலகங்கள், அண்டங்கள், தேவர்கள் மற்றுமுள்ள உயிரினங்கள், உயிரற்றவை யாவும் கருணை வள்ளலான முருகப்பெருமானின் திருமேனியிலே அமைந்து காட்சி தந்தன. திருப்பாதங்களிலே சகல மலைகளும் அடங்கின. அவற்றின் முற்பாகத்தில் கடல்கள் யாவும் தோற்றின. திருவிரல்களிலே சூரிய சந்திரர்கள் விண்மீன்கள், கிரகங்கள் காணப்பட்டன. காற்பரடுகளிலே பலவேறு தேவர் தலைவர்களும் அரக்கரும் தோற்றினர். கணைக் கால்களிலே முனிவர்கள் காணப்பட்டனர். சிந்தாமணி முதலிய தேவமணிகள் தோன்றின. முழந்தாள்களிலே தேவ உலக இசைவாணர் அடங்கினர். இவ்வாறு சகலவற்றையும் தம்முள் அடக்கித் தாமே எல்லாமாக முருகப்பெருமான் நின்றருளினார்.

(இ) அப்பெருமானின் வியன்பெரு வடிவத்தை அவர் தந்தருளிய சிறிய நல்லுணர்ச்சிகொண்டு சூரபன்மன் காணும் பேறடைந்தான். 'அவன் அருளாலே அவன் தாள் வணங்கி' என்னும் மாணிக்கவாசகசுவாமிகளின் திருவாக்கு சூரபன்மனாகிய கொடியோனுக்கும் பொருந்துவதாயிற்று.

(ஈ) ''அழகிய மேலான மயில் மீதிலே அமர்ந்து விளங்கிய குமரப் பெருமானை நான் பாலன் என்று இதுநாள்வரை நினைத்திருந்தேன். இவரின் இயல்புகளை என்னால் உணரல் கூடவில்லை. திருமால், பிரமன் மற்றுமுள்ளதேவர்களுக்கும் யாவர்க்கும் மூலகாரணன். இம்மூர்த்தியே அன்றோ? தூதனாய் முன்புவந்த வீரவாகு இப்பெருமானைப் ''பரம்பொருள் முதல்வன்'' என்று கூறினான். அதனையும் நான் உறுதியான மொழியாகக் கொள்ளவில்லை. இப்பொழுதுதான் இவன் யாவர்க்கும் ஈசன் என்று உணர்ந்தேன். தேவர்கள், முனிவர்கள், பிறர், மற்றும் சடப்பொருள்கள் என

யாவும் காட்டி நிற்கும் அண்ணலான இவனின் தம்முழு வடிவினையும் காணவல்லார் யாவர்? உடம்பெல்லாம் கூர்மையான பார்வையுடைய விழியினராலும் இதனைக் கண்டு முடிக்க கற்பகாலத்துக்கும் அதிகமாகச் செல்லும். திண்ணிய வலிமையுடைய எனது வன்மையான படைக்கலங்கள் அனைத்தையும் தன் அம்புகளாலே போக்கினன். அண்டங்கள், உலகங்கள், தேவர்கள், பிறசடப்பொருள்கள் யாவற்றையும் தன்னிடத்தே காணக்கூடியதாக இவன் என் கண்களுக்கு முன்னே தோன்றினன்'' என்று பலவாறு வியந்து சூரபன்மன் தன்னுள்ளே கூறினன்.

(உ) ''தேவரின் சிறையை நீக்கி முருகப் பெருமானுகிய வள்ளலை வணங்கி இந்த ஊரிலே வாழும் உயிரைக்காக்கலாம். ஆனல் இவ்வாறு செய்வது பலவீனரின் செயல். எனக்கு இது தகுந்ததல்ல. நானே ஆயிரகோடி அண்டங்களிலும் புகழை நிலை நிறுத்தினேன்'' என்று அவன் நினைத்த வேளையில் முருகப்பெருமான் தமது வியன் பெருவடிவை மறைத்து முன்போலப் பாலராய்த் தோற்றியருளினர். அந்நிலையில் மீண்டும் ஆணவம் சூரபன்மனை மூடிக்கொண்டது. அவனின் நல்லுணர்வு அழிந்து மான உணர்வே மேலெழுந்தது.

18. (அ) ''இறைவனுள்ளே சத்தி ஒடுக்கம். இறைவனே தொண்டர்களின் உள்ளத்துள் ஒடுக்கம். எனவே அடியார்களின் பெருமையை அளவிடல் இயலாது. அவர்களுக்கு அவர்களே இணையாவர் என்று இக்காரணத்தினலேயே சேக்கிழார் கூறியருள்கின்ருர்'' என்பதே நான் அறிந்து கொள்வது.

(ஆ) அவர்கள் இறைவன்மீது அன்பு வைத்து மனத்தை ஒருமுகப் படுத்தியவர்கள். இவ்வொருமையால் அவர்கள் உலகம் யாவற்றையும் வெல்லும் ஆற்றலைப் பெற்றுள்ளனர். அவர்களுக்கு எவ்வித குறையும் இல்லை. அவர்களின் சரணுகதிநிலை மிகவும் அரிதானது. எம்மால் அந்நிலையை அடைதல் இயலாது. இறைவன் மீது கொண்ட அன்பு காரணமாக அவர்களுக்கு ஏற்படும் அன்பே தனித்தன்மையானது. இம்மை மறுமையாகிய பிறவித்துன்பங்களினின்றும் கடந்து நிற்கின்ற இயல்பு அவர்களுக்கு உண்டு. 'இறைவனைத் தமது அன்பால் இடைவிடாது வணங்கும் ஒன்றிற்காக வீடு பேற்றைக் கூட இவர்கள் வேண்டுவதில்லை. மட்பாண்ட ஓடும் மாசில்லாப் பொன்னும் இவர்களின் பார்வையிலே சமமாகவே இருக்கும். செல்வம், வறுமை என்ற வேறுபாடும் இவர்களுக்குத் தோற்றுவதில்லை. மக்கள் தொண்டே இவர்களுக்கு மகேசன் தொண்டு.

(இ) கண்ணப்பரின் அன்பு நிலையை இறைவனே பின்வருமாறு புகழ்ந்தருளுவர். (என்று சேக்கிழார் சுவாமிகள் பாடுகின்ருர்) ''அவனுடைய கோலம் யாவும் என்மீது கொண்ட அன்புக் கோலமே அவனுடைய அறிவுயாவும் நம்மை அறிய முயலும் அறிவே அவன். செய்யும் செயல் யாவும் எமக்கு இனியன.'' இதேபோலக் காரைக்காலம்மையார் திருக்கைலாயத்திற்கு எலும்புக்கூட்டு வடிவிலே தலையை நிலத்திற் பதித்து வந்தபொழுது உமாதேவியாரை நோக்கிச் சுவாமி கூறியருள்வது இது. ''வரும் இவள் நம்மைப் பேணும் அம்மை''

(ஈ) பூசலாரின் கோயில் அவரின் உள்ளமாகும். அங்கு இறைவனை இருத்தி ஞானம் என்ற விளக்கினை அவர் ஏற்றினர். இடையீடு இல்லாத தமது ஆனந்தத்தையே அபிடேக நீராகக் கொண்டு அதனல் இறைவனுக்குத் திருமுழுக்காட்டினர். அன்பையே திருவமுதாக நைவேத்தியம் பண்ணினர்.

(உ) கண்ணப்பநாயனர் திருக்காளத்தியிலே குடுமித்தேவர் எழுந்தருளியிருப்பதாக நாணன் மூலம் அறிந்தனர். அந்தக் கணத்திலிருந்து அவரின் உள்ளம் குடுமித்தேவர் வசப்பட்டுவிட்டது. தம்மை மறந்தார்; இறைவனைத் தலைப்பட்டு அவனுக்குத் தமது உமிழ் நீரால் அபிடேகம் செய்தார்; தமது குடுமியில் சூட்டிய மலரை இறைவனுக்குச் சூட்டினர்; தாம் சுவைத்து உருசி பார்த்த எச்சில் இறைச்சியைப் படைத்தார்; சிவலிங்கத் திருமேனியின் திரு விழிகளிலிருந்து குருதி வழிந்தபோது தம் கண்களையே பிடுங்கி வைத்துக் கண்ணப்பரானர். ஒரு கண்ணை மட்டுமோ? இரு கண்களையும் பிடுங்கி அப்ப முற்பட்டார். இவரின் பத்தித்திறத்திற்கு இணை

யில்லை, மாணிக்கவாசகசுவாமிகளே "கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை" என்பாராயின் அவரின் பத்தித்திறத்தினை யார்தாம் அளந்திடவல்லார்!

19. (அ) திருக்கைலாச மலையிலே ஸ்ரீ கண்ட பரமசிவன் தட்சிணா மூர்த்தியாக எழுந்தருளித் திருநந்தி தேவருக்கு வேதசிவாகமங்களின் மெய்ப்பொருளை உபதேசித்தருளினார். சந்தான குரவர் பரம்பரையானது திருநந்தி தேவரைத் தமது முதற் குரவராகக் கொண்டு ஆரம்பிக்கின்றது.

(ஆ) திருநந்திதேவர் சனற்குமார முனிவருக்கும், சனற்குமார முனிவர் சத்தியஞானதரிசினிகளுக்கும், சத்தியஞான தரிசினிகள் பரஞ்சோதிமாமுனிவர்க்கும் அருளுபதேசம் புரிந்தனர். இவர்கள் திருக்கைலாயத்திலேயே எழுந்தருளியிருந்தமையால் இவர்கள் நால்வரும் அகச்சந்தான குரவர் எனப்படுவர். பரஞ்சோதி மாமுனிவர் தமிழ் நாட்டுக்கு எழுந்தருளி ஆகாய மார்க்கமாய் வந்த காலை மெய்கண்டார் என்ற ஞானக்குழந்தைக்கு அவரின் பரிபக்குவம் கண்டு அருளுபதேசம் புரிந்தருள மெய்கண்ட சிவாசாரியார் (பரஞ்சோதி முனிவர்தம் குருவின் — சத்தியஞான தரிசினிகளின் — திருநாமத்தின் தமிழ்மொழிபெயர்ப்பாக்கிய தீட்சாநாமமே மெய்கண்டார்) மெய்கண்டார் அருணந்தி சிவாசாரியாருக்கும், அருணந்தி சிவாசாரியார் மறைஞான சம்பந்த சிவாசாரியாருக்கும், மறைஞான சம்பந்த சிவாசாரியார் உமாபதி சிவாசாரியாருக்கும் அருளுபதேசம் புரிந்தருளினர். இந்நால்வரும் திருக்கைலாயத்துக்குப் புறத்தே தமிழ் நாட்டிலே வாழ்ந்த ஞான குருபரம்பரையாதலாலே புறச்சந்தான குரவர் எனப்படுவர்.

(இ) ஞான நூல்களைக் கற்றுத் தேர்ந்து விடுவதால் மட்டும் பரிபக்குவ நிலை கிட்டிவிடாது. குருவின் அருட்பார்வை கிட்டும் பொழுதுமட்டுமே அந்நிலை ஏற்படும் என்பதை உணர்கிறேன். அருணந்தி சிவாசாரியார் சகலாகம பண்டிதராயிருந்தபோதும் ஆணவம் அவரைவிட்டு நீங்கவில்லை. குழந்தைதானே என்ற அலட்சியநோக்குக் கொண்டு மெய்கண்டாரை நோக்கி அவரைப் பரிசோதிக்க எண்ணி, "ஆணவம் என்றால் என்ன?" என்று கேட்டார். மெய்கண்டார்! பதில் கூறாது மௌனமாக அருணந்தியாரையே சுட்டிக்காட்டியருளினார். இதிலிருந்து முதலிற் குறித்த உண்மை புலனாகின்றது.

(ஈ) சைவசித்தாந்த நெறியினைச் சாத்திர நூல் வடிவில் தமிழுலகிற்கு ஈந்தவர்கள் மெய்கண்டாரும் அவர்தம் சீடபரம்பரையுமே. இத்தொண்டினோடு அவர்கள் நின்றுவிடவில்லை. சிறந்ததொரு குருசீட பரம்பரையினை உண்டாக்கிச் சாத்திர அறிவைச் சைவமக்களிடையே பரப்பினர். சித்தாந்த சைவமானது தத்துவ ரீதியான வளர்ச்சியும் வாழ்வும் பெற்றது சந்தான குரவர்களாலேயே என்பதில் ஐயமில்லை.

(உ) சிவஞான போதத்திற்கு முன்பே திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார் ஆகிய மெய்கண்ட சாத்திர நூல்களுந் தோன்றிவிட்டன பின்னரும் அருணந்தி சிவாசாரியார், உமாபதி சிவாசாரியார், மனவாசகம்கடந்த தேவர் ஆகியோரின் சாத்திர நூல்களும் தோன்றின. முன்னைய இரண்டின் சாரத்தையும் உள்ளடக்கிப் பின்பு தோன்றிய சாத்திர நூல்களுக்கும் வழிகாட்டி முழுமையான தத்துவக்கருவூலமாக விளங்குவது சிவஞான போதமே. எனவே அதுவே சைவ சித்தாந்த சாத்திரங்களில் முதன்மையான நூல்.

20. (அ) 'வேதம், பசு, ஆகமம் அதன்பால்' இந்தியாவிலே தோன்றிய 'இறைவன் உளன்' என்னும் கோட்பாடு உடைய எல்லாச் சமயங்களுக்கும் முதன் நூலாய் விளங்குவன நால்வேதங்களே. இச்சமயங்கள் யாவும் வேதத்தின் சாரத்தினை உள்ளடக்கித் தத்தம் குறிக்கோளுக்கு இசைந்த ஆகமங்களைப் பெற்றுள்ளன. எனவே ஒவ்வொரு சமயத்திற்கும் அதனதன் கோட்பாடுகளை வலியுறுத்தும் சிறப்பு நூல்கள் ஆகமங்கள். எல்லாவற்றிற்கும் பொதுவானவை வேதங்கள்.

(ஆ) சைவசித்தாந்தத்தின் அடிப்படைக் கருத்துக்களை உள்ளடக்குபவை இருபத்தெட்டுச் சிவாகமங்கள். வைணவ சமயத்தின் கருத்துக்களை உள்ளடக்குபவை வைகாசனம், பாஞ்சராத்திரம்

என்ற இரு ஆகமங்கள். சாத்த சமயத்திற்கு உரியவை தந்திரங்கள். இவ்வாறு ஒவ்வொரு சமயப் பிரிவுக்கும் சிறப்பாக உள்ளவை ஆகமங்கள். எனவே, ஆகமம் சிறப்புநூல் என்பது பொருந்துவதே.

(இ) வேதங்கள் கன்ம காண்டம், உபாசனா காண்டம், ஞானகாண்டம் என்ற முப்பிரிவுகள் கொண்டவை. இவற்றுள் கன்ம காண்டம் பிராமணங்கள், சங்கிதைகள் என இருபிரிவுகளாய் வகுக்கப்படும். தமது விருப்பங்களை நிறைவு செய்யவும், பகைவர்கள், பகைகள் ஆகியவற்றி லிருந்து விடுதி பெறவும் குறித்த கடவுளரை யாகாக்கினியில் அவிர்ப்பாகம் வழங்கி மந்திரங்கள் ஓதிப் பாசுரங்களைப் பாடியும் வழிபடும் முறை வேதத்தின் கன்ம காண்டப் பகுதியில் விரிவாகக் கூறப் படும். கன்ம காண்டத்தின் ஒரு பிரிவு பிராமணம். அது வேள்வி செய்யும் முறைமையைக் கூறும். மற்றப்பிரிவு சங்கிதை. அது வழிபாட்டு மந்திரங்கள் பாசுரங்களின் தொகுதி. உபாசனா காண் டத்துள் அடங்கியது ஆரணியகம். இது அகநிலைத்தியான முறை வழிபாட்டிற்குரியது. உப நிடதம் பரம்பொருளாகிய பிரமத்தை ஞான நெறிமூலம் அறிந்து அதனோடு கூட வழி உரைப்பது.

(ஈ) ஆகமங்கள் அநாதியான முப்பொருள்களான பதி, பசு, பாசம் ஆகியவற்றை அடிப் படையாகக் கொண்ட தத்துவ விளக்கத்திற்கு உதவின; கோயில் அமைப்பு முறை, கோயிற் சிற் பங்களை அமைக்கும் முறை, விக்கிரகங்களை நிருமாணிக்கும் முறை ஆகியவற்றிற்கு விளக்கமும், விதியும் உரைத்தன; சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நால்வகைப் பாதங்கள், குரு, லிங்கம், சங்கமமாகிய மூவகை வழிபாட்டுமுறைகள், சிவசின்னங்கள், தீட்சை என்பவற்றின், சிறப்பையும் நுட்பங்களையும் கைக்கொண்டு ஒழுகும் வகைகளையும் எடுத்து விளக்கின.

(உ) வேத நெறிப்பட்ட வழிபாடு யாகத்தை அடிப்படையாகக் கொண்டது. எரி ஓம்பி எரியில் அவிர்ப்பாகம் அளித்து மந்திரங்கள் மூலம் வழிபாடாற்றுவது வேதநெறி. இந்நெறியும் எங்களின் ஆலயங்களிலே சிவாசாரியார்களாலே கையாளப்படுகிறது. அபிடேகம், பூசை, நைவேத்தியம், மந்திரம், அருச்சனை, தூபதீப ஆராதனை என்பன ஆகமநெறி. இவ்வழிபாட்டு முறைமையும் ஆலயங்களிலே நிகழ்கின்றது. எனவே வேதசிவாகம முறையிலேயே எமது கோயில் களில் வழிபாடு நிகழ்கின்றது என்பது பொருந்துவதே.

21. (அ) அகரம் என்ற எழுத்தானது எழுத்துக்கள் யாவுக்கும் முதலாக நின்றும் அவற்றின் ஒலிப்புக்கு மூலமாக அவற்றோடு கலந்து நின்றும் உள்ளவாறுபோல இறைவனும் ஆன்மாக்களின் உள்ளும் புறமும் எழுந்தருளி அவற்றிற்குத் தலைமை பெற்று மூலமாய் முழுமுதலாய் விளங்குகின் றார். 'அ' என்ற எழுத்தினை இவ்வகையிலே திருவள்ளுவர் இறைவனுக்கு உவமையாகக் கொண் டமை பொருந்துவதே

(ஆ) கற்றதனாலாகும் பயன் கடவுளின் திருப்பாதங்களை வழிபடலே என்பது திருவள்ளுவர் கூற்று, கல்வியும் எமக்கு இறைவன் அருளியதே, எனவே கல்வியால் அகங்காரமுற்று, 'நானே பெரியவன்' என்றெண்ணிக் கடவுளை மறந்தால் கற்ற கல்வியினாலாகும் பயன் எதுவும் இல்லை. என்று கடவுள் வணக்கத்தை எதிர்மறை முகத்தால் திருவள்ளுவர் வற்புறுத்துகின்றார்.

(இ) 'தலையே நீ வணங்காய்,' 'கண்காள் காண்மின்களோ', 'வாயே வாழ்த்து கண்டாய்', 'செவிகாள் கேண்மின்களோ' என்று திருநாவுக்கரசர் உடலிலுள்ள உறுப்புக்கள் யாவற்றையும் இறைவழிபாட்டுக்கே வழிப்படுத்துகின்றார். இதே கருத்தையே அவருக்கு முன்பு தோன்றிய திருவள்ளுவர், எண்குணத்தானாகிய இறைவனைத் தலையாலே வணங்காதவருக்கு மெய், வாய், கண், மூக்குச் செவியாகிய ஐம்பொறிகளாலாம் பயன் யாதும் இல்லை என்று வலியுறுத்துகிறார்.

(ஈ) இறைவன் பற்றற்றவன், எனினும் ஆன்மாக்கள் மீது பேரருள் உடையவன், ஆன் மாக்களோ அப்பேரருளை உணராது உலகில் நான், எனது என்னும் அகப்பற்றுக்களாலும் புறப்பற்றுக்களாலும் அவலமுறுகின்றன. எனவே பற்றில்லா இறைவனின் பற்றொன்றே எமக்கு வேண்டியது என உறுதி கொண்டு அவனது பற்றைப் பற்றிப் பிடித்தல் வேண்டும். அப்பொழுது உலகப்பற்றுத் தானாகவே நீங்கும். இது 'வள்ளுவர் திருவாக்கு'.

(உ) பிறப்புக்குக் காரணம் ஆணவமாகிய அறியாமை. அறியாமையை நீக்கி, அறிவென்னும் செம்பொருளைக் காண முயலல் வேண்டும். அந்தச் செம்பொருளே கடவுள். கடவுளைப் பற்றிய உணர்வே மெய்யுணர்வாதலின் "அவ்வுணர்வைப் பற்றி அறியாமையைப் போக்குங்கள்" என்று திருவள்ளுவர் அறிவுறுத்துகின்றார்.

22: (அ) "என்மனம் பிறர்க்கும் எனக்கும் நன்மையான எண்ணங்களைக் கொள்ளவும், எவ்வுயிர்க்கும் துன்பம் செய்யாதிருக்கவும், நல்விருப்பங்களை நாடவும் அருள்க" என்று யசுர் வேதத்திலே பிரார்த்தனை ஒன்று அமைந்துள்ளது. இதிலிருந்து நாம் பிறர்க்குத் தீமை செய்யாமல் இருப்பதுமட்டுமன்றி நன்மையும் செய்தல் வேண்டும் என்பதை அறிய முடிகின்றது. 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்", "எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதல்லால் வேறொன்று அறியேன்' முதலாகிய திருவாக்குக்களாலும் நாம் பிற உயிர்களுக்கு அன்பு செய்து வாழவேண்டியதன் அவசியத்தை உணரலாம். சமய குரவர்கள், ஞானியர். சமயப் பெரியார்களின் வாழ்க்கைகளை நோக்கினாலும் அவை அன்பையே அடிப்படையாகக் கொண்டிருப்பதைக் காணலாம்.

(ஆ) சிவனடியார்களான நாயன்மார்களின் நினைக்கேற்பவும் அவர்களின் வாழ்வுக் குறிக்கோளுக்கு அமையவும் அவர்கள் அன்பை வெளிப்படுத்திய சந்தர்ப்பங்கள் பலவற்றை நாம் பெரிய புராணத்திற் காணலாம். அடியார்கள் இறைவனுக்கு மட்டுமன்றி இறைவனின் அடியார்க்கும் அடியராய் விளங்கி அன்பு நெறியை வளர்த்துள்ளனர். அடியார்களுக்கு மட்டுமன்றி இடருறும் மக்களுக்காகவும் அவர்கள் அற்புதங்கள் புரிந்து இடரைப் போக்கியருளியதும் அன்பின் வெளிப்பாடுதான், எலும்பைப் பெண்ணாக்கியது. நஞ்சுண்டிறந்த பாலனை எழுப்பியது. முதலை வாய்ப்பட்டிறந்த மைந்தனை மீள வருவித்தது, ஊமைப்பெண்ணைப் பேசவைத்தது யாவும் அன்பின் வெளிப்பாடுகள்தாம். எமது நாளாந்த வாழ்க்கையிலே கோலம் இடுதல் தொடக்கம். சுமைதாங்கி நாட்டல், ஆவுரோஞ்சுகல் அமைத்தல், தண்ணீர்ப் பந்தல் வைத்தல், அன்னதானம் வழங்கல், சமூகசேவை புரிதல் யாவும் அன்பின் வழிப்பட்ட செயல்களேயாம்.

(இ) தன் மீது அன்பு கொண்ட அடியார்கள் அவலமடையுங் காலத்தில் அவர்களுக்காய் மனித உருத்தாங்கி வரவும் இறைவன் தவறுவதில்லை. மனிதனாய் மட்டுமோ? தாயை இழந்து வருந்திய பன்றிக்குட்டிகளுக்காகத் தாய்ப்பன்றியுருத் தாங்கி வந்த இறைவனின் அன்புக்கு ஈடு ஏது? ஆணவமிக்க தேவர்க்கும் காணொணாத இறைவன், அடியார்களின் நெஞ்சங்களிலே கட்டுண்டிருப்பதும் அவனது அன்பிற்கு எடுத்துக்காட்டே.

(ஈ) இறைவன்மீது நாம் கொண்ட அன்பை வெளிப்படுத்த நாம் இடையறாது அவனை வழிபடல் வேண்டும். அவன் எங்கும் நிறைந்துள்ளான் என்ற உண்மையை உணர்ந்து உலகில் உள்ள உயிர்கள் யாவிலும் அன்பு செலுத்தல் வேண்டும். நாம் வாழும் சமூகத்தின் வளர்ச்சிக்காய் எம்மால் இயன்ற பணிகளை ஆற்ற முன்வரல் வேண்டும்.

(உ) இறைவன் பேரருளாளன், அவனுடைய அருளாலேயே நம் ஆணவ முனைப்புக் கெடுகிறது. இவ்வாணவமுனைப்புக் கெடக்கெட நான், எனது என்ற அகப்புறப்பற்றுக்கள் அழிந்து உலகம் அனைத்திலும் அன்பு தோன்றும். அந்த அன்பு எம்மை இறைவனிடம் கொண்டு சேர்க்கும். இறைவனோடு அன்பால் கலந்து அவனே நாமாக என்றும் குறையாத பேரானந்தத்திளைப்பில் நாம் வாழலாம். இத்தகைய வாழ்வு பெற்றோரையே திருமூலர் 'அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே' என உறுதியாகக் கூறுகின்றார்.

23. (அ) பதி, பசு, பாசம் என்பனவே அநாதியான முப்பொருள்கள் என்று சைவசித்தாந்தம் கூறுகின்றது. இவற்றுள்ளே பதி, அறிவே வடிவமான சத்துப்பொருள். ஆணவமாகிய பாசம் அறிவேயில்லாத சடமாதலால் அசத்துப் பொருள். பசுவாகிய ஆன்மா தானாக எவற்றையும் அறியாது. அறிவிக்க அறிவதும் சார்ந்ததன்வண்ணம் ஆவதும் அதன் இயல்புகள். எனவே அது சதசத்து.

(ஆ) 'உள்ளது என்றும் அழியாது, இல்லாத பொருள் என்றும் தோன்றாது' என்பது சைவ சித்தாந்தம் கொண்ட முடிவு, இம் முடிவு 'சற்காரிய வாதம்' எனப்படும். இந்த வாதத்தின்

அடிப்படையில் பதி, பசு, பாசம் என்பவை எப்பொழுதும் உள்ள பொருள்கள். இடையில் தோற்றியவையல்ல, தோன்றுதவை. எனவே அவை என்றைக்கும் அழிவதில்லை. எனவே இவை தோற்றமோ முடிவோ இல்லாத அநாதி முப்பொருள்களாகும்.

(இ) பதி பேரருளுடையது. இயல்பாகவே பாசத்தினின்றும் நீங்கியது. பாசத்தாலே கட்டுண்டு தன்னிச்சை தற்செயலின்றி எப்பொழுதும் வருந்திக்கொண்டிருக்கும் ஆன்மாவை அத்துயரினின்றும் விடுவிக்கப் பேரருள் முற்படுகின்றது. அப்பேரருளே ஆன்மாவின் அறியாமை நலிவுற்ற நிலையில் இறையிடம் வழிகாட்டிவிட ஆன்மா இறைவனை முற்றுகச் சரணாகதி அடைகின்றது. ஆகவே பேரருளே இறைவன் ஆன்மாவைத் தன்னோடு சேர்த்தருளக் காரணமாகும்.

(ஈ) ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்றும் பாசத்தினுள் அடங்கும். இவற்றுள் ஆணவமே அநாதிதொட்டு ஆன்மாவைப் பிடித்து அதை அணுத் தன்மை உடையதாயாக்குகின்றது. ஆணவத்திலிருந்து நல்வினை, தீவினையாகிய கன்மங்களும் கன்மங்கள் செய்கையில் நான், எனது என்ற மயக்க உணர்வாகிய மாயையும் தோன்றுகின்றன.

(உ) ஆணவமே மூலமலம். ஆன்மா, மாயைப் பிடிப்பினின்றும் நீங்கவும், கன்மங்கள் பிறவிக்குக் காரணமானவை என உணர்ந்து அவற்றை ஒப்பக் காணவும் வாய்ப்புண்டு. ஆணவமோ அநாதியாகவே ஆன்மாவில் நின்று இறுதிவரை நீங்காத ஒன்றாய் உள்ளது. அதன் முனைப்பைக் கெடுக்கலாமேயன்றி அதை முற்றாக ஒழித்தல் இயலாது. அன்றியும் ஆணவம் ஆரம்பகட்டத்தில் ஆன்மாவைப் பிடித்திருப்பதை ஆன்மா உணராத அளவுக்கு அதை மூடுகின்றது. இருளை அறிந்தால் இருளிலிருந்து விலகலாம். ஆணவமாகிய இருளோ தன்னையும் காட்டாத தன்மையினால் நெடுங்காலத்துக்கு ஆன்மா உண்மையை உணராது வருந்தநேர்கின்றது. இக்காரணங்களாலேயே ஆணவமானது கன்மம், மாயை ஆகியவற்றிலும் கொடுமை பொருந்தியதாகும்.

௩௬. (அ) பண்டைக் காலந்தொட்டு வேதங்கள், ஆகமங்கள், திருமுறைகள் முதலியவற்றிலெல்லாம் சித்தாந்த உண்மைகள் செறிந்து கிடந்தன. அவ்வுண்மைகளை ஒழுங்கு படுத்தித் திட்ப நுட்பமாய்த் தருக்க முறைமைக்கு ஒத்தவாறு விளக்கி அதே சமயத்தில் சுருக்கமாகவும் செறிவாகவும் செய்யப்பட்ட நூலே சிவஞானபோதம். இவ்வகையிலே இது தனித்தன்மை வாய்ந்ததாக விளங்குகின்றது.

(ஆ) சிவஞானபோதம் பன்னிரண்டு சூத்திரங்கள் கொண்டது. இப்பன்னிரண்டு சூத்திரங்களும் தனித்தனி மும்மூன்று சூத்திரங்கள் கொண்ட நான்கு இயல்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முதலாவது இயல் பிரமாண இயல். இவ்வியலிலே பதி, பசு, பாச இலக்கணங்கள் கூறப்படுகின்றன. இரண்டாவது இயல் இலக்கண இயல். இதில் முப்பொருள்களின் பொது இயல்பும், சிறப்பியல்பும் விரித்துக் கூறப்படும். மூன்றாவது இயல் சாதன இயல் எனப்படும். இதன்கண் உயிர்கள் இறைவனை அடையும் வழிவகைகள் விளக்கப்படுகின்றன. நான்காவது இயல் பயன் இயல். முற்கூறிய வழிவகைகளைக் கையாள்வோர் அடையும் பயன் பற்றிய விளக்கம் இதில் உண்டு. முன்னிரு இயல்களும் பொதுவியல் எனவும் பின்னிரு இயல்களும் சிறப்பியல் என்றும் கூறப்படும்.

(இ) ஆன்மாக்கள் வெறும் தோற்றமே என்றும் அவை உள்ள பொருள்கள் அல்ல என்றும் உள்ள பொருள் ஒன்றே என்றும் அதுவே பிரமம் என்றும் ஏகான்மவாதம் கூறுகிறது. ஆன்மா வெறும் தோற்றம் என்பதைத் தருக்க ரீதியாக நிரூபிக்க முடியாது என்பது சைவசித்தாந்திகள் கொண்ட முடிவு. அன்றியும் ஏகான்மவாதம் மாயைக்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்து மாயையால் பரம்பொருளுக்கே தாழ்வு ஏற்படுவதுபோலப் பேசுவதாகவும் சைவசித்தாந்திகள் கொள்கின்றனர். இவர்களின் பிரதிநிதிகளாகவே மாணிக்கவாசக சுவாமிகளும் மெய்கண்ட சிவாசாரியாரும் விளங்குகின்றனர். இவர்களில் மாணிக்கவாசக சுவாமிகள் ஏகான்மவாதத்தை 'மிண்டிய மாயாவாதம் என்னும் ஒண்டிறற் பாம்பு' என்று கண்டிப்பதோடு அமைவர். மெய்கண்டாரோ ஏகான்மவாதத்தில் தாம் கண்ட குறைகளை எடுத்துக் காட்டி அதனைக் கண்டிப்பதோடு அநாதியான முப்பொருளுண்மையையும் நிறுவுவர்.

(ஈ) ஆன்மாவின் நிலை, எப்பொழுதுமே சார்ந்ததன் வண்ணம் திகழ்வதே. ஏனெனில் அதற்குத் தனக்கெனச் சொந்த அறிவு இல்லை, 'இருளில் இருக்கும்போது இருள் மயமாகவும்

ஒளியில் இருக்கும்பொழுது ஒளிமயமாகவும் படிகக்கல், கண் போன்றே ஆன்மா உள்ளது. எனவே ஆன்மாவுக்கு இறைவனுடன் கலந்த நிலையிலும் தலைமைத் தன்மை இல்லை. தலைவன் ஒருவனே. அவனே சிவபெருமான். எனவே தன்னிலைக்கு ஏற்றி வைக்கும் இறைவனை, ஆன்மாவின் மலபந்தம் அறுவிக்கும் பெருமானை மறத்தல் நன்றிகொன்ற பாவமாகும். இதனையே சிவஞானபோதம் தெளிவாகவும் முடிவாகவும் கூறுகின்றது.

(உ) மயக்கமில்லாத தூயஅன்பை இறைவனிலே செலுத்தும் அடியார்களையும் ஆலயங்களையும் அரனாகவே நினைத்து வழிபடுமாறு மெய்கண்டார் தமது சிவஞானபோதத்தின் பன்னிரண்டாவது சூத்திரத்திலே குறித்தருள்வர். சிவனடியார் 'கூடும் அன்பினில் (இறைவனைக்) கும்பிடலேயன்றி, வீடும் வேண்டா விறலின் விளங்கினர்'. அவர்களுக்கு எளியனாகிய இறைவன் அவருள்ளே உறைவான். எனவே அவர்களை வணங்குதல் என்பது அவர்களில் வியாபித்துள்ள இறைவனை வணங்குதற்குச் சமமாகும். ஆலயத்திலே ஆன்மாவுக்கு அருள்புரிதற்பொருட்டு இறைவனை மந்திரம், தந்திரம், பாவனை, பிரதிஷ்டை ஆகியவற்றால் சிவாசாரியார்கள் எழுந்தருளப் பண்ணியுள்ளனர். திருவுருவில் இறைவனே இருந்தருளுகின்றார் என்ற உண்மையை உணர்ந்து ஆலயங்கள் இறைவனின் வாழிடங்கள் என்பதில் துணிவு கொண்டு வணங்குதல் வேண்டும். இதனை வற்புறுத்தவே "மாலற நேயம் மலிந்தவர் வேடமும், ஆலயந்தானும் அரனெனத் தொழுமே" என மெய்கண்டார் திருவாய் மலர்ந்தருளினர்.

25. (அ) சிவஞானசித்தியாரை அருளிச் செய்தவர், அருணந்திசிவாசாரியார். திருவருட்பயனை அருளியவர் உமாபதி சிவாசாரியார். வினைகளினின்றும் நீங்கிய அறிவாளரான மெய்கண்டதேவர் செய்த சிவஞானபோதம் முதல் நூல். அக்கருத்தினைத் தாம் விளங்கியவாறு விரித்து வேண்டிய இடங்களிலே தமது விளக்கத்தையும் கூறிச் செய்தருளப்பட்டதே சிவஞானசித்தியார். எனவே சிவஞானபோதத்திற்குச் சிவஞானசித்தியார் வழி நூலாகும். சிவஞானபோதம் சிவஞான சித்தியார் ஆகிய இரண்டு நூல்களதும் கருத்துக்களைச் சார்ந்து நின்று முன்னையோர் கருத்தினை எளிமையாகவும், தெளிவாகவும் விளக்க எழுந்தநூலே திருவருட்பயன். எனவே அது சார்பு நூலாகும்.

(ஆ) சிவஞான சித்தியாரின் பரபக்கம் சைவசித்தாந்தத்திற்குப் புறமாயுள்ள சமயங்கள்பற்றி எடுத்துக்கொண்டு அவற்றின் ஒவ்வாக் கருத்துக்களை மறுத்துரைத்து உண்மை எது என நிலை நாட்டும்பகுதி சுபக்கம் என்பது சைவசித்தாந்தக் கோட்பாடுகள், தத்துவங்கள், அடிப்படைகளை விரிவாகத் தருக்கவியல் கடவாது ஆராய்ந்து எடுத்துரைக்கும் பகுதி.

(இ) இறைவன் உலகெலாமாகியும் வேறாகியும் உடனாகியும் ஞானப்பிழம்பாய் நின்றருள்வன். அளவுள் அடங்காத பல உயிர்களும் அவ்வவற்றின் வினையைத் துய்ப்பதற்கு அவற்றை வழிப்படுத்துவோனும் செலுத்துவோனும் அவனே. எனினும் அவன் இயல்பாகவே பாசத்தினின்றும் நீங்கியவனாதலின் உயிர்கள் எய்தும் துன்ப இன்பங்கள் அவனை என்றும் பாதிக்கமாட்டா. அவன் அமலன்; மலமற்றவன். எனினும் சகல புவனங்களிலும் சகல உயிர்களிலும் அவன் நீங்காது றைவன்" என்பது சிவஞானசித்தியார் இறைவனின் இயல்பினைக் கூறுவதில் ஒரு சிறுபகுதியாகும்.

(ஈ) ஆணவமலம் இருளினும் கொடிது. இருள் தன்னையாவது காட்டுவதால் இருளைத் தவிர்க்க ஒருவன் முயலலாம் ஆனால் ஆணவமோ தன்னையும் காட்டாது, பிறபொருளையும் காட்டாமல் நிற்கிறது. ஆன்மா இதனால் ஆணவத்தின் வலிகெடுக்க முடியாது நெடுங்காலம் துன்பப்பட நேர்கின்றது. ஆணவம் அநாதியானது: அது ஆன்மாவை இடையில் வந்து சேர்ந்ததாயின் அவ்வாறு சேர எவ்வித காரணமும் இல்லை. காரணமில்லையாகவே அது அநாதியாகவே உயிரைப் பற்றி நிற்கின்றது என்பதே உண்மை. இடையில் அது ஆன்மாவைச் சேர்ந்தால் முத்தி நிலையிலும் வந்து சேரலாம். அந்நிலையில் இது ஆன்மாவைப் பற்ற முடியாது வலி கெட்டு நிற்பதால் ஆணவம் அநாதி என்பது மேலும் உறுதியாகின்றது. இவ்வாணவத்தை இருள் என்ற பெண்ணுக்குத் திருவருட் பயன் வருணிக்கும். "பலவாகிய ஆன்மாக்களையும் சேர்ந்து நின்றும் ஓரான்மாவிற்கும் தன்னைப் புலப்படுத்தாத கற்பு நெறி இந்த இருட் பாவைக்கு உண்டு" என்பர் திருவருட்பயனாசிரியர்.

(உ) சார்ந்ததன் வண்ணமாகிய ஆன்மா இறைவனைச் சாரத் திருவருளைப்பற்றி நிற்றல் வேண்டும். திருவருள் வழிகாட்டும் வழித்துணையாய் நின்று ஆன்மாவை இறைவனிடம் செலுத்தும். ஆனால் பாற்கடலிற் கிடக்கும் மீன்களைப் போலவும், பாற்குடத்தின் மீதிருக்கும் பூனை போலவும் ஆன்மாக்கள் திருவருளாகிய பாலினை அருந்தாது உலக பந்த பாசங்களாகிய பூச்சி புழுக்களை நாடி வருந்துகின்றன. இந்நிலை நிச்சயமாக நீங்கல் வேண்டும். திருவருளை நாடி அடைந்துவிட்டால் இறைவனை அடைந்துவிட்டோம் என்று நாம் இன்புறல் இயலாது. ஏனெனில் இரு பெண்கள் சேர்ந்து இல்வாழ்க்கை இன்பத்தை அநுபவிக்க இயலாது. அதுபோலவே ஆன்மாவும் திருவருளாகிய சத்தியும் சேர்வதால் முத்தியின்பம் கிட்டாது. திருவருளைப் பற்றுக் கோடாகக் கொடுண் அதன் உதவியோடு இறைவன் பாதங்களை அடைதலே தக்கது. திருவருளே குருவடிவாய் வந்து ஞானத்தைப் போதிக்கின்றது.

26. (அ) சைவநாற்பாதங்கள் சிவபெருமானை அடைவதற்கான வழிகளைப் படிமுறைக் கிரமமாக அமைத்து அவற்றின் வழியில் ஒழுக எமக்குஉதவுகின்றன. இவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என நான்காகும். இவை இறைவனை அடைய உதவும் கருவிகள் என்பதால் இவற்றைச் சைவசாதனங்கள் என்கிறோம்.

(ஆ) அடிமைகள் தம் எசமானருக்குத் தொண்டு புரிந்து அவர்கள் இட்ட கட்டளையை நிறைவேற்று பவராவர், ஆன்மாக்களாகிய எமக்கெல்லாம் எசமானர் சிவபெருமான், அவர் எழுந்தருளியிருக்கும் இடம் கோயில். எனவே கோயிலில் செய்யப்படும் தொண்டுகள் தாசமார்க்கம் எனப்படுகின்றன. இறைவனின் திருக்கோயிலில் திருவலகிடுதல், திருமெழுக்கிடுதல், பூக்கொய்து மாலைபுனைந்து சாத்துதல், தோத்திரம் பாடுதல், திருநந்தவனம் சமைத்தல், சிவனடியாரைச் சிவனெனவே கருதி வழிபடல், அவர்களின் கருத்துப்படி பணிவிடைகள் செய்தல் முதலியன சரியை மார்க்கத்தினர் செய்ய வேண்டிய தொண்டுகளாகும். சரியைத்தொண்டு, புரிவோருக்குக்கிடைக்கும் முத்தி சாலோகமாகும்.

(இ) கிரியை வழிக்குச் சற்புத்திரமார்க்கம் என்பதும் பெயர். சிவபெருமானைத் தந்தையாகவும் தன்னைச் சற்புத்திரனாகவும் கருதி ஒழுகுவதால் இதற்கு இப்பெயர் வழங்கலாயிற்று. ஐம்பொறிகளையும் இறைவனுக்கு ஒப்புவித்து வழிபாடாற்றுதலே கிரியையாகும். மலர் மாலை சூட்டி, அபிடேகம் செய்து திரு அமுது நைவேதித்து, பூதசுத்தி முதலாகிய சுத்திகள் செய்து பூசை, கிரியை முதலிய தொழில்களாலே இறைவனைக் கிரியாபாதத்தினர் வழிபடுவர். இவற்றோடு அருச்சனை செய்தல், பாமாலைசூட்டி வழிபடல், அக்கினிகாரியம் செய்தல் ஆகியனவும் கிரியை வழிபாட்டுள் அடங்கும். கிரியாவான்களுக்குக் கிடைக்கும் முத்தி சாமீப முத்தியாகும்.

(ஈ) யோகமார்க்கத்தினைக் கடைப் பிடிக்கும் சாதகன் தன் மனத்தை இறைவனுக்கு அர்ப்பணிப்பவனாவான். புறத்தொழிலால் செய்யப்படும் கிரியைகள் யாவும் யோகியால் மனத்தளவில் அகக்கிரியைகளாக நிகழ்த்தப்படுகின்றன. 'சுவாசத்தை நிலைநிறுத்தல். மனத்தைப் பொறிவழிகளிற் செல்லாது கட்டுப்படுத்தல், உடம்பினுள்ளே மூலாதாரம் மணிபூரகம் முதலாயுள்ள ஆறு ஆதாரங்களையும் தரிசித்தல், உயிரை அவ்வாதாரங்களுக்கு மேலாகச் செலுத்துதல், தலையினுள்ளே சந்திரமண்டலத்திலிருந்து ஒழுகும் அமுதமழையை நிரப்புதல், நிலைக்கவைத்தல், சமாதிகூடி அறிவுவடிவாய் இறைவனைக் காணல் என்பன யோகப் பயிற்சி முறைகளாகும். இந்நெறியிலே ஒழுகுபவர்கள் சிவனது திருவுருவையே அடைதலாகிய சாரூபமுத்தியினை அடைவர். இதனைத் தோழமை நெறி என்னும் சகமார்க்கம் என்றபெயரால் வழங்குவர். ஞானபாதத்தில் ஞானி தன்னையே இறைவனுக்கு அர்ப்பணிக்கின்றான். சிவபெருமானை அருவ, உருவ, அருவுருவத் திருமேனிகளைக் கடந்த சச்சிதானந்தப் பிழம்பாகத் தரிசிக்கும் பேறு ஞானமார்க்கத்தினுக்குத் கைகூடும் ஞானநூல்களையும் இறைவன் பெருமைகளையும் கேட்டல், சிந்தித்தல், தெளி கைகூடும், ஞானநூல்களையும் இறைவன் பெருமைகளையும் கேட்டல் சிந்தித்தல், தெளிதல், நிட்டை கூடல் ஆகிய நான்கு அங்கங்கள் உள்ளன. தன்னை மறந்து தன்நாமம் கெட்டுத் தலைவனோடு இரண்டறக் கலத்தலாகிய அதி உச்ச இன்பநிலை தருவதாகிய ஞான பாதத்திற்குச் சன்மார்க்கம் என்பதும் இதன் பெயர். ஞானமார்க்கத்தினர் அடையும் முத்தி சாயுச்சிய முத்தியாகும்.

க. பொ. த. (சாதாரணதரம்)

சைவசமயம் I & II

# மாதிரி வினாத்தாள்

1. 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் நான்கு விடைகள் தரப்பட்டுள்ளன அவற்றிலிருந்து மிகப் பொருத்தமான விடையினைத் தெரிந்து அதன் எதிரிலுள்ள அடைப்புக் குறிக்குள் X என அடையாளமிடுக.
2. இரண்டாவது பகுதியிலுள்ள எட்டு வினாக்களுள் ஐந்துக்குச் சுருக்கமாகவும் பொருத்தமாகவும் விடை தருக.
3. ஒவ்வொரு வினாவிலுமுள்ள உபவினாக்களில் அதிகரித்திருக்கும் தலைமைப் பொருளைக் கருத்திற் கொண்டு முழுமையான விடை தருக.

## பகுதி — I

நேரம்: 1 மணி

1. சைவசமயத்தின் தொன்மையினை எடுத்துக் காட்டிய தொல் பொருள்கள்:
   1. தமிழ் நாட்டில் கண்டெடுத்த ஈமத் தாழிகள் ( )
   2. இலங்கையில் கண்டெடுக்கப்பட்ட புராதன மனிதனின் எலும்புக் கூடுகள் ( )
   3. சிந்துவெளியில் கண்டெடுத்த முத்திரைகள், உருவங்கள் ( )
   4. பொலநறுவையிலுள்ள சிலமுற்ற சிவாலயங்கள். ( )

2. வேதங்களில் பழமையானது எனக் கொள்ளப்படுவது.
   1. இருக்குவேதம் ( )
   2. யசுர்வேதம் ( )
   3. சாமவேதம் ( )
   4. அதர்வ வேதம். ( )

3. 'உள்ள பொருள் ஒன்றே, அதனை அறிவாளர் பல பெயர்களால் அழைப்பர்' என்ற மகாவாக்கியம்.
   1. இருக்கு வேதத்தில் காணப்படுகிறது ( )
   2. யசுர் வேதத்தில் காணப்படுகிறது ( )
   3. சாம வேதத்தில் காணப்படுகிறது ( )
   4. அதர்வ வேதத்தில் காணப்படுகிறது. ( )

4. கோயிலமைப்புப் பற்றியும் விக்கிரகப் பிரதிட்டை பற்றியும் கூறும் நூல்கள்.
   1. சுருதிகள் ( )
   2. ஆகமங்கள் ( )
   3. புராணங்கள் ( )
   4. இதிகாசங்கள். ( )

5. தமிழ் வேதம் எனப்படுவது.
   1. திருமந்திரம் ( )
   2. திருவாசகம் ( )
   3. தேவாரம் ( )
   4. திருவிசைப்பா. ( )

6. காரைக்காலம்மையாரின் வரலாற்றினைக் கூறும் புராணம், ( )
1. திருத்தொண்டர் புராணம் ( )
2. திருவிளையாடற் புராணம் ( )
3. கந்தபுராணம் ( )
4. திருவாதவூரடிகள் புராணம். ( )

7. சங்கநூல்களிலே சிவபெருமானுக்கு வழங்கும் ஒரு திருநாமம்,
1. பிறவா யாக்கைப் பெரியோன் ( )
2. நீலமேனி வாலிழை பாகத்து ஒருவன் ( )
3. ஆதியும் அந்தமுமில்லா அரும்பெருஞ் சோதி ( )
4. உண்ணாமுலை உமையாளொடும் உடனாகிய ஒருவன். ( )

8. ஐந்தொழில்களையும் குறியீடுகளாகக்காட்டும் சிவபெருமானின் மூர்த்தம்,
1. தட்சிணாமூர்த்தி ( )
2. சோமாஸ்கந்தர் ( )
3. நடராசர் ( )
4. சந்திரசேகரர். ( )

9. திருமுறைகளிலே காலத்தால் முற்பட்டவை,
1. திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரின் தேவாரங்கள் ( )
2. திருநாவுக்கரசு நாயனாரின் தேவாரங்கள் ( )
3. காரைக்காலம்மையாரின் பிரபந்தங்கள் ( )
4. சுந்தரமூர்த்தி நாயனாரின் தேவாரங்கள். ( )

10. சைவசித்தாந்தம் என்ற சொற்றொடரின் பொருள்,
1. சைவத்தின் சித்தாகிய சிவன் பற்றிய முடிபு ( )
2. சைவச்சித்தர்கள் கண்ட முடிபு ( )
3. சைவ சித்துக்களின் முடிந்த முடிபு ( )
4. சைவசமய உண்மைகளின் முடிந்த முடிபு. ( )

11. ஆன்மா 'சதசத்து' என அழைக்கப்படுவதன் காரணம்,
1. ஆன்மா அறிவும் அறிவற்றதுமான இயல்புடைமையால் ( )
2. ஆன்மாவிற்கு ஆணவ இயல்பும் இறைஇயல்பும் உள்ளமையால் ( )
3. சத்தாகிய சிவத்துடன் சேர்கையில் சத்தாகவும் அசத்தாகிய ஆணவத்துடன் சேர்கையில் ஆணவ இயல்பும் பெறுவதால் ( )
4. சத்துடன் சேரினும் அசத்தாக இருப்பதால். ( )

12. ஆணவம் என்று அதற்குப் பெயர்வரக் காரணம்,
1. ஆண்மை பொருந்தியிருத்தல் ( )
2. ஆன்மாவை அணுத்தன்மையுடையதாக்கல் ( )
3. ஆண்மகனை அவமுடையவனாக்கல் ( )
4. ஆன்மாவைப்பற்றி ஆண்டுவரல். ( )

13. ஆன்மா இறைவனுடன் கலத்தல் என்பதன் பொருள்,
1. இறைவனே ஆகிவிடல் ( )
2. இறைவனின் சந்நிதியில் இருத்தல் ( )

3. இறைவனுடன் ஒன்றாகாமலும் வேறாகாமலும் அவனோடு இணைந்திருத்தல் ( )
4. இறைவனின் இறைதன்மையை அடைதல். ( )

14. 'அந்தர்யாகம்' என்பதன் பொருள்,
1. புறவழிபாட்டு முறைமைகள் ( )
2. புற, அக வழிபாட்டு முறைமைகள் ( )
3. அக வழிபாட்டு முறைமைகள். ( )
4. பொதுவான வழிபாட்டு முறைமைகள். ( )

15. சரியைத் தொண்டுகள் எனக் கூறப்படுவன,
1. காயமே கோயிலாக இறைவனை மனத்தால் வழிபடல் ( )
2. கோயில் கட்டிப் பூசைகள் செய்தல் ( )
3. தலங்கள் தோறும் யாத்திரை செய்து வழிபடல் ( )
4. கோயிற்பூசை காரியங்களில் உதவி செய்தல், பெரியோருக்குச் சேவை செய்தல், சமூகசேவைகள். ( )

16. சற்புத்திர மார்க்கத்திற்குச் சமமான பாதம்,
1. சரியாபாதம் ( )
2. கிரியாபாதம் ( )
3. யோகபாதம் ( )
4. ஞானபாதம் ( )

17. ஆன்மாவிற்கு வினைசெய்தற்காகிய தநு, கரண, புவன போகங்களை வழங்குவது,
1. சுத்தமாயை ( )
2. அசுத்தமாயை ( )
3. பிரகிருதிமாயை ( )
4. திருவருட்சத்தி ( )

18. சைவசித்தாந்தம் குறிப்பிடும் மூவகை வழிபாடுகள்,
1. மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகியவற்றின் வழிபாடு ( )
2. கோயில், மனம், குரு ஆகிய மூவகை வழிபாடு ( )
3. குரு, லிங்கம், சங்கமம் (அடியார்) ஆகியவற்றின் வழிபாடு
4. தெய்வவழிபாடு, மானிட வழிபாடு, இயற்கை வழிபாடு. ( )

19. 'பண்டு நால்வருக் கறமுரைத்தருளி' எனத்திருக்கேதீச்சரப் பதிகத்திற் குறிப்பிடப்படும் நால்வர்,
1. அனந்ததேவர், ஸ்ரீகண்டருத்திரர், திருநந்திதேவர், சனற்குமாரமுனிவர் ( )
2. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்திநாயனார் மாணிக்கவாசக சுவாமிகள் ( )
3. சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர்
4. மெய்கண்டார், அருணந்தி சிவாசாரியார், மறைஞானசம்பந்தர், உமாபதிசிவாசாரியார்; ( ) ( )

20. 'தமிழ் உபநிடதம்' எனக் கூறப்படும் நூல்,
1. திருமந்திரம் ( )
2. தேவாரம் ( )
3. திருவாசகம் ( )
4. திருக்கோவையார் ( )

21. 'சிவபூமி' என்று ஈழத்தைக் கூறியவர்,
1. திருநாவுக்கரசு நாயனர் ( )
2. அருணகிரிநாதர் ( )
3. சுந்தரமூர்த்திநாயனர் ( )
4. திருமூலர். ( )

22. நவராத்திரி விழாவிற் சங்குபூசை நடைபெறும் ஈழத்துச் சிவாலயம்,
1. திருக்கோணேச்சரம் ( )
2. திருக்கேதீச்சரம் ( )
3. முன்னேச்சரம் ( )
4. நகுலேச்சரம் ( )

23. மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள ஒரேஒரு சிவாலயம்,
1. திருக்கோணேச்சரம் ( )
2. கொக்கட்டிச் சோலைத் தான்தோன்றியீச்சரம் ( )
3. தம்பலகாமம் ஆதிகோணேச்சரம் ( )
4. திருக்கரைசையாலயம். ( )

24. 'ஸ்ரீ சக்கர பூசை'க்கு உரித்தான தெய்வம்,
1. முருகக் கடவுள் ( )
2. உமாதேவியார் ( )
3. சிவபெருமான் ( )
4. விநாயகக்கடவுள். ( )

25. சிவபெருமான் தேவர்களைக் காக்க நஞ்சினையுண்டதன் நினைவாக அநுட்டிக்கப்படும் விரதம்,
1. சிவராத்திரி ( )
2. பிரதோஷம் ( )
3. திருவாதிரை ( )
4. ஆவணிச் சதுர்த்தி. ( )

26. 'உபவாசம்' என்பதன் பொருள்,
1. பட்டினியிருத்தல் ( )
2. இறைவனின் ஆலய சேவைக்காக ஆலயத்திலேயே வசித்தல் ( )
3. இறைவனின் அண்மையிலிருந்து வழிபடல் ( )
4. நாள்முழுவதும் உணவுண்ணாது விரதமிருத்தல். ( )

27. சின்னக்கதிர்காமம் என அழைக்கப்படும் திருத்தலம்,
1. தொண்டைமானாற்றிலுள்ள செல்வச் சந்நிதி ( )
2. கதிர்காமத்திற்குச் சிறிது தொலைவிலுள்ள செல்லக்கதிர்காமம் ( )
3. மட்டக்களப்பு மாமண்டூர் முருகன் ஆலயம் ( )
4. திருக்கோயிலிலுள்ள சித்திர வேலாயுதர் கோயில் ( )

28. கிராமங்களின் காத்தற் கடவுளாகக் கொள்ளப்படுபவர்,
1. வீரபத்திரக் கடவுள் ( )
2. முனியப்பர் ( )
3. வைரவக் கடவுள் ( )
4. முத்துமாரியம்மன். ( )

29. சூரியனார் கோயில் கட்டப்பட்ட காலம்.

1. பத்தொன்பதாம் நூற்றாண்டு ( )
2. பன்னிரண்டாம் நூற்றாண்டு ( )
3. எட்டாம் நூற்றாண்டு ( )
4. பத்தாம் நூற்றாண்டு ( )

30. ஆறுமுகனின் ஆறுமுகங்களும் குறிப்பன,

1. பேராற்றல், பேரறிவு, பெருந்திறன், பெருஞ்சிறப்பு, பெரும்பற்று, பேரருள் ( )
2. அன்பு, அருள், இன்பம், வீரம், ஞானம், அழகு ( )
3. முற்றுணர்வு, வரம்பிலின்பம், இயற்கையுணர்வு, தன்வயமுடைமை. பேரருள், வரம்பிலாற்றல் ( )
4. இளமை, அழகு, மணமுடைமை, தெய்விகம், சுத்தம், சுகம். ( )

31. வாகனத் திருவிழாக்கள் குறிக்கும் தத்துவம்,

1. இறைவனின் படைத்தற்றொழில் ( )
2. காத்தற்றொழில் ( )
3. அழித்தற்றொழில் ( )
4. மறைத்தற்றொழில். ( )

32. நன்றிமறவாமைப் பண்பினைப் புலப்படுத்தும் எமது சமயப் பண்டிகை,

1. தீபாவளி ( )
2. புதுவருடப்பிறப்பு ( )
3. தைப்பொங்கல் ( )
4. நவராத்திரி ( )

33. 'எத்துணைக்காலம் திருப்பித் திருப்பிப் படிக்கினும் எட்டுணையும் தெவிட்டாத அதிமதுரத்திவ்விய வாக்கு' என நாவலர் குறிப்பது,

1. திருவிளையாடற்புராணம் ( )
2. கந்தபுராணம் ( )
3. திருத்தொண்டர் புராணம் ( )
4. திருவாதவூரடிகள் புராணம். ( )

34. 'பாவை நோன்பு' நோற்கப்படுங்காலம்.

1. மார்கழி மாதம் ( )
2. தை மாதம் ( )
3. மாசிமாதம் ( )
4. பங்குனி மாதம். ( )

35. அவனுடைய வடிவெல்லாம் நம்பக்கல் அன்பு' என்று சிவபெருமானால் பாராட்டப்பட்ட நாயனார்,

1. சண்டேசுர நாயனார் ( )
2. சாக்கிய நாயனார் ( )
3. கண்ணப்ப நாயனார் ( )
4. இயற்பகை நாயனார். ( )

36. 'எப்பவோ முடிந்த காரியம்' என்ற மகாவாக்கியத்தை அருளிய ஈழத்து ஞானி,

1. குழந்தைவேற் சுவாமிகள் ( )
2. செல்லப்பாச் சுவாமிகள் ( )
3. அருளம்பலச் சுவாமிகள் ( )
4. யோகர் சுவாமிகள் ( )

37. 'கோலமா மஞ்ஞை தன்னிற் குலவிய குமரனின்' திருப்பெருவடிவைக் கண்டு வியந்த பின்னரும் சூரபன்மன் போரிட நினைந்த காரணம்,

1. அவனின் வீர உணர்வு ( )
2. மான உணர்வு ( )
3. தோல்வியை ஏற்காத பிடிவாத உணர்வு ( )
4. சாவை அரவணைக்கும் விருப்ப உணர்வு. ( )

38. சிவஞான போதத்தின் வழிநூல்,

1. சிவஞானசித்தியார் ( )
2. திருவருட்பயன் ( )
3. உண்மை விளக்கம் ( )
4. சிவப்பிரகாசம். ( )

39. 'உள்ளது இல்லதாகாது, இல்லது உள்ளதாகாது' என்னும் சைவசித்தாந்த வாதம்,

1. ஏகான்ம வாதம் என அழைக்கப்படும் ( )
2. சற்காரிய வாதம் என அழைக்கப்படும் ( )
3. அத்துவித வாதம் என அழைக்கப்படும் ( )
4. சத்தசித்துவாதம் என அழைக்கப்படும். ( )

40. சைவசித்தாந்தம் 'பரமசிவம்' என்றும் 'சிவம்' என்றும் குறிக்கும் பொருளை வேதாந்தம் அழைக்கும் பெயர்.

1. ஈசுவரன் ( )
2. பிரமம் ( )
3. மகாசிவம் ( )
4. சீவான்மா. ( )

பகுதி II இரண்டு மணி

1. 'எல்லையிலா மறை' எனச் சேக்கிழார் சுவாமிகள் வேதத்தின் பெருமையைச் சிறப்பித்துக் கூறுவர்.

(அ) மறை என வேதங்களைக் கூறுவதேன்? அவற்றைத் தொகுத்த வியாசர் எத்தனையாக வகைப்படுத்தினர்? அவை எவை?

(ஆ) வேதங்களில் கன்ம காண்டப்பிரிவு கூறும் வழிபாட்டுமுறையை விளக்குக.

(இ) 'வேதங்கள் பலதெய்வவழிபாட்டைக் கூறினலும் ஒரேதெய்வக் கோட்பாடும் நிலவியது' என்பதற்கு ஆதாரம் கூறுக.

(ஈ) 'தமிழ் வேதம்' எனவும் 'எழுதும் மறை' எனவும் தேவாரத்தை அழைப்பது பொருந்துமா? விளக்குக.

2. 'வேதம் பொதுநூல், ஆகமம் சிறப்புநூல்' என்பது சைவப்பெரியோர் கொண்டமுடிபு.

(அ) ஆகமம் சிறப்புநூல் என்பதன் காரணம் யாது எனத் தெளிவுபடுத்துக.

(ஆ) சைவ ஆகமங்கள் எத்தனை? அவற்றுள் ஐந்தின் பெயர்களைக் குறிப்பிடுக.

(இ) ஆகமம் கூறும் வழிபாட்டு முறையினைத் தெளிவாக விளக்குக.

(ஈ) கோயில் அமைப்பு, விக்கிரக அமைப்புக்கும் ஆகமங்களுக்கும் உரிய தொடர்பினைத் தெளிவு படுத்துக.

3. எமது வாழ்க்கையோடு கோயில் வழிபாடு பலவகையிலும் பின்னிப்பிணைந்துள்ளது.

(அ) எமது சமய வாழ்க்கையில் கோயில் வழிபாடு பெறும் இடத்தினைத் தெளிவுபடுத்துக.

(ஆ) அறவாழ்க்கைக்கும் அன்பு வாழ்க்கைக்கும் ஆலயங்களின் பங்களிப்பு யாது? விளக்குக.

(இ) கட்டடக்கலை, தொழில்நுட்பக்கலை, இசைக்கலை, நடனக்கலை ஆகியன ஆலயங்களை மையமாகக்கொண்டே வளர்ந்தன என்பதைச் சான்று காட்டி விளக்குக.

(ஈ) ஆலயங்கள் சமூக ஒற்றுமை, ஊர் ஒற்றுமை ஆகியவற்றையும் வளர்க்கும் சாதனங்கள் எனலாமா? எவ்வாறு?

4. 'கருதுவார் கருதும் உருவமாம்' என்பது இறைஇயல்புகளுள் ஒன்றுகத் திருவிசைப்பாவிற் கூறப் படுகிறது.

(அ) இறைவனின் திருவுருவைச் சைவசித்தாந்தம் எத்தனைவகையாகப் பிரித்து விளக்கும்?

(ஆ) இறைவனின் உருவத்திருமேனிகள் எவை? அத்திருமேனிகளை அவர் எடுத்தருள்வதன் நோக்கம் யாது?

(இ) இறைவன் கருதுவார் கருதும் உருவமாய் வந்தருள்வதைத் திருத்தொண்டர் புராணத்தில் வரும் ஒரு கதையால் விளக்குக.

(ஈ) ஆலயங்களில் பிரதிட்டை செய்யப்பட்டுள்ள சிலமூர்த்தங்களுள் மூன்றினை நீர் அறிந்த வாறு விளக்குக.

5. 'அழிவிலாத நம்பெருவடிவங் கோள்வம்' என்பது முருகப்பெருமானின் திருவாக்காகக் கந்த புராணத்திற் காணப்படுவது.

(அ) இச் சொற்றொடரின் பொருளை விளக்குக.

(ஆ) 'நம்பெருவடிவம்' என முருகப்பெருமான் கொண்டருளிய திருப்பெருவடிவ வருணனையைச் சுருக்கமாகத் தருக.

(இ) இந்த வியன் பெருவடிவத்தைத் தரிசித்த சூரபன்மனின் உள்ளத் தெழுந்த சிந்தனைகள் யாவை?

(ஈ) சூரபன்மனின் 'சிறிய நல்லுணர்ச்சி' மறைந்ததும் அவன் கொண்ட முடிவு யாது? இந்தமுடிவிற்கு வர அவனைத் தூண்டியது யாது?

6. 'தேரடியில் தேசிகனைக் கண்டு தெரிசித்தேன்' என்பது யோகர் சுவாமிகளின் திருவாக்கு

(அ) அவர் குறிக்கும் தேசிகள் யார்? அவரின் சிறப்புக்கள் எவை?

(ஆ) அவர்போன்ற ஞானிகளின் போக்குக்கள் எவை? இப்போக்குகளிலிருந்து நீர் அறிவது யாது?

(இ) யோகர் சுவாமிகளின் வாழ்க்கையை நீர் அறிந்தவாறு சுருக்கமாக விளக்குக.

(ஈ) எங்கள் ஞானியரின் பணிகளால் நாம் அடைந்த பயன்கள் யாவை?

7. சைவசித்தாந்தம் முப்பொருள்களின் உண்மையை விளக்குவதாகும்.

(அ) முப்பொருள்களும் எவை? அவை அநாதி என்பதன் காரணம் யாது?

(ஆ) பதியின் இயல்புகளைத் தெளிவு படுத்துக.

(இ) ஆன்மா ஆணவத்தின் பிடிப்பினுல் அடையும் அல்லல்கள் எவை?

(ஈ) ஆணவ முனைப்பினின்று ஆன்மா விடுபடச் சைவ சித்தாந்தங் கூறும் வழிமுறைகளைச் சுருக்கமாகத் தெளிவு படுதுக.

8. (அ) பின்வரும் திருப்பாடல்களுள் இரண்டினைப் பிழையின்றித் திருத்தமாக எழுதுக.

(ஆ) நீர் எழுதியவற்றின் பொருளை உமது வசனநடையில் எழுதுக.

(இ) இவை பாடப்பட்ட சந்தர்ப்பத்தை விளக்குக.

1. 'தாயினும் நல்ல தலைவர் .....   2. 'மாதர்ப்பிறைக் கண்ணியானை'

3. 'முன்னிக் கடலைச் சுருக்கி'   4. 'சீருந்திருவும் பொலிய ......'

5. கையுந் தலைமிசை புனையஞ்சலியென......'

முற்றும்.

## விற்பனையாகின்றன !

1. சைவநெறிப் பயிற்சி — 10 ஆம் ஆண்டு
2. சைவநெறிப் பயிற்சி — 11 ஆம் ,,
3. விஞ்ஞான விளக்கம் — 10 ஆம் ,,
4. விஞ்ஞானம் விளக்குகிறது — 11 ஆம் ,,
5. விஞ்ஞானப் பரிசோதனைகள் — 11 ஆம் ,,
6. Revision Exercises in English Year — 11 G. C. E. (O/L)
7. மீட்டல் கணிதப் பயிற்சி ஆண்டு 11 G. C. E. O/L)
8. இலக்கணத் தெளிவு
9. கட்டுரை மஞ்சரி — 40 கட்டுரைகள்
10. மாணவர் தேர்வுக் கட்டுரைகள்
11. தமிழியற் கட்டுரைகள்-உயர்தர வகுப்புக்குரியது

*பதிப்பாளர் :*

ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை

*235, காங்கேசன்துறை வீதி,*

யாழ்ப்பாணம்.